KALKI 28.2.88 ரூ. 2.

கல்கி



எந்த பட்ஜெட் நல்ல பட்ஜெட்?

—சி.எஸ். விளக்குகிறார்


சுவைமிக்கது
பிசுக்கற்றது
பல முறை பயன்படக்கூடியது
புதிய
சுப்ரீம்
இருமுறை சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான தாவர எண்ணெய்
Supreme
சிறந்தவை அனைத்தும் கொண்ட சிக்கன சமையல் எண்ணெய்
எஸ்.எஸ்.டி ஆயில் மில்ஸ் கம்பெனி (பி) லிட்.,
வில்லேஜ் ரோடு, ஐயப்பன்தாங்கல், சென்னை-56
Artig/SSD/218/87 TAM/A

தில்லி தபால்:

மாநிலம் ஒன்று; தலைநகர் மூன்று!



அப்துல்லா



போலீஸுக்குப் பாராட்டு!

போலீஸைக் குறை கூறும்படி அவர்கள் நடந்து கொள்வதையே பொதுவாக நாம் பார்த்து வருகின்ற நிலையில், ஆச்சர்யம் ஆனால் உண்மை என்று வர்ணிக்கத்தக்க விதமாக, தில்லி போலீஸ் சமுதாய நலனில் அக்கறை கொண்டிருக்கிறது.

சமீபத்தில் தில்லியில் உள்ள சில மாதர் சங்கங்கள், தலைநகரில் உள்ள ஆபாச பானர் விளம்பரங்களை அகற்ற வேண்டும் என்று இயக்கம் நடத்தின. இதற்குப் போலீஸ் துறை ஆதரவளித்ததோடு, சமூக சேவகர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், கலை—பண்பாட்டுக் கழக அங்கத்தினர்கள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் உள்ளடங்கிய ஒரு குழுவை முன்னின்று அமைத்தது. எந்தெந்த சினிமா பானர்கள் ஆபாசமாக உள்ளன என்று நிர்ணயிக்கும் பொறுப்பை இந்தக் குழுவிடம் ஒப்படைத்தது. குழுவின் சிபாரிசுக்கு இணங்க, போலீஸ் குறிப்பிட்ட பானர் விளம்பரங்களை அகற்றியது. சாலையோரங்களில் மட்டுமின்றித் தியேட்டர் வாசல்களிலும் இத்தகைய பானர்கள் நீக்கப்பட்டன.

போலீஸ், இப்போது கல்வித் துறையிலும் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. போலீஸ்காரர்களின் குழந்தைகளுக்கென்று ஒரு பள்ளி தொடங்க உயர் போலீஸ் அதிகாரிகள் ஒரு குழுவாக அமைந்து திட்டம் தீட்டி வருகின்றனர்.

இதையும் தவிர, போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டுப் போனவர்களுக்கு உதவவும் போலீஸ் முன் வந்திருக்கிறது. இதற்கென ஒரு மருத்துவமனை தொடங்கியும் இருக்கிறது. 'நவ ஜோதி' என்று இதற்குப் பெயர்.

தில்லியில் இந்தப் பிரச்னையுடன் போராடுவதற்கென்றே தற்போது ஆறு மருத்துவமனைகள் உள்ளன! உத்தரப் பிரதேசம், ஹரியாணா மாநிலங்களிலிருந்தெல்லாம் இங்கு சிகிச்சைக்கு வருகிறார்கள். குணமான இளைஞர்களுக்கு அவர்கள் ஏற்கெனவே செய்து வந்த வேலை திரும்பத் தரப்பட வேண்டும் என்று போலீஸ் வாதாடுவதுடன், அவர்களுடைய நன்னடத்தைக்குத் தாங்கள் உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறுகின்றனர்!

பெண் குற்றவாளிகள் சுயமாகக் கைத்தொழில் செய்து பிழைக்கக் கற்றுத் தரும் நிலையங்களையும் தில்லி போலீஸ் நடத்துகிறது.

ஒன், டு, த்ரீ!

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் நிரந்தரத் தலைநகரமாக ஸ்ரீநகரை மட்டுமே வைத்துக் கொள்ள முதல்வர் ஃபாரூக் அப்துல்லா முயன்றதும், அதற்கு ஜம்மு மக்கள் பலத்த எதிர்ப்புத் தெரிவித்ததும், அப்துல்லா பின் வாங்கியதும் நினைவிருக்கும்.

இரட்டைத் தலைநகர் யோசனை எப்படி உருவாயிற்று? சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் அப்போதைய காஷ்மீர் மகாராஜாவுக்கு பிரிட்டிஷார் அளித்த யோசனைப்படி அவர் ஜம்முவைக் குளிர்காலத் தலைநகராக்

கினார். இதற்குக் காரணம், பலமான வெண் பனி கொட்டும் போது காஷ்மீர் பள்ளத் தாக்கு, மற்றப் பகுதிகளிலிருந்து தொடர்பு கொள்ள முடியாதபடி பிரிந்து நின்றதாகும். ஆனால் இன்று, தொடர்புச் சாதனங்கள், நவீனமடைந்துவிட்ட நிலையில், அந்த முறையையே நீடிப்பதில் அர்த்தமில்லை என்று அப்துல்லா கருதினார். ஆனால் ஜம்மு மக்கள், தலைநகர் என்ற அந்தஸ்தை விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை. மேலும் காஷ்மீரி முஸ்லிம்களின் மேலாதிக்கம் தங்கள் மீது திணிக்கப்படுவது போல ஜம்மு ஹிந்துக்கள் உணரத் தலைப்பட்டனர். பலத்த எதிர்ப்புக் கிளம்ப, அப்துல்லாவின் யோசனை கைவிடப்பட்டது.

இப்போது, லடாக் பகுதி மக்கள் தங்களுடைய 'லே' நகரமும் மூன்றாவது தலைநகராக வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்! இதில் உடனே அரசியல் புகுந்து கொள்ள, லடாக்கி அரசியல்வாதிகள் பலரது கோரிக்கைக்கு ஜனசங்கத்தின் பாலராஜ் மதோக் தமது முழு ஆதரவைத் தெரிவித்து விட்டார்!

பாகிஸ்தானில் காந்தி!


அட்டன்பரோவின் காந்தி திரைப்பட வீடியோ காஸட்டுகளுக்குப் பாகிஸ்தானில் ஏக கிராக்கி. ஏராள காஸட்டுகள் அந்நாட்டுக்குள் கள்ளக் கடத்தலில் வந்து சேர்கின்றன.

பாக் அரசு, காந்தி படத்தை மக்கள் பார்ப்பதை விரும்பவில்லை. காரணம், படத்தில் காந்தி, நேரு, பட்டேல் போன்றவர்களின் பங்கு பெருமைப்படுத்தப்பட்டதில், ஜின்னாவின் முக்கியத்துவம் குறைந்து போயிருப்பதாக பாக் அரசு கருதுவதுதான். ஜின்னாவையே மையப் புள்ளியாக வைத்து, காந்தி போன்ற ஒரு திரைப்படம் எடுக்குமாறு அயல்நாட்டுச் சினிமா நிறுவனங்களுக்கு பாக் அரசு அழைப்பு விடுத்துப் பார்த்தது. அழைப்பை ஏற்பாரில்லை.

அரசு என்ன நினைத்தாலும், பாக் மக்கள் காந்தி படத்தை ரகசியமாகவாவது பார்க்க விரும்புகின்றனர் என்பதையே காந்தி வீடியோ காஸட்டுகளுக்கு அந்நாட்டில் ஏற்பட்டுள்ள கிராக்கி உணர்த்துகிறது.

— ரவீந்தர் குமார்


பாதையின் நடுவில் பட்டாசுச் சரங்கள்...



சென்ற 14.2.88 அன்று மாலை சுமார் ஆறேகால் மணியளவில் நான் சென்னை செல்லும் பல்லவனில் (88V) வந்து கொண்டிருந்தேன். சமீபத்தில் திறக்கப்பட்ட 'நேரு' சிலை அருகில் வைஜயந்திமாலா பாலியின் ஒரு கூட்டத்திற்காக மக்கள் கூடியிருந்தனர். ஐந்து மெயின் ரோடுகள் சேரும் போக்குவரத்து மிக்க அங்கு கூட்டம் நடத்துவதே தவறு. போதாக்குறைக்கு மிக நீளமான பட்டாசுச் சரத்தைச் சாலை நடுவில் லாட வடிவில் பரத்தி வைத்திருந்தனர். நான் சென்ற பஸ் அந்த வழியாகத் திரும்பும் போது தவறுதலாக அந்தச் சரத்தின் மேல் ஏறிவிட்டது. உடனே தொண்டர்கள் உணர்ச்சியுடன் பஸ்ஸைத் 'தட் தட் தட்' என்று தட்டியும், கூச்சலிட்டும் டிரைவரை ஏச ஆரம்பித்தனர். என்னால் பொறுக்க முடியவில்லை. பஸ்ஸில் இருந்தபடியே அவர்களில் சிலரிடம் ''இப்படி நடுரோட்டில் பட்டாசைப் போட்டதே அபாயம்; இப்படி டிரைவரைக் கோபிப்பதும், பஸ்ஸை அடிப்பதும் என்ன நியாயம்?'' என்றேன். உடனே, ''உனக்கு என்ன தெரியும்? சும்மா வாய் பேசாதே! உன் வேலையைப் பாரு'' என்றார் ஒருவர். யாருமே என்னை ஆதரித்துப் பேசவில்லை. தங்களுக்குச் சம்பந்தமே இல்லாதது போல் வேடிக்கை பார்த்தனர். போலீசும் அதில் சேர்த்தி.

இம்மாதிரி போக்குவரத்திற்குத் தடை உண்டாக்கக் காரணமாக இருக்கும் தலைவர்களை அல்லவா முதலில் தண்டிக்க வேண்டும்! ஜனங்களை நல்வழிப்படுத்த அன்று காந்தியடிகள் பாடுபட்டார். ஆனால் இன்று... நமது தலைவர்கள் மக்களைச் சீர்குலைத்து அதில் பெருமை பேசி வாழ்கிறார்கள்.

சென்னை — 10, ராஜேஸ்வரி நீலகண்டன்.





மக்கள் ஆணையிட்டால்

மூன்னாள் முதல்வர் வசனம் எழுதும் படம் என்றால் அதில் நிச்சயம் அரசியல் இருக்கும். இருக்கிறது! முழுக்க — முழுக்க!

டாக்ஸி டிரைவர் விஜய்காந்த். லாக் அப்புக்கு அடிக்கடி விசிட் செய்கிறார். அரசியல்வாதியை எதிர்க்கிறார். வக்கீல் நண்பர் நிழல்கள் ரவி. டாக்ஸி டிரைவரை மீட்டு வருகிறார்.

வக்கீல் நண்பரின் மனைவி ரேகா. கணவரின் மரணத்திற்கு(!)ப் பின் விஜய்காந்திற்கு உதவியாக... அரைக்கப்பட்டு, அரைக்கப்பட்டுப் புளித்துப் போன மாவு தான் கதை.

செந்தாமரைதான் அரசியல்வாதி. கொஞ்சம் வயதான வில்லன் ரோல் என்றால் செந்தாமரைதான் சரியான ஆசாமி என்று முடிவு கட்டி விடுகிறார்கள்... அவரும் படத்திற்குப் படம் ஏதாவது நினைவில் நிற்கிற மாதிரி பண்ணி விடுகிறார். பதக்கத்தைப் பற்களுக்கு இடையில் வைத்துக் கழுத்தறுப்புச் சிரிப்புடன் கடிப்பதும், பூவா தலையா போட்டுப் பார்ப்பதும் — something interesting.

என்ன இருந்தாலும் போலீஸ் டிபார்ட்மென்டை இப்படிச் சாக்கடை ஆக்கி இருக்கக் கூடாது. மந்திரிக்கு உதவுவதற்காக மந்திரியின் எதிரியான சாதாரண டாக்ஸி டிரைவரின் காரில் டைம் பாம் செட் பண்ணுவது ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு அழகா என்ன? போலீஸ் அதிகாரிகளை இப்படிப் பட்ட கைக்கூலிகளாகக் காட்டுவதற்குப் பதில், for a change, முதுகெலும்பு உள்ளவர்களாகக் காட்டினால் என்ன?

விஜய்காந்திற்குக் கதிரவன் என்று பெயர். கஷ்டப்படும் மக்களுக்காகவே உடலை வருத்திக் கொள்பவர். மக்கள் தண்ணீரில்லாமல் அவதிப்படுகிறார்கள் என்றவுடன், தீயணைப்புப் படையினருக்குப் போன் செய்து, தீயணைப்பு வண்டிகள் எல்லாம் 'டண' 'டண' என்று வந்து சேர்ந்தவுடன் தண்ணீர் பிடித்துக் கொள்ளச் சொல்லுகிறாரே — கொக்கு தலை வெண்ணெய் என்றாலும் சுவையான வெண்ணெய்தான்.

பி. ஏ. வை ஊரை விட்டே மூட்டை கட்டி அனுப்பிவிட்டு, பி. ஏ. வின் மனைவியைச் செந்தாமரை ஆண்டுவிட, பி. ஏ. வின் மனைவி கணவன் ஊருக்குத் திரும்பியவுடன் அத்தனையையும் சொல்லிவிட்டுத் தற்கொலை செய்து கொள்வது ஒரு சோகச் சிறுகதை. (வசனம் பளிச்!)

வக்கீல் நிழல்கள் ரவிக்கு அப்புறம் மூளைப் பது திருடன் நிழல்கள் ரவி. இவர் காரெக்டரின் நதிமூலம் ரிஷிமூலம் எல்லாம் இன்னும் புகைபடிந்த கண்ணாடியின் ஊடே பார்க்கிறாற்போல் இருந்தாலும், இவரை மடக்க என்றே ஒரு ஃபேரேஜ் ஆனிவர்ஸரி பார்ட்டி. அதில் கதிரவனின் (விஜய்காந்த்தான்) டான்ஸ். அப்போது நடக்கும் நகைத் திருட்டு. வாயின் மேல் நான்கு விரல்களைப் பொத்திக் கொண்டு சிரிக்கலாம் — அடக்கமாக.

பாட்டு ஒன்றும் எடுபடுவதாகக் காணோம். அரசியல் நெடி அதிகமாகி விட்டதாலோ?

விஜய்காந்த்தைத் தீர்த்துக் கட்டுவதற்காக அவர் காரில் டைம் பாம் வைக்கப்பட, மக்களால் துரத்தப்படும் செந்தாமரை ஓடி வந்து அந்தக் காரில் ஏறி, அதைப் புயல் வேகத்தில் செலுத்த, கார் வெடித்து, செந்தாமரையும் வெடிப்பது, செந்தாமரையின் காரெக்டருக்கு வேண்டுமானால் ஒரு முடிவாக இருக்கலாம். படத்திற்கு?

கதிரவன் தேர்தலில் ஜெயிக்கிறாரா இல்லையா?

மக்கள் சுபிட்சம் அடைகிறார்களா இல்லையா?

அந்தரத்தில் விடப்பட்ட இந்தக் கேள்விகளுக்கு விடை, மக்கள் ஆணையிட்டால் — II என்று ஒன்று வெளிவந்து சொல்லுமோ என்னவோ?

தேர்தல் பிரசார ஊர்வலம், காற்றில் ஆடும் கொடிகள், மு. க. ஸ்டாலின், பொருந்தாத ஒரு பாட்டு. சாமி, இந்த ஒரு படத்திலேயே போதும் போதும் என்றாகி விட்டது. பிரசாரம் என்றால் கூட ஒரு நாசூக்கு வேண்டாம்?

— ஜெயமன்மதன்

எங்க பட்ஜெட் நல்ல பட்ஜெட்?



— சி.எஸ். விளக்குகிறார்...

கேள்வி: இப்போது தனி நபர்களுக்கான வருமான வரிவிலக்கு உச்ச வரம்பு என்பது பதினெட்டாயிரம் ரூபாயாக இருக்கிறது. இன்றிருக்கும் விலைவாசியில் இது உயர்த்தப்பட வேண்டாமா?

சி. சுப்பிரமணியம்: நேரடி வரி என்பது வசதியானவர்களிடமிருந்து பெறப்படுவது. பதினெட்டாயிரம் ரூபாய் ஆண்டு வருமானமுள்ளவர்களை விடக் குறைந்த வருமானமுள்ளவர்களும் — வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களும்தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்நிலையில் அந்த உச்சவரம்பை உயர்த்தும்போது, வரி கொடுப்போரின் எண்ணிக்கை குறைந்து போவது மட்டுமல்ல; அது வசதியானவர்களுக்கே வசதி செய்து கொடுக்கிற ஒரு நிலையாகிவிடும். விலைவாசி உயர்வு என்பது அனைவருக்குமே பொதுதான். எனவே அந்த உச்சவரம்பு உயர்த்தப்பட வேண்டிய அவசியமில்லை.

கேள்வி: நமது இயற்கைச் செல்வங்களுள் ஒன்று, நமது மக்கள் தொகை. இதனைக் குறைக்கக் குடும்ப நலத்திட்டம் ஒருபுறமிருக்க, இருக்கின்ற இந்த வளத்தைச் சிறந்த விதமாகப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டின் வளத்தைப் பெருக்க முடியாதா? பொதுவாக இந்த இந்தத் துறைக்கு இவ்வளவு ரூபாய் ஒதுக்கீடு

என்று திட்டமிட்டு அந்தச் செலவினங்களுக்கு ஏற்ப வருவாய் பெற வரி விதிப்பதே நடைமுறையில் உள்ளது. இந்த நிலை மாறி, மக்கட் செல்வத்தையே நாட்டின் வளம் பெருக்கப் பயன்படுத்திக் கொள்ளும் விதமாகத் திட்டங்கள் தீட்டவும் பட்ஜெட் போடவும் முடியாதா?

சி. எஸ்.: மக்கள் தொகை என்பது சிறந்த செல்வம்தான். ஆனால் அந்தச் செல்வத்தின் மதிப்பு அதன் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; அறிவின் தன்மையைப் பொறுத்தே இருக்கிறது. நம் நாட்டிலோ துரதிருஷ்டவசமாகப் பெரும்பாலான குழந்தைகள் பிறக்கும் போதே பலவீனமாகவும் மூளை வளம் குறைந்ததாகவுமே பிறக்கின்றன. அதனால் நம் நாட்டைப் பொறுத்தவரை மக்கள் தொகை என்பது பெரும் செல்வமாக இல்லாமல் பெரும் சுமையாகவே இருக்கிறது. வறுமையில் வாடும் தாய்க்கும் சேய்க்கும் ஊட்டச் சத்தான உணவு கிடைக்காதது தான் அறிவிலும் உடலிலும் பலவீனமான குழந்தைகள் பெருகக் காரணம். எனவே, முதலில் வறுமையை ஒழிக்க வேண்டும்.

கேள்வி: சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வறுமை ஒழிக்கப்படவில்லையே?

சி. எஸ்.: காரணம், நம் நாடு பரந்த நாடு. ஒவ்வோர் இடத்திலும் வறுமைக்கு ஒவ்வொரு காரணம். அதை ஒழிக்க அந்தந்த இடங்களுக்குத் தகுந்த மாதிரியான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவதுதான் சிறந்த முறை. இதைக் கணக்கில் கொண்டுதான் ரஷ்ய அதிபர் கார்பச்சேவ் கூட 'சென்ட்ரல் கமாண்ட் எகானமி'யை விட்டுவிட்டு 'டி—சென்ட்ரலைஸ்ட் எகானமி' வேண்டுமென்று ஒரு புதிய பார்வையில் நோக்குகிறார். நம் நாட்டிலும் அது தேவை. அதுவும் தில்லியிலிருக்கும் அதிகாரங்களைச் சென்னைக்கு மாற்றுவதல்ல; அதிகாரங்கள் கிராம அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். திட்டங்கள் அனைத்தும் அரசாங்கத்தால்தான் செயல்படுத்தப்பட முடியும் என்கிற மாயையான நிலை மாறி — பிரதமரால்தான் நடக்கிறது, முதல்வரால்தான் நடக்கிறது என்கிற மாயை மாறி — நமது வரிப்பணத்தால் திட்டங்கள் நடக்கின்றன என்று மக்கள் உணர்ந்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மக்களைப் பங்கு வகிக்கும்படி செய்ய வேண்டும். அதுதான் வறுமையை ஒழிக்கச் செய்யும்.

கேள்வி: MODVAT என்பது என்ன? வி. பி. சிங் கொண்டு வந்த இந்தத் திட்டம் மிகச் சிறந்தது என்று கூறும் சில தொழிலதிபர்கள், இந்தத் திட்டத்தை இன்றைய அரசு கைவிட்டுவிடும் என்று அஞ்சவும் செய்கிறார்களே? அதனால் விலைகள் உயரும் என்று கருதப்படுகிறதே?

சி. எஸ்.: உலக அளவில் Value Added Tax என்று வைத்திருக்கிறார்கள். அதை நாம் மாடிஃபை செய்துள்ளோம். அதுதான் Modified Value Added Tax (MODVAT) என்பது. அதாவது எக்ஸைஸ் டூட்டி போடுகிற முறை. மூலப் பொருள்களுக்கும் வரி, அந்த மூலப் பொருள்கள் உதிரிப் பாகங்களாகும் போதும் வரி, அந்த உதிரிப் பாகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு பொருளாகும் போதும் வரி என்று பல இடங்களிலும் வரி போடும் நிலையை மாற்றி, மூலப் பொருள்கள் ஒரு பொருளாக மாறி, அதன் மதிப்பு உயரும் போது மட்டுமே வரி போடுவது. இதற்கு நான் மத்திய அமைச்சராக இருந்த போதே ஒரு கமிட்டி போட்டு ஆராயப்பட்டது. இந்நிலையை மாற்றினால், பல இடங்களிலும் போடப்படும் வரிகள் உற்பத்திச் செலவோடு சேருவதால் விலை உயரவே செய்யும். எனவே, இதை அரசு கைவிடாது என்றே நினைக்கிறேன்.

கேள்வி: Zero Based பட்ஜெட் என்ற தொடர் இன்று அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இதனைத் தமிழில் விளக்க முடியுமா?

சி. எஸ்.: சாதாரணமாக இன்றைக்கு நாம் பட்ஜெட் போடும்போது, இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களுக்கான செலவுகளை முதலில் ஒதுக்கிவிட்டுப் பிறகு மீதியுள்ள தொகையில்தான் புதிய திட்டங்களைப் போடுகிறோம். இந்நிலை மாறி, இப்போது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்கள் நமக்கு அவசியம் தானா என்று மறு பரிசீலனை செய்வது. அப்போது



"...நாம் பணத்தையே ஒரு சொத்தாகக் கருதுகிறோம். இந்த மாயை மாற வேண்டும். பணம் என்பது வெறும் காகிதம்..."



ஒருவர்: 'நான் பதவி ஏற்ற மறுநாளே எனது இலாகாவில் லஞ்சத்தைப் பாதியாகக் குறைத்துவிட்டேன்' என்கிறாரே... அமைச்சர், அது எப்படி?

அமைச்சர் பி. ஏ.: அதுவா...? இனி மெடிக்கல் சீட்டுக்கு இரண்டு லட்சம் வேண்டாம், ஒரு லட்சம் வாங்குங்க போதும்னு சொல்லிட்டாரு... அது தான்!

— திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி

பயனில்லாத திட்டங்கள் என்று கருதப்படுபவற்றுக்கு நிதி ஒதுக்குவதை விட்டுவிட்டு அந்த நிதியை அவசியமான புதிய திட்டங்களுக்கு ஒதுக்குவது. இதுதான் Zero Based பட்ஜெட் என்பது.

கேள்வி: நமது பட்ஜெட்டின் பெரும் பகுதி ராணுவச் செலவினங்களுக்கே போகிறது. இதனைக் குறைக்க முடிந்தால் வரிகள் குறையலாம் அல்லது அத் தொகையைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளுக்குச் செலவிடலாம். இதற்கு ரீகன், கார்பசேவ் போல் நாமும் அண்டை நாடுகளுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களுக்கு ஓர் ஆரம்பமாவது செய்ய இயலாதா?

சி. எஸ்.: உண்மைதான். ராணுவத்திற்கு வெறும் பொருட்செலவு மட்டும்தான் என்பதில்லை; பெரும்பகுதி அறிவுத் திறனையும் அதற்கே செலவிட வேண்டியிருக்கிறது. அவற்றைக் குறைத்தால் எத்தனையோ துறைகளில் முன்னேறலாம். உதாரணத்திற்கு ஜப்பானையும் ஜெர்மனியையும் எடுத்துக் கொள்ளுங்கள்... இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அந்த நாடுகளுக்குத் தண்டனை கொடுப்பதாக நினைத்து ராணுவப் பலக் கட்டுப்பாடுகளை விதித்தார்கள். ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளே அவற்றின் தேவையில்லாத ராணுவச் செலவைக் குறைத்து, பொருளாதாரத் துறையில் உலகமே வியக்கும் வண்ணம் முன்னேறச் செய்து விட்டன. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இன்று ரஷ்யாவும் அமெரிக்காவும் தங்கள் பிடிவாத குணங்களைத் தளர்த்திக் கொண்டு ஒரு புதிய அணுகு முறையில் செயல்படுகின்றன. ஒரு பெரிய நாடு என்கிற முறையில் அண்டை நாடுகளுடனான உறவுகளை வளர்த்துக் கொள்ளும் முதல் பொறுப்பு நமக்கே இருக்கிறது. எனவே, நாம்தான் பழைய பிடிவாதங்களை விட்டுவிட்டுப் புதிய அணுகு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கேள்வி: உற்பத்திக்கு உதவாத இனங்களில் ஆகும் செலவுகள் தாம் அரசாங்கத்தின் பற்றுக்குறை பட்ஜெட்டுக்கு முக்கிய காரணம் என்பது எவ்வளவு தூரம் உண்மை? உற்பத்திக்கு உதவாத செலவினங்களால் பணவீக்கம் அதிகரித்து விலைவாசிகள் உயருகின்றன. இதனைச் சீர்ப்படுத்தும் விதமாகப் பட்ஜெட் போட இயலாதா?

சி. எஸ்.: உதவாக்கரைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு வருவது உண்மைதான். அவற்றை மன உறுதியோடு கட்டுப்படுத்த வேண்டும். இது தவிர, உற்பத்திக்கு உதவும் திட்டங்கள் விஷயத்திலும் பணம் ஒதுக்குவது மட்டுமே போதாது; பணத்தைச் செலவழித்து விட்டதாலேயே அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும் சொல்ல முடியாது. ஒரு திட்டம் போடுகிறோம் என்றால், முதலில் அதை நான்கு கட்டங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். நிதியையும் நான்கு பிரிவுகளாக ஒதுக்க வேண்டும். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்குள்ளும் நடந்த வேலைகள் என்ன என்பதையும் அதற்கான பலன் கிடைத்திருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். அப்போது தான் பணம் விரயமாவதைத் தடுக்க முடியும்.

கேள்வி: பற்றுக்குறை பட்ஜெட் என்பது என்ன? பற்றுக்குறை எப்படிச் சமாளிக்கப் படுகிறது? பற்றுக்குறை காரணமாகப் பணவீக்கமும் விலைவாசி உயர்வும் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. வேறு சிலர், 'பற்றுக்குறை பட்ஜெட் வளரும் பொருளாதாரத்திற்கு அவசியமே' என்றும் கூறுகின்றனரே, எது சரி? எந்த அளவுக்குச் சரி?

சி. எஸ்.: பற்றுக்குறை பட்ஜெட் என்பது ஒரு பெரிய விஷயமேயில்லை. எவ்வளவு பற்றுக்குறையாக இருந்தாலும் சமாளித்து விடலாம். அதாவது, பற்றுக்குறை என்றால் வரவுகளுக்கு மேலும் அதிகமான செலவுகள் இருப்பது. அந்நிலையில் அப் பணத்தை நாம் அச்சடித்து விடுகிறோம். அதே சமயத்தில் அந்தப் புதிய பணத்திற்கு ஈடாக உற்பத்தியும் பெருகி விட்டால் ஒரு விலையேற்றமும் ஏற்படாது. தேவை அதிகரித்து அதற்கு ஈடு செய்ய முடியாத படிக்கு உற்பத்தி உயராமல் போகும் போதுதான் விலைவாசி உயருகிறது. இதைத் தடுக்கும் ஒரே வழி உற்பத்திப் பெருக்கம்தானே தவிர, சம்பள உயர்வு அல்ல. சம்பள உயர்வு போன்றவற்றால் ஒரு சிலரின் வாங்கும் சக்தியே அதிகரிப்பதால் — பண்டங்களை வாங்குவதில் அந்த சாராரின் போட்டி வேகம் அதிகரிப்பதால் மேலும் மேலும் விலையுயர்வுதான் ஏற்படும். இதை நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கேள்வி: பெட்ரோல் விலையேற்றம் போல், பட்ஜெட்டுக்கு முன்னதாகவே விலைகளை உயர்த்துவது — அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்களின் விலைகளை உயர்த்துவது — மறைமுக வரி விதிப்புப் போன்றது தானே? இதனை ஏன் பட்ஜெட்டுக்கு முன்பாகச் செய்கிறார்கள்? இது மக்களை ஏமாற்று

பரிட்சை நெருங்கிடும் காலம்?
கவனமாக படித்திடும் நேரம்



முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம்
காம்ப்ளான்® பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான் ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் **காம்ப்ளான்** நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். **காம்ப்ளானில்** குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் **காம்ப்ளான்** உங்கள் குழந்தைகளுக்கு—அன்றுடம் இருவேளை.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஐஸ்க்ரீம், ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும்.

குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூரண உணவு

GX/22/203 TML

கிற வேலையா?

சி. எஸ்.: பட்ஜெட்டுக்கு முன்பு ஏற்றினால் என்ன, பட்ஜெட்டில் ஏற்றினால் என்ன? விலையேற்றம் விலையேற்றம்தான். ஆக, விலையேற்றமில்லாமல் பார்த்துக் கொள்வதுதான் முக்கியம்.

கேள்வி: ரயில்வே பட்ஜெட் என்று தனியாக ஒன்று தேவையில்லை; பொது பட்ஜெட்டோடு இணைத்து விடலாம் என்று சிலர் சொல்கிறார்களே?

சி. எஸ்.: என்னைக் கேட்டால் ரயில்வேக்கு மட்டுமல்ல; ராணுவ பட்ஜெட்டையும் தனியாகவே பிரித்துப் போடுவதுதான் சிறந்தது என்பேன். அப்போதுதான் இன்னும் அதிகக் கவனத்தோடு செயல்பட முடியும்.

கேள்வி: பட்ஜெட் என்றாலே அஞ்சுகிற ஒரு நிலை போய் — பட்ஜெட் என்பது வெறும் வரவு, செலவுக் கணக்கு என்கிற நிலை மாறி — பட்ஜெட் என்பது பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் ஒரு சாதனமாகக் கருதப்படுமா? எத்தகைய பட்ஜெட்டை அப்படிக் கருதலாம் — எந்த பட்ஜெட் நல்ல பட்ஜெட்?

சி. எஸ்.: இப்போது நாம் வெறும் நிதியை மட்டும் வைத்துக் கொண்டுதான் பற்றாக்குறை பட்ஜெட், உபரி பட்ஜெட் என்று கணக்குப் போடுகிறோம்; பணத்தையே ஒரு சொத்தாகக் கருதுகிறோம். இந்த மாயை மாற வேண்டும். பணம் என்பது வெறும் காகிதம் — நம்மிடையே இருக்கும் பல்வேறு வளங்களையும் பயன்படுத்திக் கொள்ள உதவும் ஒரு கருவி என்பதை நாம் உணர வேண்டும். நம்மிடையே உள்ள அறிவு, இயற்கை வளங்கள், மக்களின் சக்தி ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பட்ஜெட் தயாரிப்பதே சிறந்த முறை. கூடவே அந்த பட்ஜெட் இவற்றை மேலும் மேலும் வளப்படுத்துவதாகவும் பெருக்குவதாகவும் அமைய வேண்டும். உதாரணத்திற்குக் கம்ப்யூட்டரை எடுத்துக் கொள்ளுங்கள்... முன்பு ஒரு கம்ப்யூட்டர் என்பது ஒரு பெரிய அறையையே அடைத்துக் கொள்ளும் அளவுக்குப் பெரிதாக இருந்தது. மக்களின் அறிவு வளர வளர இப்போது அது ஒரு டைப்ரைட்டர் அளவுக்குச் சுருக்கப்பட்டு விட்டது. அதனால், குறைந்த செலவில் — குறைந்த பொருள்களில் — அதிகத் திறமை மிக்க கம்ப்யூட்டரைத் தயாரிக்க முடிகிறது. இதன் மூலம் அதன் விலையும் குறைகிறது. ஆக, அறிவுப் பெருக்கம், இயற்கை வளங்களை உபயோகப் படுத்திக் கொள்வது, மக்களை அதில் பங்கு வகிக்கச் செய்து அவர்களின் சக்தியைப் பயன்படுத்திக் கொள்வது — இவற்றை உள்ளடக்கிய பட்ஜெட்தான் நல்ல பட்ஜெட் என்பதில் சந்தேகமேயில்லை.

பேட்டி: **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படமும், படங்களும்:
கே. வி. ஆனந்த்

நேரு: இந்திரா; ராஜீவ்:

மூன்று தலைமுறைகளைக் கண்ட அலெக்ஸாண்டர்



புதிய கவர்னர் பி. ஸி. அலெக்ஸாண்டர் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது...

"சிறு தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும். அந்தத் துறைக்கு உற்சாகமுள்ள இளம் அதிகாரியைப் போட வேண்டும்'' என்று டி. டி. கே., நேருவிடம் கூறிய போது, ''உங்களுக்கு இந்த விஷயத்தில் பூரண சுதந்திரம் அளிக்கிறேன்'' என்று சொல்லி விட்டார் நேரு. அதிகாரிகளின் பட்டியலை டி. டி. கே. வாங்கி அலசினார். பி. ஸி. அலெக்ஸாண்டர் என்ற பெயரைப் படித்ததும் உதவியாளரைக் கூப்பிட்டு ''அலெக்ஸாண்டரை அழைத்து வாருங்கள்'' என்றார். ஏற்றுமதி—இறக்குமதி அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அலெக்ஸாண்டரிடம் டி. டி. கே. சில நிமிஷங்கள் பேசினார். பிடித்துப் போனது. சிறுதொழில் துறையின் முதன்மை அதிகாரியாக நியமிக்கப்பட்டார் அலெக்ஸாண்டர். பல சீனியர் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளின் புருவங்கள் உயர்ந்தன!

அதிலிருந்து அலெக்ஸாண்டரின் உத்யோக வாழ்க்கை ஏறுமுகம்தான். 1978ல் வர்த்தகத் துறைச் செயலாளர். அப்போது ஒரு சோதனை. அகமதாபாத்தில் இருந்த ஒரு துணி ஆலைக்கு, விதிகளுக்கு மாறாகச் சலுகை கொடுக்கப்பட வேண்டும் என்று மொரார்ஜியின் மகன் காந்திபாய் தேசாய் வற்புறுத்திய போது, ''நோ'' என்று சொல்லிவிட்டுக் கால்கடுதாசியைக் கொடுத்து விட்டுப் போனார் அலெக்ஸாண்டர்.

1980 ல் இந்திரா மீண்டும் பிரதமராக வந்த போது ஐக்கிய நாடுகள் சபையில் நல்ல உயர் பதவி வகித்துக் கொண்டிருந்தார் அலெக்ஸாண்டர். 'என் செயலாளராக வந்து பணி புரிய வேண்டும்' என்று இந்திரா அழைத்த வுடன் ''ஐ. நா. வில் இதுபோன்ற உயர் பதவிக்கு இந்தியர்கள் வருவது கஷ்டம்; கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள்; அவசியமானால் வந்து சேருகிறேன்'' என்று சொல்லி விட்டார் அலெக்ஸாண்டர். இந்திரா விடவில்லை. அது முதல் இந்திரா இறக்கும் வரை, அவருடைய நிழலாகவே இருந்து, பொருளாதார, நிர்வாக விஷயங்களில் பெருமளவு ஆலோசனைகள் கூறி வந்தார்.


கேரளாவில் மாவெலிக்கரா என்னும் இடத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டரின் கூடப்பிறந்தவர்கள் எட்டு பேர். மூன்று சகோதரிகள், ஐந்து சகோதரர்கள். நடுத்தரக் குடும்பம்தான். இவரும் மறைந்த காங்கிரஸ் தலைவர் ஸ்டீபனும் ஒன்றாகப் படித்தவர்கள். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்ற எதிலும் ஆங்கிலமானால் அலெக்ஸாண்டர் முதலிலும், மலையாளமானால் ஸ்டீபன் முதலிலும், வருவார்கள். 23 வயதிலேயே, ஆராய்ச்சியை முடித்துவிட்டு நெல்லூரில் உள்ள வி. ஆர். கல்லூரியில் பொருளாதாரத் துறையின் தலைவராக இருந்தார் அலெக்ஸாண்டர். நெல்லூரில் பணியாற்றிய போதுதான் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து தூத்துக்குடியில் சப்—கலெக்டராகப் பணியாற்றினார். 1953ம் ஆண்டிலிருந்து மத்திய அரசில் சேர்ந்து கொண்டார்.

இந்திரா இறந்தவுடன் ''பதவியை ராஜினாமா செய்ய விருக்கிறேன்'' என்று அலெக்ஸாண்டர் சொன்ன போது ராஜீவ் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னால் ராணுவ ரகசியங்களை அயல்நாடுகளுக்குச் சிலர் விற்றுக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்ட போது, அதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தார் அலெக்ஸாண்டர்.

லண்டனில் இந்தியத் தூதுவராகப் பதவியேற்ற போது, இங்கிலாந்து அரசுடன் பேசிப் பயங்கரவாதிகளை நாட்டை விட்டு வெளியேற்றும் சட்டத்தைக் கொண்டு வர ஏற்பாடு செய்தார்.

இன்று தமிழக ஆளுனராகப் பொறுப்பேற்றிருக்கும் அலெக்ஸாண்டருக்கு வயது அறுபத்தேழு.


— ப்ரியன்


ஜெ.வி.பி. வெறியர்கள்
விடுதலைப் புலிகள்
இந்தப் பளுவைத் தூக்கணும்!... சீக்கிரமா உடம்பைத் தயார் பண்ணிக்க..
தேர்தல்
மூப்பனார்
தமிழக (இ) காங்கிரஸ் தலைவர்
தமிழக (இ) காங்கிரஸ்
தமிழக ஆளுநர்
ஆலோசகர்கள்
தலைமைச் செயலர்
அதிகாரிகள்



கல்கி

1988 பிப்ரவரி 28
மலர்: 46 இதழ் 31
பிரபவ மாசி 16



மூப்பனார் வருகிறார்; முள் கிரீடம் அணிகிறார்!

அப்பாடா! ஒருவழியாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் யார் என்ற பிரச்னை தீர்ந்தது! மூப்பனாரை மூட்டை கட்டித் தமிழகத்துக்கு மேலிடம் அனுப்பி வைத்துவிட்டது! மேலிடத்தின் தலைவலி தீர்ந்தது. மூப்பனாருக்குத் தலைவலி ஆரம்பமாகிறது! அவர் முள் கிரீடத்தை அணிகிறார் என்றே கூறலாம். அவர் கவனத்தைக் கவர வேண்டிய அம்சங்கள் இரண்டு. முதலாவது காங்கிரஸுக்குள் கோஷ்டி மனப்பான்மையை நீக்குவது. (ஏன், பிரிந்து போனவர்களைத் திரும்ப அழைக்கக் கூட முயலலாம்.) இதற்குத் தொண்டர்கள், தளபதிகள் ஆகியோர் முன் ஓர் உருப்படியான செயல்திட்டத்தை மூப்பனார் வைக்க வேண்டும். அவர்களைத் தட்டிக் கொடுத்தும் அவர்களுடன் கைகோத்துக் கொண்டும் அந்தச் செயல் திட்டத்தை நிறைவேற்ற முழுமூச்சுடன் முனைய வேண்டும். ஒற்றுமை வளர இதுவே வழி.

இரண்டாவது, காங்கிரஸில் அனைவரும் ஏற்கத்தக்க லட்சியம் எது, செயல்திட்டம் என்ன, மக்கள் முன் வைக்க வேண்டிய கொள்கைகள் என்ன என்பதை முடிவு செய்வது. இந்த விஷயத்தில் பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சிக்குப் பாரம்பரியம் மிக்க ஒரு பத்திரிகை என்ற முறையில் சில யோசனைகளைக் கூற நமக்கு உரிமை உண்டு.

தமிழ்நாடு கடந்த பல ஆண்டுகளில் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிப் போயிருக்கிறது. எங்கெங்கும் லஞ்ச ஊழல் தாண்டவமாடுகிறது. அறிஞர்களின் வார்த்தைக்கு அடியோடு மதிப்பில்லை. போதாக்குறைக்கு மேல்சபையையும் ஒழித்தாகி விட்டது. கல்வியற்றவர் எண்ணிக்கை குறையக் காணோம்; அதிகரித்தே வருகிறது. அ. தி. மு. க. வின் இருபிரிவினரும் ஒருவரை ஒருவர் வசைபாடுவது வயிற்றைப் புரட்டுகிற விதமாக இருக்கிறது. மாஜி அமைச்சர்களில் யாருமே யோக்கியனில்லை என்று அவர்களே அவர்கள் வாயால் உறுதிப்படுத்துகிறார்கள். 'ஜிம்பூம்பா' மாதிரி முப்பத்தைந்து லட்சம் தேர்தல் நிதி திடீரென்று முளைக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எந்தப் பிரிவுடன் நீங்கள் கூட்டணி அமைத்தாலும் மக்கள் உங்களையும் கேவலமாகத்தான் எடை போடுவார்கள்.

மக்களுக்கு எம். ஜி. ஆரிடம் இருந்த அன்பும் அனுதாபமும் இன்று சக்களத்திச் சண்டை போடுவோரிடம் இருக்க முடியாது; இருக்கக் கூடாது. அவர்கள் ஒரு மாறுதலை ஆட்சியில் நிச்சயம் விரும்புவார்கள். ஆனால் அது எத்தகைய ஆட்சியாக இருக்கும் என்பதை நீங்கள் அவர்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

மக்களைப் போலவே நமது மூத்த தலைவர் சி. சுப்பிரமணியம் மனமுடைந்து போயிருக்கிறார். அரசியலில் நேர்மையையும் பண்பாட்டையும் புகுத்தக் கட்சிச் சார்பற்ற ஓர் அமைப்பை நிறுவ வேண்டும் என்று பத்திரிகையாளர் கூட்டம் ஒன்றில் அவர் கூறியிருக்கிறார். இது கூவத்தில் இறங்காமலே கூவத்தைச் சுத்தப்படுத்துவதற்கு ஒப்பாகும். நடக்காத காரியம். அரசியலில் இறங்கித்தான் அரசியலைத் தூய்மைப்படுத்த முடியும். திரு. சி. எஸ். மீது இதுவரை அப்பழுக்குப் படிந்ததில்லை. நேர்மையாளர் என்பதோடு அனுபவம் மிக்க அறிஞர். எனவே நமது யோசனை என்னவென்றால் அவரைத் தமிழகத்தின் அடுத்த முதல்வராக மக்கள் முன் நிறுத்துங்கள். அவருக்குப் பக்கபலமாக நின்று, அவருக்கு அதிக சிரமம் தராமல், கட்சிப் பணிகளைத் தலைவர் மூப்பனார் கவனித்துக் கொள்ளட்டும். இதற்கு சி. எஸ்ஸின் ஒப்புதலைப் பெறுவது கஷ்டம். ஆனால் 1950—களின் தொடக்கத்தில் காமராஜர் ராஜாஜியை வற்புறுத்தியது போல் இப்போது சி. எஸ்.ஸை நீங்கள் வற்புறுத்தி இணங்கச் செய்ய வேண்டும். இதைச் செய்தால் தமிழகம் முழுவதும் ஒரு புத்துணர்ச்சி பரவும். காங்கிரஸுக்கு ஆதரவு வெள்ளமாய்ப் பெருகும்.

இதைச் செய்தும் ஒருவேளை ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள்; அடுத்த முறை பார்த்துக் கொள்ளலாம்; இம்முறை காங்கிரஸ் ஒரு சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாகவேனும் இருந்து பதவிக்கு வருகிறவர்களைக் கட்டுக்குள் அடங்கி நடக்கச் செய்ய முடியும். மெய்யான ஜனநாயகப் பணியாக அது விளங்கும். 'ஜிங்சக்' சத்தம் எழுப்பிக் கொண்டிருப்பதைவிட அது எவ்வளவோ மேல்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



அம்மா என்னும்

ஆஸ்திரேலியப் படங்கள், மனித மனத்தின் மென்மையான உணர்வுகளைச் சித்திரிப்பதில் சிறப்பான தேர்ச்சி பெற்று விட்டதற்கு HIGH TIDE ஓர் உதாரணம். அம்மா — மகள் பாசரேகைகளை அடிப்படையாக வைத்து, சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் வரம்பு மீறாத காட்சிகளையே அமைத்து, இந்திய ரசிகர்களுக்காகவே தயாரித்தது போன்ற படம். ஜூடி டேவிஸின் அளவான நடிப்பு ஒரு பெரிய ப்ளஸ்.

ஏய், நீ என்ன டீன் ஏஜ் பெண்ணா? முதன் முதலாக ஓர் ஆணுடன் உட்கார்ந்து காதல் டயலாக் பேசப் போகிறாயா என்ன? எதற்காக இத்தனை தடவை கண்ணாடியில் முகத்தைத் திருப்பித் திருப்பி அலங்காரம் செய்து கொள்கிறாய்! முட்டாளே, உன் வயது இருபத்தெட்டு என்பதை மறந்து விட்டாயா? அட, தீபக்கை நினைக்கும் போதே உன் கன்னங்களில் ஆப்பிள் கலர் ஏறுகிறதே. பைத்தியக்காரி, இது உன்னுடைய முதல் காதல் இல்லை!

ஷீலா விரல்களை நெஞ்சில் வைத்துப் பார்த்தாள்.

தடக், தடக், தடக், தடக், தடக்!

சன்னமாக நடுங்கும் விரல்களால் ஸ்டிக்கர் பொட்டைச் சரி செய்தாள். நெற்றியில் புரளும் கூந்தலை விரலால் அழகாக ஒதுக்கினாள். புடைவையின் மடிப்புக்களைத் தோளில் அழகாக அடுக்கிப் பின் செய்தாள்.

அறைக் கதவைத் திறந்து காரிடாரில் பிரவேசித்தாள். அந்த நேரத்தில் ஹோட்டல் சுறுசுறுப்பாயிருந்தது. காரிடாரின் ஒரு முனையில் தொப்பி போட்ட தின்பண்டங்களை ட்ராலியில் வைத்து நாசூக்காகத் தள்ளி வரும் தொப்பி போட்ட வெயிட்டர். ரூமுக்கு ரூம் லாண்டிரித் துணிகளை விநியோகம் செய்யும் ரூம்பாய்.

ஒளித்து வைக்கப்பட்ட விளக்குகள் கூரையிலிருந்து மிதமான வெளிச்சத்தைத் தந்தன. ஷீலா தன் ஹை ஹீல்ஸ் ஒலிக்க நடந்தாள். லிஃப்ட் அருகே வந்ததும் பொத்தானை அழுத்தி விட்டுக் காத்திருந்தாள்.

சிவப்பு எண்கள் கூடிக் கொண்டே வந்து, ஆறு என்றதும் கதவுகள் திறந்தன. ஷீலா லிஃப்டில் நுழையுமுன் லிஃப்டிலிருந்து 'புயல்' வெளிப்பட்டது. புயல் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆறு வயது இருக்குமா அந்தச் சிறுமிக்கு? தோள் வரை கூந்தலைப் புரள விட்டு, தன் குட்டை கவுன் சரேலெனப் பறக்க, அவள் சீறி வெளிப்பட்டு நேரே ஷீலாவின் மீது மோதினாள்.

ஷீலா பாலன்ஸ் இழந்து, சுவரைப் பிடித்துச் சுதாரித்தாள்.

"ஸாரி ஆண்ட்டி" — அந்தச் சிறுமி ஒரு மெலிதான வாசனையைப் பறக்க விட்டுக் காரிடாரில் ஓடினாள். கடைசி ரூமில் கதவைத் தட்டினாள்.

"குட்டிப் பெண்ணே, நீ பிழைத்தாய். நான் இன்று நல்ல மூடில் இருக்கிறேன். அதனால் விட்டு விட்டேன். இல்லையென்றால் இழுத்து வைத்துக் கன்னத்தில் சாத்தியிருப்பேன்!

ஷீலா லிஃப்டிற்குள் நுழையும் தறுவாயில் அந்தச் சிறுமி தன்னிடத்திலிருந்து கையை ஆட்டி விட்டு ரூமுக்குள் மறைந்தாள்.

தீபக் அரக்கு நிற டீ ஷர்ட்டில் இருந்

தான். படிய வாரியத் தன் தலைமுடியை அவ்வப்போது விரலால் தொட்டுக் கொண்டு பேசினான். நொடிக்கொரு தரம் பிரகாசமான சிரிப்பை உதிர்த்தான். ஆர்டர் எடுக்க வந்த பேரரிடம் பளிச் பளிச்சென்று உத்தரவிட்டான். அவனைச் சுற்றிலும் ஒரு கம்பீரம் அரண் இட்டிருந்தது. அந்தக் கம்பீரம்தான் ஷீலாவின் ஏழு வருட ஆமை ஓட்டை அசைத்திருந்தது.

''யோசித்தாயா, ஷீலா?''

''ம்''. ஷீலா, பீங்கான் தட்டில் இல்லாத தூசை விரலால் துடைத்தாள்.

உணர்வு

''என்ன முடிவு செய்தாய்?''

''என் முடிவைச் சொல்வதற்கு முன், என்னைப் பற்றிப் பூரணமாகச் சொல்லி விடுவது நல்லது என்று நினைக்கிறேன், தீபக்.''

''இதுவரை என்னிடம் சொல்லாதது?''

''நான் ஏற்கெனவே கல்யாணமானவள் என்பது மட்டும்தான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.''

''எல்லோருடைய வாழ்க்கையும் கடைசி வரை அமைதியாகப் போய்விடுவதில்லை, ஷீலா. உன் கணவன் விபத்தில் இறந்ததற்கு நீ என்ன செய்வாய்?''

''பாபு இறந்த போது, என் வயிற்றில் ஒரு குழந்தை இருந்தது என்று நான் உங்களிடம் சொல்லவில்லை...?''

''அப்புறம்? எங்கே உன் மகன்?'' தீபக் அதிர்ச்சியடையாதவனாக, அந்த விஷயத்தைச் சுலபமாக எடுத்துக் கொண்டது ஷீலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''மகன் இல்லே, மகள்...''



"வேர் இஸ் ஷீ?"
"தெரியாது."
"வாட்!"
"நான் செய்திருக்கக் கூடாதுதான். ஆனால், பாபு இறந்தபின், குழந்தை பிறந்த போது, எனக்குக் குழந்தையின் மீது அநியாயமாக வெறுப்பு வந்தது. எனக்குத் துர்ப்பாக்கியம் கொண்டு வந்த குழந்தை! அது வேண்டாம் என்று தீர்மானித்தேன். வயிற்றிலேயே கலைக்க முடியாதபடி வளர்ந்து விட்ட நேரம். பெற்றதும் முதல் காரியமாகப் பாபுவின் அம்மாவிடம் குழந்தையைத் தூக்கிப் போட்டேன் — பிடியுங்கள் உங்கள் பேத்தியை என்று. தட் இஸ் தி எண்ட் ஆஃப் இட்."

"யூ மீன், அதற்கு அப்புறம் உன் மகளை நீ பார்க்கவே இல்லை?"

"அவள் இன்னும் உயிரோடு இருக்கிறாளா, என்ன பெயர், எந்த ஊர் — எதுவும் எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள நான் கவலைப்படவும் இல்லை. சொன்னால் நம்ப மாட்டீர்கள் தீபக். அவளை நான் பிரிந்தது நல்லதாகப் போயிற்று. அந்த அதிர்ஷ்டமா என்ன தெரியவில்லை, அடுத்த மாதமே ஸேல்ஸ் மானேஜராகப் பிரமோஷன் வந்தது. படிப்படியாக மேலே மேலே ஏறி நான் இன்றைக்கு எங்கள் கம்பெனியின் ஜெனரல் மானேஜர்..."

"உனக்குத் திறமை இருந்தது. உன்னிடம் உழைப்பு இருந்தது. உன் கம்பெனி உன்னைப் பயன்படுத்திக் கொண்டது. அவ்வளவுதான். அதற்காக ஏன் உன் மகளின் அதிர்ஷ்டத்தைச் சந்தேகிக்கிறாய், ஷீலா?"

"ஏன், என்ன? என்ற கேள்விகளுக்கெல்லாம் என்னிடம் விடையில்லை, தீபக். ஆனால் நான் இப்போது சந்தோஷமாய் இருக்கிறேன். சுதந்திரமாய் இருக்கிறேன். எத்தனையோ ஆண்கள் என்னுடைய தனிமைக்காக வருந்தியிருக்கிறார்கள். எனக்கு வாழ்க்கைத் துணையாக இருக்கச் சம்மதம் தெரிவிக்கிறார்கள். எல்லோருக்கும் நோ நோ என்று மறுத்துக் கொண்டிருந்தவள். நீங்கள் கேட்டபின் சலனப்பட்டு விட்டேன். என்னுடைய சரித்திரத்தை நீங்கள் முழுமையாகத் தெரிந்து கொள்வது நல்லது என்று தோன்றியது. சொல்லி விட்டேன்..." ஷீலாவின் மேலுதட்டுக்கு மேல் வியர்வை முத்துக்கள் ஊறின.

தீபக் சற்றுத் தயங்கிவிட்டு ஷீலாவின் கையின் மீது தன் கையை வைத்தான். அழுத்திக் கொடுத்தான். அந்த அழுத்தத்தில் நட்பும், ஆறுதலும், அவளைப் புரிந்து கொண்ட பிரியமும் இருந்தன.

"நான் உன்னை உனக்காக விரும்புகிறேன், டியர்... நாம் சேர்ந்து நிறையச் சாதிக்கப் போகிறோம்... வாழ்க்கையின் சந்தோஷங்கள் நமக்காகக் காத்திருக்கின்றன."

டெலிபோன் பிடிவாதமாகக் கூப்பிட்டது.

ஷீலா கைநீட்டி எடுத்தாள்.

"இதோ புறப்பட்டுக் கொண்டேயிருக்கிறேன். கான்பரன்ஸ் முடிந்ததும், லஞ்சுக்கு ஏற்பாடு பண்ணியாயிற்றா?" என்று எதிர்முனை அதிகாரிக்கு உத்தரவுகளைக் கொடுத்தாள். கிளம்புமுன் கண்ணாடியில் ஒரு முறை முகத்தை டச்அப் செய்து கொண்டு வெளியே வந்தவள் அதிர்ந்தாள்.

லிஃப்ட்டுக்காகக் காத்திருப்பது — யார் அது, நான் பார்ப்பது சரிதானா? ராதையம்மாள் தானே அது?

முந்தின நாள் அவள் மீது மோதி விட்டுச் சென்ற சிறுமியின் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் வயதான முகம், ஷீலாவின் நெஞ்சில் பூகம்பங்களை ஒட்டியது. அது... அது நிச்சயம் பாபுவின் அம்மாதான். இங்கே எங்கே வந்தாள்? இத்தனை வருடங்கள் கழித்து மாமியாரும், மருமகளும் இந்த ஓட்டல் காரிடாரில் சந்திக்க வேண்டும் என்று விதியை ஏற்படுத்தியது யார்? அப்படியானால்... அப்படியானால் அந்தச் சிறுமி...?

ராதையம்மாளும் அப்போதுதான் பார்வையைத் திருப்பினார். ஷீலாவைப் பார்த்ததும் அவர் கண்களில் ஒரு திடுக்கிடல் குதிக்க, சிறுமியைத் தம்மோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். லிஃப்ட் கதவு திறந்ததும், அவர்கள் அவசரமாக உள்ளே நுழைந்தார்கள். ஷீலா தன் ரூம் கதவை விட்டு நகராமலேயே நின்றாள்.

அன்றைய கான்பரன்ஸில், மூன்று தடவைகளுக்கு மேலாக, ஷீலா டாபிக்கை விட்டு வெளியே மேய்ந்து, நினைவூட்டப்பட்டாள். பேசும்போதெல்லாம் வாய் குழறினாள். தொலைந்த பார்வையோடு சாப்பாட்டை வீணடித்தாள். ரூமுக்குத் திரும்பிய போது தலைவலித்தது.

அழைப்புமணி கூப்பிட்ட போது, எதிர்பார்ப்போடு திறந்தாள்.

ராதையம்மாள் உள்ளே நுழைந்தார். கதவைச் சாத்தினார்.

"ஏன் இங்கே வந்தாய்?" முதல் கேள்வியி

மாமனார்: மாப்பிள்ளைகிட்டே, 'இது உங்க வீடு மாதிரி'ன்னு சொன்னது தப்பாப் போச்சுங்க...

மற்றவர்: ஏன், தங்கிட்டுக் கிளம்ப மாட்டேன்கிறாரா...?

மாமனார்: அப்படி இருந்தால் பரவாயில்லையே... விலைபேசி... அட்வான்ஸ் வாங்கிட்டாராம்!

— திருத்துறைப்பூண்டி எஸ். சந்தசாமி



இவர்தான் முதல்வர்!

தமிழகத்தின் அடுத்த முதல்வராக யார் வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? ஏன்?

கட்சியின் கொள்கைகளை மட்டுமின்றித் தலைவரின் சிறப்புகளையும் அலசிக் கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில் எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் பரிசு ரூ. 50/—

அதிகபட்சமான கல்கி வாசகர்கள் யாரை முதல்வராகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்ற ருசிகரமான தகவலும் வெளியிடப்படும்.

முடிவு தேதி: மார்ச், 31.

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புதல் இயலாது. உறை மீது "இவர்தான் முதல்வர்" என்று குறிப்பிடவும். ஏப்ரல் 17 புத்தாண்டு மலர் தொடங்கி ஒன்றன் பின் ஒன்றாகக் கட்டுரைகள் பிரசுரமாகும்.

— ஆசிரியர்

லேயே உஷ்ணம் பறந்தது.

ஷீலா கட்டில் முனையில் உட்கார்ந்து கொண்டாள். "நான்... நான் ஒரு கான்பரன்ஸுக்காக வந்தேன். காலையில் நான் உங்களோடு பார்த்த அந்தச் சின்னப் பெண்?"

"அதிர்ஷ்டமில்லாதவள்.." ராதையம்மாளின் நாக்கு வாள் போல் சுழன்றது. "ஏற்கெனவே, நீ அவளை நிறையச் சிதைத்து விட்டாய்.. 'அம்மா எங்கே? அம்மா எங்கே?' என்று ஏங்கி, மனத்தில் ஒருவித விரக்தியே வந்து விட்டது ரஞ்சனிக்கு.. இப்போதுதான் நிம்மதியாக இருக்கிறாள்.. தப்பித் தவறிக் கூட நீதான் அவள் அம்மா என்று அவளிடம் சொல்லித் தொலைத்து விடாதே.. வெகேஷன் நேரத்தில் அவளுக்குக் கிடைக்கும் சந்தோஷத்தையும் அழித்த பெருமை உனக்கு வேண்டாம்.. இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள் புறப்பட்டு விடுவோம்... அது வரை ஒதுங்கியே இரு... ப்ளீஸ்" ராதையம்மாள் கதவை அறைந்து சாத்தியதில் அவளுடைய டென்ஷன் தெரிந்தது.

ஷீலா மறுநாள் கீழே இறங்கிய போது ஆச்சரியப்பட்டாள். இரவோடு இரவாகத் தோரணம் கட்டி, பேனர் வைத்து ஒரு புத்தகக் கண்காட்சி, ஹோட்டலின் தோட்டப் பரப்பில் ஏற்பாடாகியிருந்தது.

தீபக் ரிசப்ஷன் அருகே அவளுக்காகக் காத்திருந்தான்.

"தீபக், அந்த புக் எக்ஸிபிஷனை எட்டிப் பார்ப்போமா?"

"ஷ்யூர்... ஷீலா, யாரைத் தேடுகிறாய்?"

"யாரையும் இல்லையே, தீபக்..."

"உன் கண்கள் ஓர் இடத்தில் நிற்காமல் லிஃப்ட் ஒவ்வொரு முறை திறக்கும் போதும் பதறிப் போய்ப் பார்ப்பது போல் எனக்குத் தோன்றியது. எனிதிங் ராங்?"

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..." ஷீலா அவனுக்கு உறுதிப்படுத்துவதற்காக அவன் கையுடன் தன் கையைக் கோத்துக் கொண்டாள்.

புத்தகக் கண்காட்சியில் புத்தக அடுக்குகளுக்கு நடுவே நின்றிருந்த போது, ஷீலாவின் புடைவை முனையை யாரோ இழுத்தார்கள். திரும்பினால்...

ரஞ்சனி! அவளுடைய ரஞ்சனி!

"ஆண்ட்டி அந்த அனிமல்ஸ் புக் எடுத்துக் கொடுங்களேன்.. எட்டவில்லை.."

ஷீலா அவசரமாக அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"ரஞ்சனி, உன் பாட்டி எங்கே?"

"கோயிலுக்குப் போயிருக்கிறாள். தினம் என்ன இருக்கிறது கோவிலில்? எனக்கு போரடித்தது. 'எக்ஸிபிஷனிலேயே இரு. வந்துவிடுகிறேன்' என்று போய் விட்டாள்..."

"தீபக், வில் யூ எக்ஸ்க்யூஸ் மீ...? ரஞ்சனி, ஆண்ட்டியுடன் ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிட வருவாயா?"

தீபக் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க, ஷீலா ரஞ்சனியின் தோளில் அணைத்துக் கொண்டு ரெஸ்டாரண்ட்டை நோக்கி நடந்

தான்.

ஐஸ்க்ரீம் கடைசி ஸ்பூன்களில் இருந்தது.

ஷீலா, ரஞ்சனியைக் கண்களால் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''ஐஸ்க்ரீம் தவிர வேறென்ன பிடிக்கும்?''

''அம்மா...'' என்றாள் ரஞ்சனி தயங்காமல்.

''உன் அம்மாவைப் பார்த்திருக்கிறாயா?''

''போட்டோவில் கூடப் பார்த்ததில்லை. நான் பிறந்தவுடனேயே செத்துப் போய் விட்டாளாம்.. ஏன் எனக்கு மட்டும் கடவுள் மம்மியைத் தரவில்லை?''

''பாட்டியைப் பிடிக்குமா உனக்கு?''

''கொள்ளை கொள்ளையாக. ஆனால் அம்மாவைப் பற்றிப் பேசினாலே, பாட்டிக்குக் கோபம் வந்து விடும். அந்த நேரத்தில் மட்டும் பாட்டியைப் பிடிக்காது... உங்களுக்கு யாரைப் பிடிக்கும் ஆண்ட்டி?''

''உன்னை...'' ஷீலா உதடுகளைக் கடித்துத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினாள்.

''என்னையா!'' ரஞ்சனி கண்களை அகலமாய் விரித்துக் கேட்டாள்.

''இப்போது உனக்கு மம்மி கிடைத்தால் எப்படியிருக்கும் ரஞ்சனி?''

''என் மம்மிதான் செத்துப் போய் விட்டாளே...''

''இல்லை, உன் மம்மி சாகவில்லை.. உன் மம்மி யார் தெரியுமா?'' ஷீலா உண்மைகளை அவிழ்த்து விடுவதென்று முடிவு செய்து விட்டாள்.

''நோ. நீ தவறு செய்கிறாய், ஷீலா..''

''நிறைய யோசித்து விட்டேன் தீபக். எனக்கு என் மகள் வேண்டும்.'' ஷீலா கரகரத்த குரலில் சொன்னாள்.

''ஆறு வருடமாக இல்லாத பாசம்!''

''ஆறு வருடமாக நான் ரஞ்சனியைப் பார்க்கவில்லை. அவளுக்கு நான் என்ன தப்பு செய்திருக்கிறேன் என்பது தெரியாமலேயே இருந்து விட்டேன்...''

''ஓகே... நீயே முடிவு செய். நான் ஷீலா என்ற பெண்ணைத்தான் ஆசைப்பட்டேன்.. ஷீலா என்ற அம்மாவை இல்லை.. உன்னுடைய சுதந்திரம் தான் எனக்குப் பெரிய கவர்ச்சியாக இருந்தது, ஷீலா...''

''நான் உங்களைத் தப்பாக நினைக்க மாட்டேன், தீபக். உங்கள் உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. பட், என் தீர்மானத்தை நான் அசைக்கப் போவதில்லை.''

''ரஞ்சனி 'சரி' என்று சொல்லி விட்டால் போதுமா? அவளுடைய பாட்டி?''

''பேசப் போகிறேன், கெஞ்சப் போகிறேன். என் மாமியாரையும் வந்து என்னுடன் தங்கச் சொல்லப் போகிறேன்.. அவருக்கு இஷ்டமில்லையென்றால், அவர்கள் வீட்டில் போய் நான் தங்குவதற்காவது சம்மதம் கேட்கப் போகிறேன்...''

''உன் மகளைப் பிரிந்து இருப்பதுதான் உனக்கு அதிர்ஷ்டம் என்றாய்?''

''அவளைப் பார்க்காத வரைக்கும், அவளைப் பிரிந்து விட்ட என் குற்ற உணர்ச்சிக்கு நானாக மேம்போக்காக அப்படி ஒரு சமாதானம் தேடிக் கொண்டிருந்தேன் என்பதை நானே கண்டுபிடித்திருக்கிறேன், தீபக்...''

''இப்போது ஒரு பெரிய கம்பெனியின் பொறுப்புள்ள ஜெனரல் மேனேஜர் நீ...''

''முதலில் ஒரு அம்மா, தீபக்... அப்புறம் தான் மற்றதெல்லாம்...'' ஷீலாவின் குரலில் இருந்த உறுதி தீபக்கிற்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்படி ஒரு வேளை அவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் உனக்காக நான் காத்திருக்கிறேன், ஷீலா...''

''நான் அவர்களுடன் பேசிவிட்டு இரவு உங்களுக்கு போன் செய்கிறேன், தீபக்.''

அதிகாலை ஹோட்டலிலிருந்து அந்தக் கார் புறப்பட்டது. டிரைவிங் சீட்டில் ஷீலா. அவளுக்கு வெகு அருகே அவளை உரசி உட்கார்ந்து ரஞ்சனி. பின் இருக்கையில் பாட்டி ராதையம்மாள்.

தீபக் காரை, அதன் முன் கண்ணாடிகளில் பிரதிபலிக்கும் சூரியனை ஹோட்டல் வாசலில் நின்று கவனித்தான். கார் அவனைக் கடந்த போது, கையை வீசி வீசி ஆட்டினான்.

ஜன்னலுக்குள்ளிருந்து ரஞ்சனி எட்டிப் பார்த்தாள். ''நான் என் மம்மியுடன் போகிறேன்'' என்று கூவினாள்.

ஷீலாவின் கண்களில் நீர் திரண்டிருந்தது. ஒரு வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட துக்கமா அல்லது மற்றொரு வாழ்க்கையை, விட்ட இடத்திலிருந்து தொடரப் போகும் சந்தோஷமா — தீபக்கிற்குப் புரியவில்லை.

— ஜெயமன்மதன்

அடுத்த இதழில்...

அடிமைக் குழந்தைகள்;
— தமிழகத்துக்குத் தலைகுனிவு!

— அதிர்ச்சியளிக்கும் நேரடி ரிப்போர்ட்

எழுதுபவர் வாஸந்தி



ஆகவே செக்

7

"எப்படி அவனைக் கண்டுபிடிப்பீங்க நிவிதா?" என்றான் ஷியாம் குமார். நாற்காலியின் முதுகில் நன்றாகச் சாய்ந்து கொண்டு லேசாக வியர்த்திருந்த அவள் முகத்தைப் பார்த்தான்.

"இந்தச் சேலையை நான் நாளைக்கு ஆபீசுக்குக் கட்டிக்கிட்டு வந்தேன்னு வைங்க. அவன் அன்பளிப்பை நான் ஏத்துக்கிட்டதா அர்த்தம். அதுக்கப்புறம் அவனுக்குத் தைரியம் வந்து தன்னை அடையாளம் காட்டிக்கிட்டு வந்து பேசுவானா, மாட்டானா?" என்றாள் நிவிதா.

"பேசலாம்."

"நிச்சயம் பேசுவான். அப்போ அவனைக் கொண்டாந்து உங்க முன்னாடி நிறுத்த முடியும். ஆனா, அவனைக் கண்டுபிடிக்கிறதுக்காகக்கூட இந்தச் சேலையைக் கட்டிக்கிறதை நான் விரும்பலை."

"அப்புறம் என்னதான் செய்யணும்னு சொல்றீங்க?"

"நிச்சயம் இந்த ஆபீஸ்லதான் வேலை செய்யறான். அதில் சந்தேகமில்லை சார்."

"ரொம்ப உணர்ச்சிவசப்படறீங்க நிவிதா. அறிமுகமே இல்லாமல் உங்களுக்கு ஓர் அன்பளிப்பு அனுப்புறது அநாகரிகம்தான். தன்னை அடையாளம் காட்டிக்கிற தைரியம் அவனுக்கு இல்லைங்கிறதிலேர்ந்தே அவனால் உங்களுக்கு வேறே எந்தத் தொல்லையும் நிச்சயம் இருக்காதுன்னு சொல்லலாம். பேசாமல் விட்டுடுங்களேன். பெரிசு படுத்தாம!"

"அதெப்படி சார்? இது ஓர் அவமானம் சார். பார்சல் வந்தது. அதிலே சேலையும், லெட்டரும் இருந்தன. இப்ப என் செக்ஷன் முழுக்கத் தெரியும். இன்னைக்குள்ளே நம்ம ஆபீஸ் முழுக்கத் தெரிஞ்சிடும்."

"ஓ கே. நீங்க இதுக்கு நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க. சரியானதா இருந்தா நிச்சயம் செய்யறேன்."

"எனக்கு உங்க அனுமதி வேணும் சார்."

"எதுக்கு?"

"நம்ம ஆபீஸ் நோட்டீஸ் போர்டில நான் ஒரு லெட்டரை பின் செய்து வைக்கிறதுக்கு."

"எழுதிக் கொண்டாங்க, பார்த்துட்டுச் சொல்றேன்."

"தேங்க் யு சார்."

நிவிதா விருட்டென்று வெளியேறினாள். ஷியாம் டையின் முடிச்சைச் சரி செய்து கொண்டான். உதட்டுக்குள் புன்னகை செய்து கொண்டான். இவ்வளவு தீவிரமான பெண்ணா நீ? பாத்ரூம் கதவைத் தாழிட்டுக் கொண்டு அழுகிற ரகமில்லையா நீ? பின் தொடரும் இளைஞர்களின் கமெண்ட்சிற்குக் குறுகி, ஒதுங்கி, விரைவு கூட்டி நடக்காமல், நின்று செருப்பைக் கழற்றிக் காட்டும் டைப்பா?

நெட்டி மரம் என்று நினைத்தேன். தேக்கு தான். அதனால் என்ன? கோடாலிக்கு முன்னால் எம்மாத்திரம்? படிகள் கட்டி, அதில் ஏறி எவரெஸ்ட்டின் உச்சியை அடைவதில் என்ன சாதனை இருக்கிறது? போராடித்தான் கொடி நாட்ட வேண்டும். போராடலாம். போராட்டம் எனக்குப் பிடித்தமான விஷயம்.

கொஞ்ச நேரத்தில் மறுபடியும் உள்ளே வந்தாள் நிவிதா.

"உக்காருங்க" என்று அவள் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டான்.

"பரவாயில்லை சார்!" என்று நின்றாள்.

ஷியாம் கடிதத்தைப் படித்தான்.

'அன்புள்ள ஆண் மகனே,

இதோ நீ அனுப்பிய சேலை. இரண்டு நாட்களுக்கு இந்த நோட்டீஸ் போர்டு திறந்தே இருக்கும். நீ எடுத்துக் கொள்ளத் தவறினால், நம் அ லு வ ல க த் தி ல் அனைவரின் முன்னிலையிலும் ஏலம் விடப்படும். பெண் எ ன் ப வ ள் விலைபொருள் அல்ல. உன் அநாகரிக எண்ணங்களை அரங்கேற்ற அவளை மேடையாகப் பயன்படுத்தாதே. பெண்ணிடமிருந்துதான் பிறந்தாய். பெண்ணைத்தான் மணக்கப் போகிறாய். பெண்ணுக்குத் தந்தையும் ஆகலாம். பெண்ணை மதி. அவள் உணர்வுகளை மதி. அவள் தன்மானத்தில் தடங்கல் செய்யாதே. எதிரி அல்ல நான் உன்னை எச்சரிக்க. அன்புள்ள என்றுதான் ஆரம்பித்திருக்கிறேன். இது அறிவுரையே.'

நிமிர்ந்து பார்த்தான். இன்னும் படபடப்புக் குறையாமல் நின்று கொண்டிருந்தாள் நிவிதா.

"ரொம்ப ஸ்ட்ராங் டோஸாத் தெரியுதே."

"ஆனாலும் பணிவாத்தான் சொல்லி இருக்கேன்னு நினைக்கிறேன் சார். முகம் தெரியாத அந்த ஆளுக்கு என் பாதிப்பை, என் வேதனையை வேறே எப்படி சார் காமிக்கிறது?"

ஷன் 302 படி...

''புரியுது. யு ஆர் ஸோ சென்சிடிவ். ஒக்கே.'' என்ற ஷியாம் பெல்லடித்து பியூனே வரவழைத்தான்.

''இந்தா. இந்த லெட்டரையும், இந்தச் சேலையையும் நோட்டீஸ் போர்டுல பின் குத்தி வச்சிடு. ரெண்டு நாளைக்கு நோட்டீஸ் போர்டைப் பூட்ட வேணும். தெரிஞ்சுதா?''

''சரி சார்!''

பியூன் வாங்கிக் கொண்டு நடக்க...

''இரு. நிவிதா, அந்த லெட்டர்ல உங்க கையெழுத்தில்லையே.... வேணுமா?''

''வேணும். அனுப்பினவனுக்குத் தெரியுமே இது யாரோட பதில்ன்னு.''

''சரி. நீ போப்பா.''

''ரொம்ப நன்றி சார்!'' என்றுள் நிவிதா.

''அடுத்தவங்களோட உணர்ச்சிகளுக்கு, குறிப்பா பெண்களோட உணர்ச்சிகளுக்கு ரொம்ப மரியாதை தர்றவங்க நான். இங்கே சேர்ந்த ரெண்டாவது நாளே இப்படி ஒரு கசப்பான அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டதுக்கு ஸாரி.''

''நீங்க என்ன சார் செய்வீங்க?''

''என் தலைமையில் இருக்கிற ஆபீஸ்ல தானே இது நடந்திருக்கு? இதுக்கும் நான் தான் பொறுப்பு ஏத்தாகணும். மறுபடியும் உங்களுக்கு எந்த வகையில் தொந்தரவு ஏற்பட்டாலும் என்கிட்டே வாங்க.''

மறுபடியும் நன்றி சொல்லி வெளியேறினுள் நிவிதா.

ஷியாம் ரிசீவர் எடுத்து, டயல் செய்து, ''தீபக், என்ன செய்றே?'' என்று கேட்டான்.

''ஒரு டீ.வி. கம்பெனிக்கு விளம்பரப் படம் ஷூட் பண்ணியிருக்கேன். மத்தியானத்துக்கு மேல் வொண்டர் வேண்ட்



போறோம்.''
''போய்ட்டு?''
''ஈவினிங் வந்துடுவேன்.''
''ரைட். நாம் சந்திக்கிறோம் இன்னைக்கு.''
''ஓ. யெஸ். வீட்டுக்கு வரட்டுமா?''
''வா.''
''நிவிதா சௌக்யமா? என்ன மாதிரி டைப்புன்னு கண்டுபிடிச்சிட்டியா?''
''ஓ. நேர்ல சொல்றேன்.''
ஷியாம் ரிசீவரை வைத்தான். கீழுதட்டை நாக்கால் தடவிக் கொண்டான் சரமாக.

உணவு இடைவேளையின் போது ஆபீஸ் மொத்தமும் நோட்டீஸ் போர்டை எலெக்ஷன் ரிசல்ட் போலப் போய்ப் பார்த்தது. முடிச்சு, முடிச்சாய் நின்று முனகிக் கொண்டது. நிவிதா கடந்து செல்கையில் பாதியில் பேச்சை நிறுத்திக் கொண்டது.
கேரியரைப் பிரித்து வைத்துக் கொண்டு, ''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்றாள் விமலா.
''எதுக்கு?''
''மெஷின் கன்னுல படபடன்னு சுட்ட மாதிரி வார்த்தைகள் நிவிதா. உங்களைச் சாதாரணமாத்தான் நினைச்சிருந்தேன். ஜாக்கிரதையா இருக்கணுங்க. இன்னைக்கு டாக் ஆஃப் தி ஆபீஸ் நீங்கதான்.''
''நான் செஞ்சது சரியா, தப்பா?''
''ஒரு வகையில் சரி. ஒரு வகையில தப்பு.''
''எப்படி?''
''ஆம்பளைன்னா என்ன வேணாலும் செய்யலாம்ங்கிற திமிரை, தன்மானத்தோட தேவையான அளவு ஈகோவோட நச்சுன்னு மண்டையில் அடிச்சிருக்கிங்க. இது சரி. சரியான கோபக்காரி, ராங்கிக்காரின்னு ஆபீஸ் மொத்தத்திலேயும் ஒரு இமேஜ் உங்களைப் பத்தி உருவாக்கிட்டிங்க. இது சரியாப் படலே. உங்ககிட்டே இயல்பாப் பழகவே தயங்குவாங்க.''
போச்சு! விமலா சொல்லி முடித்ததும் ஆரம்பமான புலம்பல் மனத்தில் தொடர்ந்தது. பஸ்ஸில் விடுதி திரும்பும் போது... முகம் கழுவும் போது... சேலை மாற்றும் போது...
விமலா சொல்வது போல் என்னைப் பற்றி ஒரு ரஃப் இமேஜ் ஏற்படுத்திக் கொண்டு விட்டேனோ? பாருங்கள் ஆண்களே, நான் பொல்லாதவள் என்று பறை சாற்றிக் கொண்டிருக்கிறேனா? என் நடவடிக்கையில் நியாயமும், கோபமும் இருந்தாலும் சற்று அதிகப் படியானதா? விமலாவாய் இருந்தால் இப்படித்தான் நடந்திருப்பாளா?
ஒரு காரியத்தில் சரியான முடிவெடுத்து விட்டு, அப்புறம் எதற்காகக் குழம்புகிறேன்? தடுமாறுகிறேன்?
வினோத்தைப் பார்க்க வேண்டும். நடந்ததைச் சொல்ல வேண்டும். அவரிடம் கேட்க வேண்டும் — நான் செய்தது சரியா என்று. ஓர் ஆணின் அபிப்பிராயம் தேவை. நான் உரிமையாக அபிப்பிராயம் கேட்க முடிகிற ஆண் — வினோத். ஜெனரல் மேனேஜர்கூட என் செயலை ஊக்குவித்துத்தானே சொன்னார். ஜெண்டில் மேன். தலைமைப் பொறுப்பிலிருந்து வந்த, வர வேண்டிய பேச்சு இது. ஒரு வெளி மனிதரின் பார்வையில் எனக்குக் கருத்து வேண்டும்.

நினைத்தாயிற்று. செயல்படுத்தியாயிற்று. இனி யார் கருத்தை அறிந்து என்ன செய்யப் போகிறேன்? ஒவ்வொரு செயலுக்குப் பிறகும் எல்லோரும் இப்படி என்னை மாதிரிதான் தவிப்பார்களா?
நிவிதா ஹேண்ட் பேகில் பணம் எடுத்து வைத்துக் கொண்டு தன் அறையை விட்டு வெளியேறினாள். நேராய் அலுவலகம் வந்து மார்ட்டினிடம் அனுமதி வாங்கி வினோத் குமாரின் ஆபீசிற்கு போன் செய்தாள். வீட்டுக்குப் போய் விட்டார் என்றார்கள்.
வீட்டுக்கு போன் செய்தாள். வினோத் குமாரைத் தவிர அவன் அப்பாவோ, அம்மாவோ, தம்பியோ போனை எடுத்தால் உடனே வைத்துவிடத் தயாராய் இருந்தாள்.
''ஹலோ!'' என்றது வினோத் குமாரே

பொழுதுபோக்கால் வந்த விவாகரத்து!



பொழுது போக்கு, திருமண பந்தத்தை முறித்து விடுமா என்ன? ஒரு ஸ்விட்ஜர்லாந்து பெண்ணின் வாழ்க்கையில் அப்படி ஆகி இருக்கிறது. JIGSAW PUZZLE-ல் அதிகப் பைத்தியமாக இருந்த பெண், தன் கணவன் தன்னை விவாகரத்து செய்யும் அளவுக்குப் பொழுதுபோக்கிலேயே தீவிரமாயிருந்திருக்கிறாள். கணவனின் குற்றச்சாட்டு அவன் பொழுது போக்கினால் தன்னைக் கவனிக்கவே அவனுக்கு நேரமில்லை என்பதும் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு அவள் பொழுது போக்குக்குப் பொருள் வாங்கவே சரியாகப் போய்விடுகிறது என்பதும்தான்.

— பிரியா பாலு.


எல்லோரும்...
..எல்லோரும்...
..எல்லோரும்...
எல்லோருமே
விரும்புவது
நியூட்ரின்
ட்விங்க்
Twink
SOFT DRINK CONCENTRATE
Orange
• ஆரஞ்சு
• லெமன்
• மேங்கோ
• பைனாப்பிள்
• கிரேப்
ட்விங்க்
ஸாஃப்ட் டிரிங்க் கான்ஸன்ட்ரேட்
nutrine
சுவைகளும் புதுமை, சுவைத்திட இனிமை
ACIL/090/87-Tam

தான்.

''நான்தான் பேசறேன் விநோத்''

''ஏய்! என்ன இது. இப்படி ஆச்சரியப் படுத்தறே என்னே.

''உங்களைப் பார்க்கணும். ஒண்ணு கேக்கணும்.''

''பார்க்கணும்! கேக்கணும்! சந்தம் கொடுத்து உன்னைப் பாட்டு எழுதச் சொல்லலாம் போலிருக்கே... ரைட். உடனே புறப்பட்டு அங்கே வரட்டுமா?''

''வேணும். யமுனா ரெஸ்ட்டாரெண்ட் வாங்க. நான் அங்கே வந்துடறேன்.''

''சரி. அங்கேர்ந்து எங்கே போறோம்?''

''எங்கேயும் போகலே. பத்தே நிமிஷத்தில் நான் திரும்பிடுவேன்.''

''பத்து நிமிஷமா? ஜஸ்ட் டென் மினிட்ஸ்? பிரைம் மினிஸ்டர் அப்பாயிண்ட்மெண்ட் கூடத் தேவலாம் போலிருக்கே. ஒக்கே. அந்தப் பத்து நிமிஷத்தைக் கூட இழக்க நான் தயாராக இல்லே. பதினஞ்சி நிமிஷத்தில் அங்கே இருப்பேன்.''

''சரி'' என்று வைத்து விட்டு வெளியே வந்தவள், அலுவலக அறையை ஒட்டி இருந்த விசிட்டர்ஸ் ஹால் வாசலில் லேசான பதற்றத்துடன் நின்று கொண்டிருந்த வித்யா சாகரைப் பார்த்து... கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் அதிர்ச்சி.

''வித்யா, எப்ப வந்தே?'' என்றாள் உற்சாகம் ஏற்படுத்திக் கொண்டு.

''நீ போன் பேச ஆரம்பிச்சப்பவே வந்துட்டேன். சும்மாதான் வந்தேன். நான் வர்றேன். உனக்கு வேறே ஏதோ ப்ரோக்ராம் இருக்கு போலிருக்கே..'' லேசான கோபம் வெடித்தது.

''இல்லே, வா சொல்றேன்'' என்று விடுதியை விட்டு வெளியே அழைத்து வந்தாள். சில விநாடிகள் தயங்கினாள். பிறகு தீர்மானித்தாள். கை தட்டி ஆட்டோ அழைத்து அவனை வற்புறுத்தி ஏறச் செய்து, அருகில் அமர்ந்து கொண்டு, தன் கையின் பத்து விரல்களையும் ஒன்று கூட்டி நகங்களைப் பார்த்துக் கொண்டு சொன்னாள்.

''சந்தர்ப்பம் வர்றப்போ சொல்லலாம்னு இருந்தேன் வித்யா. உங்கக்காவை உனக்கு நல்லாத் தெரியும். தப்பான முடிவு என்னைக்கும் எடுக்க மாட்டேன். அவர் பேர் விநோத். ஒரு மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ். கொஞ்சம் வசதியான குடும்பம்தான். ரொம்ப நல்லவர். உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.''

வித்யா சாகர் சங்கடமாக உணர்ந்தான்.

''இல்லேக்கா. வந்து... உனக்குத் தெரியாத தில்லே. இப்ப எதுக்கு என்னை அறிமுகப் படுத்திக்கிட்டு? வேணாமே. நான் இறங்கிக்கறேனே...''

''ச்சீ. பேசாம வா. உன் மச்சானைப் பார்க்கணும்னு உனக்கு ஆசையே இல்லையா?'' என்று நிவிதா சிரிக்க.. வித்யா சாகர் சகஜமானான்.

ரெஸ்ட்டாரெண்ட்டின் ஒரு தனி மேஜையில் இருவரும் காத்திருக்க... விநோத்குமார் வந்ததும் நிவிதா அறிமுகப்படுத்தி வைத்தாள். லேட்டாக ஆர்டர் செய்து சாப்பிட்டுக் கொண்டே மூவரும் பொதுவான விஷயங்கள் பேசினதும்...

நிவிதா காலையில் நடந்ததை விவரித்தாள்.

''நீ செஞ்சது ரொம்ப கரெக்ட்டுக்கா'' என்றான் வித்யா சாகர்.

''தப்பு பண்ணிட்டே நிவிதா. இப்ப அவனைக் கண்டுபிடிக்க வாய்ப்பில்லாம செஞ்சிட்டே. உஷாராயிடுவான். இனி வாலாட்ட மாட்டான். யாருன்னு தெரிஞ்சி மூஞ்சில துப்பணும். விட்டுட்டே அந்த சான்சை'' என்றான் விநோத்குமார்.

''அநாவசியமா விரோதத்தை வளர்த்துக்கிறதுக்கு.. இப்படி மறைமுகமா பதிலடி கொடுக்க நினைச்சேன். ஆனாலும் ஜாஸ்தியோன்னு மனசு உறுத்துது.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. உப்புப் போட்டுச் சாப்பிடறதுக்கு இந்த ரோஷம் கூட வரல்லேன்னா எப்படி? அதிலேயும் வித்யா சாகர், உங்க சிஸ்டர் மீல்ஸ் சாப்பிடறப்ப பார்க்கணுமே. சோத்துல உப்பு போடறதில்லே. உப்பு நடுவுல கொஞ்சம் சோறு வச்சிக்கிறதுதான் பழக்கம்!''

மனம் லேசாகிச் சிரித்தாள் நிவிதா.

''என்னடா சிரிக்கிறே?'' என்றான் ஷியாம்.

''பின்னே? உனக்குச் சூடா பதில் எழுதி உன் மூலமாவே நோட்டீஸ் போர்டில மாட்ட வச்சிருக்காளே... சிரிக்கிற விஷயமில்லையா இது?'' என்று மேலும் சிரித்தான் தீபக்.

''என்னால் அனுமதி மறுத்திருக்க முடியும். செய்யலே. போற போக்கில் விட்டுப் பிடிக்கிறதுக்காகத்தான் அனுமதிச்சேன்.''

''என்ன சொல்லு, உன் முயற்சி தோல்விதானே?''

''அதனாலே என்னப்பா? ஒரே போராட்டத்திலயா இந்தியா சுதந்திரம் வாங்கிடுச்சு? ரெண்டு நாள் கழிச்சு என் முயற்சி நம்பர் டூ ஆரம்பமாகுது. அதுக்கப்புறம் சொல்லு'' என்றான் சிகரெட் பற்ற வைத்துக் கொண்ட ஷியாம்.

— தொடரும்

ரூ. 1000/— பரிசு!

இந்தக் கதை 26 வாரங்கள் தொடரும். சுமார் 20, 22 அத்தியாயங்கள் முடிந்ததும் கதை தொடர்பாகச் சில கேள்விகள் தரப்படும். ஓரிரு வார்த்தை பதில்களை ஒரு தபால் கார்டில் நீங்கள் எழுத வேண்டியதுதான்!


கடைசிக் கேள்வியை இப்போதே கூறி விடுகிறோம்!: ''இந்தத் தொடரில் உங்களை மிகவும் கவர்ந்த, 'நறுக்'கென்ற மைந்த நாலு வரிகள் எவை?''

எனவே, கவனமாகப் படித்து வருவதுடன், 'நறுக்' வரிகளை அவ்வப்போது குறித்து வைத்துக் கொள்ளவும்!

— ஆசிரியர்.

அந்த வாலிபன் வருவது மூன்றாவது தடவை...!

ருக்மிணி பார்த்தசாரதி



பொழுதுபோக்கு என்பதில் பல வகைகள். விசாலத்தின் பொழுது போக்கு மாட்டுப் பெண் உஷாவைக் குறை கூறுவது.

பொழுதுபோக்கு திருப்தியாக அமைவதற்குச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து ஊக்கம் கிடைக்க வேண்டும். விசாலத்துக்கு ஊக்கமளிப்பவர்கள் அக்கம்பக்கத்துப் பெண்கள் — அவள் வாயைக் கிளறி அந்த வம்பில் ஆனந்தப்படும் 'சிநேகிதிகள்.

"இந்த அநியாயத்தைக் கேள்! நாளைக்கு யாரோ ஓர் ஆபீஸ்காரனுக்கு வீட்டில் விருந்தாம். உஷா புருஷனிடம் என்ன சொல்கிறாள் தெரியுமா? 'உங்கள் அம்மாவைக் கறிகாய் வாங்கச் சொல்ல வேண்டாம். ஒரு ரூபாய் மலிவு என்று வாடி வதங்கினதை வாங்குவார்!' ராங்கித்தனத்தைப் பார்த்தாயா?" — விசாலம்.

"பணக்கார வீட்டுப் பெண்ணில்லையா உஷா? அதுதான் ஒரு ரூபாய் என்கிறது காசாகவே தெரியலே அவளுக்கு!" — இவை உஷாவின் செய்கையை நியாயப்படுத்துவதற்காகக் கூறப்பட்ட வார்த்தைகள் இல்லை. விசாலத்தின் வாயைக் கிளறும் உத்தி.

இதற்குத்தானே விசாலமும் காத்திருந்தாள்! "பின்னே என்ன! பணத்தின் அருமை அவளுக்குத் தெரியுமா? வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, ரூபாய் ரூபாயாகச் சேர்த்து, பையனை வளர்த்து, படிக்க வைச்சுக் கல்யாணமும் பண்ணி வெச்சேனே, எனக்கல்ல தெரியும் சிக்கனத்தின் அருமை!"

"அது சரிதான் விசாலம்... ஆனால் கோபு இப்போது பெரிய ஆபீஸர். மூவாயிரம் ரூபாய்ச் சம்பளம். அதில் ஒரு ரூபாய் எந்த மூலே சொல்லு!"

"நிஜம் அதில்லே. கோபுவுக்குத்தான் ஓர் ஏழைத் தாயின் பிள்ளை என்கிறது நினைவில்லே. பணக்கார வீட்டு மாப்பிள்ளை என்கிறதுதான் நினைவிருக்கிறது!"

"இருந்தாலும் ரொம்பத்தான் அநியாயம்



இறந்துபோன
இதயம்
என் முன் துடித்துக் கொண்டிருந்தது.

"இன்னும்
ஏன் துடிக்கிறாய்,
இறந்தபின்னும்?" என்றேன்.

"வாழ்கிறவர் சிலர் வந்து
என்னுள்
துடிக்கிறார்கள்! துடிக்கிறேன்"
என்றது அது.

"வாழ்கிறவர்
மரணித்த இதயத்துள் வருவது எப்படி?"
— என்றேன்.

"வீணுக்குச்
செத்தவர்
வாழ்பவர் இதயத்துள் வருவது இயலுமெனில்,
இயலாதோ இது."

'உன் துடிப்பு
ஓய்வது எப்போது?"

"என்னை மரணம் எய்தும்போது!"

"நீ
இன்னும் சாகவில்லையா?"
எனக்கேட்ட எனக்கந்த இதயம்
சொன்னது —

"செத்தவனே!
நீதான் மனிதன் என்று என்னிடம்
இப்போது
பேசிக் கொண்டிருக்கிறாய்...

நான்
இலட்சியம்... ஈடேறுமற் போனாலும்
இறப்பதில்லை!

— தமிழன்பன்

விசாலம்! நீ பட்ட கஷ்டத்துக்குக் கொஞ்சம் இதமான மாட்டுப் பெண்ணாக வாய்த்திருக்கக் கூடாதோ?"

மற்றொரு நாள், மற்றொரு கதை...

"என்மாட்டுப் பெண் வெண்ணெய்காய்ச்சின அழகைக் கேள்... அடுப்பில் ஒரு கிலோ வெண்ணெயை வைத்தாளா? பக்கத்தில் இருந்து காய்ச்சி இறக்கி வைக்கப் பொறுமையில்லை... ஓர் இங்கிலீஷ் நாவலை எடுத்துக் கொண்டு பக்கத்து அறையில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டாள். நாவல் சுவாரஸ்யம் பெரிசா, பணக்காரிக்கு ஒரு கிலோ வெண்ணெய் பெரிசா? அது காய்ந்து, பொங்கி, அடுப்பில் வழிந்து சமையலறையே நாறின பிறகுதான் மகாராணிக்குப் பிரக்ஞை வந்தது. ஓடிப் போய்ப் பார்த்தால், மேடையெல்லாம், தரையெல்லாம் தீய்ந்து போன நெய்!"

"அடடா! என்ன வீண் செலவு! வெண்ணெய் விற்கிற விலையில்..." — அனுதாபப் படுவதுபோல் மற்றவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இன்னொரு நாள்.

"இருந்தாலும் என் மாட்டுப் பெண்ணுக்கு இத்தனை ஊதாரித்தனம் கூடாது, தெரியுமா?"


"ஏன், என்ன விஷயம், விசாலம்?"

"சாப்பாட்டுக்குக் கோஸும் காரட்டும் சேர்த்துக் கறி பண்ணியிருந்தாள். தேங்காய் கொஞ்சம் குறைச்சலாம், அதனால் பிடிக்கவில்லையாம். அப்படியே தூக்கி வேலைக்காரிக்குக் கொடுத்தாள்."

"தேங்காய், கறிகாய் விற்கிற விலையிலா?"

"அதுதானே! வீட்டில் ப்ரிஜ் இருக்கிறது. கறியை அதில் வைக்கிறது. இரண்டு உருளைக் கிழங்கை வேக வைத்து உதிர்த்து, அதோடு கறியைச் சேர்த்துக் கலந்து, பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி போட்டுப் பிசைந்தால் மணக்க மணக்க டிபனுக்கு வெஜிடபிள் போண்டா பண்ணியிருக்கலாம். ஆனால் சிக்கனம் என்கிற வார்த்தைக்கு அர்த்தமே உஷாவுக்குத் தெரியாதே!"

விசாலத்துக்கு உஷாவிடம் குறையென்றால், உஷாவுக்கும் மாமியாரிடம் குறைதான்... சிறு வயதில் கணவனை இழந்தாலும் விசாலம் தைரியமாகப் பிள்ளையை வளர்த்து ஆளாக்கினதென்னவோ உண்மைதான். அதற்காக உஷா மாமியாரை மதித்தாள். ஆனால் ஏழைமைதான் இப்போது இல்லையே! மகன் கைநிறையச் சம்பாதிக்கிறான். சீரும் சிறப்புமாக மாட்டுப் பெண் வந்திருக்கிறாள். இப்போதாவது மாமியார் சற்றுத் தாராளமாக இருக்கக் கூடாதா? கறிகாய்க்காரனோடு நாலணாவுக்குப் பேரம்... மாம்பழம் வாங்கினால் மலிவான ரகத்தைத்தான் தேர்ந்




தாத்தா ஏதோ மறுபடியும் குறும்பு செய்யப் போகிறார்!

தாத்தா அருகிலிருந்தால் ஒரு நொடிகூட மந்தமாக இருக்காது. பேரக்குழந்தைகளுக்கு புதுப்புது வேடிக்கைகள் காட்டுவது பற்றியே யோசித்துக் கொண்டிருப்பார். 65 வயதிலும் உலகிலேயே சுறுசுறுப்பான தாத்தா அவர்தான்!

ஹார்லிக்ஸ்தான் அதற்குக் காரணம். இத்தனை வயதிலும் அவர் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க அது உதவுகிறது.

டாக்டர் சிபாரிசு செய்ததுபோல அது ஊட்டச்சத்து மிகுந்தது; மிக எளிதில் ஜீரணமாவது.

ஹார்லிக்ஸ் — ஒரு நாளைக்கு இரு முறை பருகுவது அவருக்கு விருப்பமான பழக்கமாகிப் போனதில் வியப்பில்லை.



60 ஆண்டுகளுக்கு மேலாக தாத்தாவுக்கு பிரியமான ஆரோக்கிய பானம்.

ஹார்லிக்ஸ் முக்கிய இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது. சக்தியும், தெம்பும், நல்ல ஆரோக்கியமும் கொடுக்கும் புரதம், வைட்டமின்கள் தாதுப் பொருட்கள், மாவுச்சத்து. ஆகிய சத்துக்கள் எளிதில் ஜீரணமாகும் வகையில் இதில் அடங்கியுள்ளன.


டாக்டர்கள் உலகெங்கும் ஹார்லிக்ஸை சிபாரிசு செய்வதில் வியப்பில்லை. இது குடும்பம் முழுவதற்குமே ஊட்டச்சத்து அளிக்கும் மூலாதாரமான பானம் என்று நிரூபிக்கப்பட்டது.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA-5818 T

வாசகர் பங்கு:



தளபதி திடமதி

பரிசு ரூ-400

தளபதி திடமதி வாராவாரம் தூள் கிளப்பிக் கொண்டிருப்பதாக வாசகர்கள் எழுதுகிறார்கள்! அதற்கு நீங்களும் உதவலாமே? மாறி வரும் அரசியல் சூழ்நிலைகள், சமுதாயப் பிரச்னைகளுக்கு ஏற்பத் திடமதி என்ன 'விட்' அடிப்பார் என்பதைத்தான் நீங்கள் கீழே உள்ள கூப்பனில் எழுதி அனுப்ப வேண்டும். பொதுக் கூட்டத்தில் திடமதி பேசுவது போலவோ தலைவர் அல்லது நண்பரிடம் உரையாடுவது போலவோ இருக்கலாம். பிரசுரமானால் பரிசு ரூ. 25/— தவிர, ஒருவரே எழுதிய துணுக்குகள் சில அடுத்த பல இதழ்களில் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சப் பரிசு ரூ. 400/—. உறை மீது, ''தளபதி திடமதி'' என்று குறிப்பிடுக.

கூப்பன்:

கல்கி இதழ் 28.2.88 — முடிவு தேதி: 8.3.88.

தளபதி திடமதி: ''..

....

....

....

....

....

....

....

....

....

....

....''

என் பெயர்:..

விலாசம்:..

....

தெடுக்க வேண்டுமா? துணிமணியில் கூடவா இப்படி ஒரு கஞ்சத்தனம்? மலிவான புடைவைகள் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் இப்போது இல்லையே! சற்று விலையுயர்ந்த புடைவை வாங்கித் தந்தால் அதை எடுத்து உடுத்திக்கொள்ள மாமியாருக்கு மனம் வருவதில்லை. ஒரு புடைவை பழையதாகி, நைந்து கிழிந்து போன பிறகுதான் மற்றொரு புடைவையைப் பிரிக்க மனம் வருகிறது...

''உஷா! உன் மாமியாருக்கு நல்லதாய் இரண்டு புடைவைகள் வாங்கிக் கொடுக்கக் கூடாதா? பாவம், சின்ன வயதில் கஷ்டப்பட்டவர்... நல்ல மனுஷி!'' என்று அவளுடைய உறவுக்காரர்களே சொல்லும்போது உஷா கூனிக் குறுகித்தான் போவாள்...

அந்த வாலிபன் வருவது இது மூன்றாவது தடவை.

ஏறக்குறைய கோபுவின் வயதுதான் இருக்கும். ஆனால் கோபுவைவிட உயரம் அதிகம். சிரித்த முகம், சரளமான பேச்சு. பெயர் முரளி. உஷாவுக்கு ஏதோ தூரத்து உறவு.

முதல் தடவை அவன் வந்தபோது மாலை நேரம். கோபுவும் வீட்டில் இருந்தான். உஷாவின் பெற்றோர் அவளுக்காகப் பட்சணங்களும் ஆவக்காய் ஊறுகாயும் கொடுத்தனுப்பியிருந்தார்கள்.

''நான் டூர் விஷயமாக இந்தப் பக்கம் வந்தேன், உஷா. அப்படியே இதை உன்னிடம் கொடுத்துவிடும்படி மாமா சொன்னார்!'' என்றான், சகஜமாக.

இரவு அங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கோபுவும் உஷாவும் வற்புறுத்தவே, உடனே ஒப்புக்கொண்டு, சங்கோஜப்படாமல் சாப்பிட்டுவிட்டு, ''எக்ஸலண்ட் மீல், கோபு. நீங்கள் அதிர்ஷ்டக்காரர். உஷாவின் சமையல் நளபாகம்!'' என்று புகழ்ந்துவிட்டுச் சென்றான்.

இரண்டாவது முறை அவன் வந்த போது மத்தியான வேளை. கோபு அலுவலகம் சென்றிருந்தான். விசாலம் தூங்கிக் கொண்டிருந்தாள்.

இந்தத் தடவை உஷாவின் பெற்றோர்கள் தீபாவளிக்காகப் புத்தாடைகள் அனுப்பியிருந்தார்கள். அதைக் கொடுக்க வந்திருந்தான்.

சரளமான சம்பாஷணை... முரளி பேச, உஷா பதில் சொல்ல, நேரம் நகர்ந்தது.

பேச்சுக் குரல் கேட்டு எழுந்த விசாலம் யார் வந்திருக்கிறது என்று பார்த்தாள். முரளியைப் பார்த்ததும் இன்முகத்தோடு ''சௌக்கியமா?'' என்று விசாரித்தாள். ''உப்புமா கிளறட்டுமா?'' என்று உஷாவைக் கேட்டாள்.

''நீங்கள் பேசிக் கொண்டிருங்கள், அம்மா! நானே செய்கிறேன்!'' என்று உள்ளே விரைந்தாள் உஷா. முந்திரிப் பருப்பும் தக்காளியுமாக உப்புமா கிளறி எடுத்து வந்தாள். கூடவே, ஆவி பறக்கும் காப்பி...

முரளி ரசித்துச் சாப்பிட்டான்... பின், தன் சுபாவப்படி, ''டிபன் ஏ ஒன்!'' என்று புகழ்ந்துவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

''சரியான சாப்பாட்டு ராமன் இந்த

முரளி!'' என்று சிரித்துக் கொண்டே துணி மணிகளைப் பிரித்து மாமியாருக்குக் காட்டினாள் உஷா. ''நன்றாயிருக்கிறது. விலை அதிகமாயிருக்கும்!'' என்றாள் விசாலம்.

மூன்றாம் முறை முரளி வந்த போதும் மத்தியான வேளைதான். இந்தத் தடவை உஷாவின் பெற்றோர் கூடை நிறையப் பழங்கள் கொடுத்தனுப்பியிருந்தார்கள்.

வழக்கம் போல் பேசிக் கொண்டிருந்து விட்டு, பஜ்ஜியும், ரவா கேசரியுமாக ஒரு கை பார்த்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டான்.

மாலை கோபு ஆபீஸிலிருந்து வந்தபோது உஷா சமையலறையில் வேலையாயிருந்தாள். விசாலம் தன் அறையில் ஏதோ வாரப் பத்திரிகையில் லயித்திருந்தாள்.

இன்முகத்தோடு டிபன் காப்பி எடுத்து வந்தாள் உஷா.

திராட்சையும் முந்திரியுமாக ரவா கேசரியைக் கண்டதும் கோபு, ''என்ன விசேஷம், ஸ்வீட் பண்ணியிருக்கியே!'' என்றான்.

''மத்தியானம் முரளி வந்திருந்தான்!'' என்றாள் உஷா.

கோபுவின் முகம் கறுத்தது. ''ஏன் வந்தானாம்?''

''அப்பா பழக்கூடை அனுப்பியிருக்கிறார். கல்கண்டாக வாழைப்பழம்... செக்கச் செவேலென்று மாம்பழம்!''

''தூக்கிக் குப்பைத் தொட்டியில் கொட்டு!''

உஷா சட்டென்று அவன் முகத்தைப் பார்த்தாள். அதிலிருந்த கோபத்தை, வெறுப்பைப் பார்த்தாள்.

''என்னது?''

''அந்த ராஸ்கல் இங்கே அடிக்கடி ஏன் வருகிறான்? அதுவும் நான் இல்லாத வேளையாகப் பார்த்து?''

''அதுதான் சொன்னேனே, பழக்கூடை அனுப்பியிருக்கிறார், அப்பா!''

''இதெல்லாம் வெறும் சாக்கு! உன்னைப் பார்க்கத்தான் அவன் வருகிறான்!''

''என்னது?''

''என்னது? என்னது? வேறு வார்த்தை தெரியாதா உனக்கு? அந்த முரளிக்கு உன் மேல் ஒரு 'க்ரஷ்.' உனக்கும் வெட்கமில்லை. இல்லாவிட்டால் அவனைக் கண்டதும் இப்படியா விழுந்து விழுந்து டிபன் பண்ணிப் போடுவாய்?''

''வீட்டிற்கு விருந்தாளி வந்தால் பசி ஆறச் சாப்பிடக் கொடுப்பது நாகரிகமில்லையா? இதில் என்ன தப்பு?''

''எனக்கு நீ மானர்ஸ் கற்றுத்தர அவசியமில்லை. அவன் உன்னைப் பார்க்கத்தான் வருகிறான். உனக்கும் அவன் எப்போது வருவான் என்கிற ஏக்கம்!''

உஷா பதில் சொல்லவில்லை. இந்த அபாண்டத்தின் குரூரத்தில் அவள் துடிதுடித்துப் போனாள். தன் மனத்தில் மாசில்லை என்று அவள் எப்படிப் புரிய வைப்பாள்? அது மட்டும் முடிந்தால்......

முடிந்தது, எதிர்பாராத விதமாக!

விசாலம் அறை வாசலில் நின்றிருந்தாள். முகத்தில் அசாத்திய கோபம், கடுமை...

''கோபு, முதலில் போய் வாயை அலம்பிக் கொண்டு வா!'' என்றாள்.

''அம்மா!''

''பெண்டாட்டி மேல் சந்தேகப்படறது நீசத்தனம், கோபு. அவள் ஏன் சபலப்படப் போகிறாள்? அவள் அந்த மாதிரி முதிர்ச்சி இல்லாத பெண்ணா?''

''இருந்தாலும் அந்தத் தடியன்...''

''நிறுத்து கோபு... இப்படிப் பேச உனக்குத்தான் வெட்கமில்லை. ஆனால் கேட்கவே எனக்கு அவமானமாயிருக்கு. உஷாவோடு மூணு வருஷம் பழகியிருக்கேன், நான்... உன்னைத் தவிர எந்த மனிதனையும் இரண்டாம் தடவையாக அவள் பார்த்தது கூட இல்லை. அவள் மனத்திலோ, நடத்தையிலோ, விகாரமே இல்லை. உன் சந்தேகப் புத்தியால் அவளையும் அவமானப்படுத்தி, உன்னையும் கேவலப்படுத்திக்கறது அநியாயம், முட்டாள்தனம். இப்படியெல்லாம் நினைப்பது கூட மகாபாபம்!''

உஷா ஸ்தம்பித்து நின்றாள். கண்களில் சட்டென்று நீர் நிறைந்தது. கோபு தாயையும், பின் மனைவியையும் பார்த்தான். தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

விசாலத்துக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை... காலாற நடந்தாள். எந்தச் சிநேகிதியையும் நாடவில்லை. அருகே இருந்த சிறுவர் விளையாட்டுப் பார்க்குக்குச் சென்றாள். இதயத்தின் கொந்தளிப்பு அடங்கும் வரை அங்கே மௌனமாய் அமர்ந்துவிட்டு வீடு திரும்பினாள்.

அவளுக்காகவே வாசலில் காத்திருந்தாள் உஷா. அவளைக் கண்டதும் மௌனமாக ஓடிவந்து அவள் கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''அம்மா! நீங்கள் மட்டும் எனக்காக...''

''அசடே! உன் குணம் எனக்குத் தெரியாதா? விடு! கோபு எப்படி இருக்கிறான்?''

''தம் வார்த்தைகளுக்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார், அம்மா!

மறுநாள் விசாலம் அடுத்த வீட்டுப் பெண்ணிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்...

''என் மாட்டுப்பெண்ணின் துரைதர்பாரை என்ன சொல்றது! நேற்று கூடை நிறையப் பழங்கள் அனுப்பியிருந்தார் அவள் அப்பா... இன்று காலை ஒரு டஜன் வாழைப் பழத்தையும் நாலு மாம்பழத்தையும் கூசாமல் வேலைக்காரிக்குத் தானம் பண்ணி விட்டாள். செட்டும் சிக்கனமுமாய் இருந்தால்தானே குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வர முடியும்? இது தெரியலையே அந்த மரமண்டைக்கு...!''



அத்தியாயம் 50

"ஆபத்துதவிகள்"

இளவரசரைப் படகிலே பார்த்ததும் பார்த்திபேந்திரனுக்கு உண்டான ஆச்சரியம் சொல்லத் தரமன்று. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து தரிசனம் தந்ததுமல்லாமல் "வேண்டிய வரங்களைக் கேள்" என்று சொன்னது போலல்லவா இருக்கிறது? — எனினும், இப்படி அவர் தனியாகப் படகில் வருவதன் காரணம் என்ன? பழுவேட்டரையர்களின் கப்பல்கள் என்ன ஆயின?...... தன்னுடைய கப்பல் இது என்று தெரியாமல், ஒருவேளை இதுதான் அவரைச் சிறைப்படுத்த வந்த கப்பல் என்று எண்ணிக்கொண்டு வருகிறாரோ?

அப்படியெல்லாம் தவறான எண்ணத்துடன் வரவில்லையென்று விரைவிலேயே தெரிந்து போயிற்று. படகிலிருந்து கப்பலில் இளவரசர் ஏறியதும் பார்த்திபேந்திரன் கேட்கும் வரையில் காத்திராமல் நடந்த சம்பவங்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டார். "அராபியர் வசப்பட்ட கப்பலில் வந்தியத்தேவன் இருக்கிறான். அவனை எப்படியாவது தப்புவித்தாக வேண்டும்" என்றார்.

இளவரசர் கூறிய செய்திகள் பார்த்திபேந்திரனுக்கு மிக்க குதூகலத்தை உண்டாக்கின.

"எல்லாம் நன்றாகத்தான் முடிந்திருக்கின்றன. அந்த முரட்டுப் பிள்ளை இவ்வளவு பதற்றமாகக் காரியம் செய்யாதிருந்தால் இன்னும் நன்றாயிருந்திருக்கும். ஆயினும் அவனை அயல் நாட்டாரிடம் காட்டிக் கொடுத்து விடக் கூடாது. அந்தக் கப்பல் வெகு தூரம் போயிருக்க முடியாது. எப்படியும் துரத்திப் பிடித்து விடலாம்" என்றான்.

பிறகு கலபதியைக் கூப்பிட்டு விவரத்தைக் கூறினான்.

"அதைப் பற்றி என்ன கவலை? காற்று இப்படியே அனுகூலமாக அடித்துக் கொண்டிருந்தால் சாயங்காலத்துக்குள் பிடித்து விடலாம்! நம்மைத் தப்பி அந்தக் கப்பல் எங்கே போய்விடப் போகிறது? கோடிக்கரை சென்று பிறகு கடற்கரையோரமாகத் தானே போக வேண்டும்?" என்றான் கலபதி.

ஆனால் வாயுபகவானுடைய திருவுள்ளம் வேறு விதமாயிருந்தது. வரவரக் காற்றின் வேகம் குறைந்து வந்தது. உச்சிவேளை ஆனதும் காற்று அடியோடு நின்று விட்டது. கடல், அலை என்பதே இன்றி அமைதியடைந்திருந்தது. சொல்ல முடியாத புழுக்கம் சூழ்ந்தது. சூரிய பகவான் வானத்தில் ஜோதிப் பிழம்பாக விளங்கிக் கடல்மீது தீயைப் பொழிந்தார். கடல் நீர் தொட்டுப் பார்த்தால் சுட்டிராதுதான். ஆயினும் கடலைப் பார்க்கும்போது தண்ணீர்க் கடலாகத் தோன்றவில்லை; நன்றாகக் காய்ச்சிக் கொதித்துப் புகை எழும்பும் எண்ணெய்க் கடல் போலத் தோன்றியது. சூரிய கிரணங்கள் நேரே பிரதிபலித்த இடங்களில் உருக்கிய அக்கினிக் கடலாகவும் காணப்பட்டது.

கப்பல் அசையவில்லை. பாய் மரங்



களிலிருந்து எல்லாப் பாய்களும் நன்றாக விரிக்கப்பட்டிருந்தன. பயன் என்ன? அலைஓசை நின்றது போல் பாய் மரங்கள் சடசடவென்று அடித்துக் கொள்ளும் ஓசையும் நின்று விட்டது. பாய் மரங்களும் தூண்களும் குறுக்கு விட்டங்களும் அசையும் போது ஏற்படும் கரமுர சத்தமும் இல்லை. கப்பல் கடலைக் கிழித்துச் செல்லும் ஓசையும் இல்லை. உண்மையில் அந்த நிசப்தம் சகிக்க முடியாத வேதனையை அளித்தது.

அத்துடன் இளவரசரின் உள்ளத்தில் வந்தியத்தேவனைப் பற்றிய வேதனையும் மிகுந்தது. "இப்படிக் காற்று நின்று கப்பலும் அடியோடு நின்று விட்டதே! இப்படியே எத்தனை நேரம் இருக்கும்? காற்று எப்போது மறுபடி வரும்? அந்தக் கப்பல் தப்பித்துக் கொண்டு போய் விடாதா?" என்று கவலையுடன் கேட்டார்.

பார்த்திபேந்திரன் நாவாயின் நாயகனை நோக்கினான்.

அப்போது கலபதி "அதிக நேரம் இப்படியே காற்று அடியோடு ஓய்ந்து இருக்க முடியாது. சுழிக் காற்று எங்கேயோ உருவாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் அது வந்து நம்மைத் தாக்கினாலும் தாக்கும்; அல்லது நம்மை ஒதுக்கி விட்டுவிட்டு அப்பால் போனாலும் போய்விடும். நம்மைச் சுழிக் காற்றுத் தாக்கினாலும் தாக்காவிட்டாலும் கடல் சீக்கிரத்தில் கொந்தளிக்கப் போவது நிச்சயம். இப்போது இவ்வளவு அமைதி குடிகொண்டிருக்கிறதல்லவா? இன்று இரவுக்குள் மலை போன்ற அலைகள் எழுந்து மோதுவதைப் பார்ப்போம். மலைகளையும் பார்ப்போம்; அதல பாதாளத்தையும் பார்ப்போம்!" என்றான்.

"சுழிக்காற்று கப்பலைத் தாக்கினால் அபாயந்தான் அல்லவா?"

"சாதாரண அபாயமா? கடவுள் காப்பாற்றினால்தான் உண்டு!"

"அப்படியானால் அந்தக் கப்பலை நாம் பிடிப்பது துர்லபம்."

"இளவரசே! கடலும் காற்றும் பட்சபாதம் காட்டுவதில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைதான் அந்தக் கப்பலுக்கும் ஏற்பட்டிருக்கும். தற்சமயம் அதுவும் அசையாமல்தான் நிற்கும்..."

"ஒருவேளை கரையோரம் சென்றிருந்தால்......." என்று இளவரசர் கேட்டார்.

"கரையோரம்போயிருந்தால் அதில் உள்ளவர்கள் இறங்கிக் கரை சேர்ந்து தப்பிக்கலாம்! ஆனால் கப்பல் போனதுதான்!" என்று சொன்னான் கலபதி.

"எவ்வளவு பெரிய அபாயமாயிருந்தாலும் நமக்கு வேண்டியவர்கள் நம் பக்கத்திலிருந்தால் கவலையில்லை!" என்றார் இளவரசர். அவருடைய மனக் கண் முன்னால் வந்தியத்தேவனுடைய குதூகலம் ததும்பும் முகமும் பூங்குழலியின் மிரண்ட பார்வையுடைய முகமும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. அவர்கள் இச்சமயம் எங்கே இருப்பார்கள்? என்ன செய்து கொண்டிருப்பார்கள்? என்ன எண்ணிக் கொண்டிருப்பார்கள்?

உண்மையிலேயே அபாயம் சூழ்ந்த நிலையில் நாம் விட்டுவிட்டு வந்த வந்தியத்தேவனிடம் இப்போது நாம் செல்வோம்.

இளவரசரைச் சிறைப் பிடித்துக் கொண்டு போவதற்காக வந்த பெரிய மரக்கலத்தின் அடித் தட்டில், தட்டு முட்டுச் சாமான்களும் மரக் கட்டைகளும் மூட்டை முடிச்சுக்களும் போட்டிருந்த இருண்ட அறையில், அவன் ஒரு கட்டையுடன் சேர்த்துக் கட்டப்பட்டுக் கிடந்தான். வெகு நேரம் வரையில் அவன் பிரமை பிடித்தவன் போலிருந்தான். அவசர புத்தியினால் இத்தகைய இக்கட்டில் அகப்பட்டுக்கொண்

டோமே என்ற எண்ணம் அவனை வதைத்தது. இது என்ன கப்பல், யாருடைய கப்பல், இதில் சில முரட்டு அராபியர்களும் மந்திரவாதி ரவிதாஸனும் சேர்ந்திருப்பது எப்படி, இந்தக் கப்பல் எங்கே போகிறது, தன்னை என்னதான் செய்வார்கள் என்று யோசித்து யோசித்துப் பார்த்தும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் தன் வருங்காலத்தைப் பற்றிக் கண்டு வந்த கனவெல்லாம் உண்மையில் கனவுதான் போலும்! இதைவிடப் பெரிய கஷ்டங்களிலிருந்தெல்லாம் தான் தப்பித்திருக்கும் போது இதிலிருந்து தப்பிக்கவும் ஒருவழி கிடைக்காமலா போகும் என்ற சபலமும் சில சமயம் ஏற்பட்டது. பார்க்கலாம்; உடம்பில் உயிர் இருக்கும் வரையில், அறிவும் ஆலோசனைத் திறனும் இருக்கும் வரையில், அடியோடு நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

இந்த ஆசை தோன்றிய பிறகு சுற்று முற்றும் பார்த்தான். இருட்டில் முதலில் கண் தெரியவில்லை. வரவரத் தெரியலாயிற்று. அவனுக்குச் சமீபத்திலேயே பல வகை ஆயுதங்கள் குவிந்து கிடப்பதைக் கண்டான். அவனுடைய உடம்பை இறுக்கிக் கட்டியிருந்ததே தவிரக் கைகள் இறுக்கிக் கட்டப்படவில்லை. கைக்கட்டைத் தளர்த்திக் கொண்டு ஒரு கையை நீட்டி அங்கே கிடந்த கத்திகளில் ஒன்றை எடுக்கலாம்; உடம்பையும் கால்களையும் பிணைத்திருந்த கயிறுகளை அறுத்து விடலாம். ஆனால் பிறகு என்ன செய்வது? இந்த அறைக் கதவோ சாத்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து வெளியில் போவது எப்படி? போன பிறகு அவ்வளவு அராபியர்களுடனும் மந்திரவாதியுடனும் அவன் தோழனுடனும் சேர்ந்தாற்போல் சண்டை போட முடியுமா? — அப்படிச் சண்டை போட்டு எல்லாரையும் கொன்று விட்டாலும் அப்புறம் என்ன பண்ணுவது? கப்பலைத் தன்னந்தனியாகத் தன்னால் செலுத்த முடியுமா? கப்பலைப் பற்றிய சமாசாரம் ஒன்றுமே தனக்குத் தெரியாதே!

ஆம்; மறுபடியும் அவசரப்படக் கூடாது; பொறுத்திருந்து பார்க்க வேண்டும். தன்னை உடனே கொல்ல முயலாமல் அவர்கள் கட்டிப் போட்டிருப்பதே கொஞ்சம் நம்பிக்கைக்கு இடமளிக்கிறதல்லவா? என்னதான் செய்யப் போகிறார்கள், பார்க்கலாமே?

ஆனால் நேரமாக ஆக, வந்தியத்தேவனுடைய பொறுமை பெரிதும் சோதனைக் காளாயிற்று. அடுப்புக்குள் போட்டு அவனை வேக வைப்பது போல் அந்த அறை அவ்வளவு புழுக்கமாயிருந்தது. உடம்பில் வியர்வை வியர்த்துக் கொட்டியது. கடற் பிரயாணம் இவ்வளவு வெதுப்புவதாயிருக்கும் என்று அவன் கனவிலும் எண்ணியதில்லை. பூங்குழலியுடன் அன்றிரவு படகில் சென்றதை நினைத்துக் கொண்டான். அப்போது எப்படிக் குளிர் காற்று வீசிற்று? உடம்புக்கு எவ்வளவு இதமாயிருந்தது? அதற்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்? சுண்ணாம்புக் காளவாயில் போடுவது என்பார்களே, அதுபோல அல்லவா இருக்கிறது?

திடீரென்று ஏதோ ஒரு மாறுதலை அவன் உணர்ந்தான். ஆம்; கப்பலின் ஆட்டம் நின்று விட்டது. கப்பல் நகராமல் நின்ற நிலையில் நிற்பதாகத் தோன்றியது. புழுக்கம் இன்னும் அதிகமாயிற்று. தாகம் மிகுந்து நாவும் தொண்டையும் வறண்டன. ஏது? இனி வெகு நேரம் பொறுக்க முடியாது. கத்தியை எட்டி எடுத்து, கட்டுக்களை அறுத்துக் கொண்டு, புறப்பட்டுப் போய்ப் பார்க்க வேண்டியதுதான். கப்பலில் எங்கேயாவது குடிதண்ணீர் வைத்திராமலா இருப்பார்கள்?

வந்தியத்தேவன் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு மூலையில் சில தேங்காய்கள் கிடந்தன. ஆகா! வெண்ணெய் இருக்க நெய்க்கு அழுவானேன்? அந்தத் தேங்காய்களைக் கொண்டு பசி, தாகம் இரண்டையும் தீர்த்துக் கொள்ளலாமே?

கையின் கட்டுக்களை வந்தியத்தேவன் நன்றாய்த் தளர்த்தி விட்டுக் கொண்டான். கத்தியை எட்டி எடுக்கக் கையை நீட்டியும் விட்டான்.

அச்சமயம் காலடிச் சத்தம் கேட்டது. கதவு திறக்கும் சத்தமும் கேட்டது. நீட்டிய கையை மடக்கிக் கொண்டான்.

முன்னொரு தடவை வந்து விட்டுப் போன மந்திரவாதி ரவிதாஸனும் அவனுடைய தோழனும் உள்ளே வந்தார்கள். இருவரும் வந்தியத்தேவனுக்கு இருபுறத்திலும் நின்று கொண்டார்கள்.

"கப்பல் பிரயாணம் எப்படி, அப்பா! சுகமாயிருக்கிறதா?" என்று ரவிதாஸன் கேட்டான்.,

வந்தியத்தேவன், "தாகம் கொல்லுகிறது; கொஞ்சம் தண்ணீர்!" என்று பேச முடியாமல் பேசினான்.

"ஆ! எங்களுக்கும் தாகந்தான். அந்தப் பாவிகள் கப்பலில் தண்ணீர் வைக்கவில்லையே?" என்றான் ரவிதாஸன்.

"காளிக்கு எல்லாரையும் விட அதிக தாகமாயிருக்கிறது. இரத்த தாகம்!" என்றான் இன்னொருவன்.

வந்தியத்தேவன் திரும்பி அவனை உற்றுப் பார்த்தான்.

"என்னை ஞாபகமில்லையா, தம்பி! மறந்து விட்டாயா? கடம்பூர் அரண்மனையில் குரவைக் கூத்துக்குப் பிறகு தேவராளன் வந்து வெறியாட்டம் ஆடினானே? 'காளித்தாய் பலி கேட்கிறாள்; ஆயிரம் வருஷத்து அரச குல இரத்தம் கேட்கிறாள்' என்று ஆவேசம் வந்து சொன்னானே?......"

"ஆ! இப்போது ஞாபகம் வருகிறது! நீதான் அந்த தேவராளன்!" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

"ஆமாம்; நான்தான்! ஆயிரம் வருஷத்து அரசகுமாரனைக் காளிக்குப் பலி கொடுக்கலாம் என்றுதான் இலங்கைக்கு வந்தோம். அது சாத்தியப்படவில்லை. அந்த வீர வைஷ்ணவனை வைகுண்டத்துக்கு அனுப்பப் பார்த்தோம். அதுவும் முடியவில்லை. நீயாவது வலுவில் வந்து சேர்ந்தாயே? மிக்க சந்தோஷம். இப்போதைக்குக் குறுநில மன்னர் குலத்து இரத்தத்தோடு காளி திருப்தி அடைய வேண்டியதுதான்!" என்றான் தேவராளன்.

"அப்படியானால் ஏன் தாமதிக்கிறீர்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"வீர வாலிபனாகிய உன்னைக் கண்ட இடத்தில் பலி கொடுத்து விடலாமா! கரை சேர்ந்த பிறகு எல்லாப் பூசாரிகளையும் அழைத்து உற்சவம் கொண்டாடியல்லவா பலி கொடுக்க வேண்டும்? முக்கியமாகப் பூசாரிணி வர வேண்டுமே?"

"பூசாரிணி யார்?"

"யார் என்று உனக்குத் தெரியாதா? பழுவூர் இளையராணிதான்!"

வந்தியத்தேவன் சிறிது யோசித்து விட்டு, "உங்களுக்கு உண்மையில் அத்தகைய எண்ணம் இருந்தால் உடனே கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். இல்லாவிடில் இங்கேயே தாகத்தினால் செத்துப் போவேன்!" என்றான்.

"தண்ணீர் இல்லையே, தம்பி!"

"நீதான் மந்திரவாதியாயிற்றே?"

"நன்றாகச் சொன்னாய்! மந்திரம் போட்டிருக்கிறேன், பார்! இப்போது கப்பல் அசையாமல் நிற்கிறது தெரிகிறதல்லவா? இரவுக்குள் சுழற் காற்று அடிக்கப் போகிறது. மழையும் வரும்!"

"மழை வந்தால் எனக்கு என்ன பயன்? நீங்கள் மேல் தட்டில் இருப்பீர்கள்! நான் இங்கே......"

"நீயும் மேல் தட்டுக்கு வரலாம். நாக்கை நீட்டி நீர் அருந்தித் தாகத்தைப் போக்கிக் கொள்ளலாம். நாங்கள் சொல்கிறபடி கேட்பதாயிருந்தால்......"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"அந்த அராபியப் பிசாசுகளைச் சமுத்திரராஜனுக்குப் பலி கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்."

"ஏன்?"

"அவர்கள் கலிங்க நாட்டுக்கு இந்தக் கப்பலைக் கொண்டு போக வேண்டும் என்கிறார்கள். நாங்கள் கோடிக்கரையிலாவது நாகப்பட்டினத்திலாவது இறங்க வேண்டும் என்கிறோம்......"

"அவர்கள் ஆறு பேர், அதோடு பெரும் முரடர்களாயிருக்கிறார்



களே?''

''அவர்களில் மூன்று பேர் தூங்குகிறார்கள்; மற்ற மூன்று பேர் உறங்கி வழிகிறார்கள். நாம் மூன்று பேரும் தூங்குகிற மூன்று பேரையும் முதலில் வேலை தீர்த்து விட்டால், அப்புறம் மூன்று பேருக்கு மூன்று பேர் சமாளிக்கலாமே?''

வந்தியத்தேவன் சும்மாயிருந்தான்.

''என்ன, தம்பி, சொல்கிறாய்? எங்கள் யோசனைக்குச் சம்மதித்தால் உன் கட்டை அவிழ்த்து விடுகிறோம்.''

இளவரசரின் முகம் வந்தியத்தேவன் மனக்கண் முன்னால் வந்து நின்றது. ஆம்; அவர் இதை ஒப்புக் கொள்ள மாட்டார். தூங்குகிறவர்களைக் கொல்வதற்கு ஒரு நாளும் உடன்பட மாட்டார்.

''என்னால் முடியாது; தூங்குகிறவர்களைத் தாக்கிக் கொல்வது நீசத்தனம்.''

''முட்டாளே! சோழ நாட்டு மாலுமிகள் தூங்கிக் கொண்டிருந்தபோது தான் இந்த அராபியர்கள் அவர்களைத் தாக்கிக் கொன்றார்கள்.''

''மற்றவர்கள் இழிவான செயல் புரிந்தால் நானும் அவ்வாறு ஏன் செய்ய வேண்டும்?''

''சரி, உன் இஷ்டம்!'' என்றான் ரவிதாஸன். அருகில் கிடந்த ஆயுதக் கும்பலிலிருந்து ஒரு கூரிய பட்டாக் கத்தியை அவன் எடுத்துக் கொண்டான். தேவராளனோ, நுனியில் இரும்புப் பூண் கட்டியிருந்த சிறிய உலக்கை போன்ற தடியை எடுத்துக் கொண்டான்.

இருவரும் அங்கிருந்து சென்றார்கள். ஆனால் அறையின் கதவைச் சாத்தி வெளியில் தான் போடவில்லை.

அவர்கள் போன உடனே வந்தியத்தேவன் கையை நீட்டிக் கத்தி ஒன்றை எடுத்துத் தன்னைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்துக் கொண்டான். குதித்து எழுந்து சென்று, மூலையில் கிடந்த தேங்காய் ஒன்றை எடுத்து உடைத்தான். இளநீரை வாயில் விட்டுக் கொண்டான். மிச்சமிருந்த தேங்காய்களை ஒரு சாக்கைப் போட்டு மூடினான்.

பிறகு, போருக்குத் தகுதியான நல்ல வாள் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். எந்த நிமிஷத்திலும் வெளியில் பாய்ந்து செல்வதற்கு ஆயத்தமாயிருந்தான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் 'தட்' 'தட்' என்று இருமுறை சத்தம் கேட்டது. இரு உடல்கள் கடலில் எறியப்பட்டன என்று அறிந்து கொண்டான். உடனே பயங்கரமான பெருங் கூச்சல்; கைகலப்பு. கத்திகள் மோதும் சத்தம். — எல்லாம் மேல்



தட்டிலிருந்து வந்தன.

வந்தியத்தேவன் கையில் பிடித்த கத்தியுடன் பாய்ந்தோடினான். ரவிதாஸனையும் தேவராளனையும் மற்ற நாலு அராபியர்களும் தாக்கி நெருக்கிக் கொண்டிருந்தார்கள். நெருக்கப்பட்டவர்களின் நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருந்தது. வந்தியத்தேவன் பெருங்கூச்சல்போட்டுக் கொண்டு ஓடினான். அராபியர்களில் ஒருவன் திரும்பி அவனைத் தாக்க வந்தான். வந்தியத்தேவனுடைய கத்தி அராபியனுடைய கத்தியைத் தாக்கி அது கடலில் போய் விழச் செய்தது; அராபியனுடைய முகத்தில் ஒரு வெட்டுக் காயத்தையும் உண்டாக்கிற்று. இரத்தம் வழிந்த பயங்கர முகத்தையுடைய அராபியன் கைமுட்டியை ஓங்கிக் கொண்டு வந்தியத்தேவனுடைய மார்பில் குத்த வந்தான். வந்தியத்தேவன் சிறிது நகர்ந்து கொண்டான். அராபியன் தடாலென்று விழுந்தான். அவன் விழுந்த வேகத்தினால் இடம் பெயர்ந்த பாய்மரக் குறுக்குக் கட்டை ஒன்று அவன் தலையில் படார் என்று விழுந்தது.

இன்னோர் அராபியனோடு வந்தியத்தேவன் சிறிது நேரம் துவந்த யுத்தம் செய்து அவனைக் கடலில் தள்ளினான்.

மந்திரவாதி ரவிதாஸனும் தேவராளனும் போர்த்திறமை வாய்ந்தவர்கள் அல்ல. ஆகையால் அராபியர் இருவருடன் தனித்தனிச் சண்டை போடுவதே அவர்களுக்குக் கஷ்டமாயிருந்தது. நேரமாக ஆக களைப்படைந்து வந்தார்கள். அச்சமயம் கடலில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டு அராபியர் இருவரும் தங்கள் தோழர்களின் கதி என்னவோ என்று திரும்பிப் பார்த்தார்கள். அதுதான் சமயம் என்று ரவிதாஸனும் தேவராளனும் அவர்களைத் தீர்த்துக் கட்டினார்கள்.

எல்லாம் முடிந்ததும் வெற்றி பெற்ற மூவரும் இளைப்பாற உட்கார்ந்தார்கள்.

''அப்பனே! நல்ல சமயத்தில் வந்தாய்! எப்படி வந்தாய்?'' என்று கேட்டான் ரவிதாஸன்.

''நீ ஏதோ மந்திரம் போட்டாய் போலிருக்கிறது. என்னைக் கட்டியிருந்த கட்டுக்கள் தாமாகவே அவிழ்ந்து கொண்டன. கையில் இந்தக் கத்தி வந்து ஏறியது!'' என்றான் வந்தியத்தேவன்.

''உன் தாகம் என்ன ஆயிற்று?''

''தேங்காய் ஒன்று என் தலைக்கு மேலாக வந்தது. அதுவாக உடைத்துக் கொண்டு என் வாயில் கொஞ்சம் இளநீரை ஊற்றியது!''

''ஓகோ! நீ வெகு பொல்லாதவன்!'' என்றான் தேவராளன். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''தம்பி! உன்னைப் பரிசோதித்தோம். வேண்டுமென்றே உன் கட்டுக்களைத் தளர்த்தி விட்டிருந்தோம். ஆயுதங்களைப் பக்கத்தில் வைத்திருந்தோம். தேங்காய்களை உனக்குத் தெரியும்படி போட்டிருந்தோம்!'' என்றான் ரவிதாஸன்.

இவையெல்லாம் பொய்யா, உண்மையா என்று வந்தியத் தேவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. சற்று மௌனமாயிருந்தான்.

''அப்பனே! யோசித்துச் சொல்! நீ உயிர் பிழைக்க வேண்டுமா? பிழைத்துக் கரை சேர்ந்து உன் உற்றார் உறவினர் முகத்தைப் பார்க்க வேண்டுமா? பொருளும் போகமும் பதவியும் பட்டமும் பெற்று வாழ வேண்டுமா? விருப்பமிருந்தால் சொல்; எங்களுடன் சேர்ந்து விடு! இவ்வளவு நலங்களையும் அடையலாம்'' என்றான் ரவிதாஸன்.

''தூங்கிக் கொண்டிருந்த மனிதர்களைக் கொன்றீர்கள் அல்லவா?'' என்று வந்தியத் தேவன் கேட்டான்.

''இரண்டு பேரைத்தான் கொல்ல முடிந்தது. மற்றவன் விழித்துக் கொண்டான். நீ முன்னமே எங்களுடன் சேர்ந்திருந்தால், இன்னும் சிறிது சுலபமாய்ப் போயிருக்கும்.''

''தூங்கிக் கொண்டிருப்பவர்களைக் கொல்லுகிறது எந்த தர்மத்தில் சேர்ந்தது? அவ்விதம் செய்ய எப்படி உங்களுக்கு மனம் வந்தது?''

''இந்தக் கடுகுக்கு நீ பயப்பட்டால் பெரிய பெரிய பூசணிக்காய்களை எப்படி விழுங்குவாய்? எங்களுடன் நீ சேர்வதாயிருந்தால்....''

''உங்களுடன், உங்களுடன் என்கிறீர்களே? நீங்கள் யார்?''

ரவிதாஸன் தேவராளனைப் பார்த்து ''இனி இவனிடம் இரகசியம் தேவை இல்லை. ஒன்று, இவன் நம்முடன் சேர வேண்டும்; அல்லது கடலுக்குப் பலியாக வேண்டும். ஆகையால் இவனிடம் எல்லாம் சொல்லி விடலாமே!'' என்றான்.

''எல்லாவற்றையும் நன்றாய்ச் சொல்லு!'' என்றான் தேவராளன்.

''கேள், தம்பி! நாங்கள் வீர பாண்டிய மன்னருடைய 'ஆபத்துதவிகள்.' அவரைக் காத்து நிற்பதாக ஆணையிட்டுச் சபதம் செய்தவர்கள்....''

''உங்களால் அது முடியவில்லை! ஆதித்த கரிகாலர் வெற்றி பெற்றார்...''

''எப்படி வெற்றி பெற்றார்? ஒரு பெண் பிள்ளையின் மூடத்தனத்தினால் வெற்றி பெற்றார். அவள் தன் மோக வலையின் சக்தியில் அதிக நம்பிக்கை வைத்திருந்தாள். அந்தச் சோழ குல நாகப் பாம்பைத் தன்னால் படம் எடுத்து ஆடச் செய்ய முடியும் என்று நம்பினாள். பாம்பு படம் எடுத்து ஆடத்தான் ஆடியது. ஆனால் அதன் விஷப் பல்லின் சக்தியை நடுவில் காட்டி விட்டது. எங்கள் மன்னரின் தலை புழுதியில் உருண்டது. தஞ்சாவூர் வரையில் கொண்டு போனார்கள். தலையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் விட்டார்கள்! ஆகா! தஞ்சாவூர்! தஞ்சாவூர்! அந்த நகரம் அடையப் போகிற கதியைப் பார்த்துக் கொண்டிரு தம்பி!''

இவ்விதம் கூறிய போது ரவிதாஸனுடைய சிவந்த அகன்ற கண்கள் மேலும் அகன்று அனலைக் கக்கின. அவனுடைய உடல் நடுங்கியது. பல் வரிசைகள் ஒன்றோடு ஒன்று உராயும் சத்தம் நறநறவென்று பயங்கரமாய்க் கேட்டது. தேவராளனுடைய தோற்றமும் அவ்விதமே கோரமாக மாறியது.

''போனது போயிற்று. அதற்காக இனி மேல் என்ன செய்யப் போகிறீர்கள்? இறந்துபோன வீர பாண்டியனை

அருள்வாக்கு



பிள்ளையார் யானைக்கு யானை; குழந்தைக்குக் குழந்தை. அதனால் அவரை எத்தனை பார்த்தாலும் போதும் என்ற திருப்தி உண்டாவதில்லை. கள்ளம் கபடம் இல்லாத குழந்தை மனசு அவருக்கு. குழந்தை போல் நல்ல உள்ளம். யானை மாதிரி தேக பலம், புத்தி கூர்மை எல்லாவற்றுக்கும் மேலாகத் தெவிட்டாத அழகு: ஆனந்தம் பொங்கிக் கொண்டிருக்கிற ரூபம்.

சேராததெல்லாம் அவரிடம் ஸ்வபாவமாகச் சேருகிறது. கழுத்துக்குக் கீழே குழந்தை; மனித வர்க்கம். மேலே முகம் யானை. மிருக வர்க்கம். ஆனால் அவர் வாஸ்தவத்தில் தேவ வர்க்கம். தேவர்களுக்குள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இருக்கிறார்.

குழந்தையாக இருந்து கொண்டே மஹா பெரிய தத்துவங்களுக்கு ரூபகமாக (personification) இருக்கிற பிள்ளையாரிடம் பல தினுசான மாறுபாடுகள் (Contrasts). இதிலே ஓர் அழகு. வித்தியாசமானதெல்லாம் அவரிடம் சேர்ந்திருப்பதாலேயே அவரிடம் எல்லாம் ஐக்கியம் என்று கிறது. உதாரணமாக, ஒரு கையில் ஒடிந்த தந்தம் என்றால், இன்னொரு கையிலே கொழுக்கட்டை வைத்திருக்கிறார். அதற்குள் தித்திப்பாக இருக்கிற வஸ்துவுக்குப் பெயர் பூர்ணம். பூர்ணம் என்றால் முழுமை. ஒரு கையில் இருக்கிற தந்தம் மூளி. இன்னொன்றிலோ முழுமை. எல்லாம் நிறைந்த பூரணப் பொருள் பிள்ளையாரேதான். இதை அறிந்து கொள்வதுதான் பேரானந்தம். ஆனந்தத்துக்கு இன்னொரு பெயர் மோதம், மோதகம். கொழுக்கட்டைக்கும் மோதகம் என்றே பெயர்.

இன்னொரு மாறுபாடு. பிள்ளையார் குழந்தை. அதனால் பிரம்மச்சாரி. ஆனால் இவர் யானையாக வந்து வள்ளியை மிரட்டியதால்தான் அவள் ஸுப்ரமண்ய ஸ்வாமியைக் கல்யாணம் செய்து கொண்டாள். இன்றைக்கும் கல்யாணம் ஆக வேண்டுமானால் இந்தக் கட்டை பிரம்மச்சாரியை வேண்டிக் கொள்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? அவர் இருக்கிற நிலையில் அவருக்கு வேண்டாததையெல்லாம் கூட, அவர் நிலைக்கு மாறாக இருக்கிற நமக்குப் பரம கருணையோடு கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கி விடுகிறார்.

தாம் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமலே இருந்தாலும், பக்தர்களை ஒரே தூக்காகத் தூக்கி உச்சத்தில் சேர்த்து விடுவார். அவ்வையாரை இப்படித்தான் கடைசியில், தாம் இருக்கிற இடத்திலிருந்தே தும்பிக்கையால் ஒரு தூக்குத் தூக்கிக் கைலாஸத்திலேயே கொண்டு சேர்த்து விட்டார்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உயிர்ப்பிக்க முடியுமா?''

''வீரபாண்டியரை உயிர்ப்பிக்க முடியாது. அவ்வளவு சக்தி என்னுடைய மந்திரத்துக்குக் கூடக் கிடையாது. ஆனால், அவரைக் கொன்றவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பூண்டோடு அழித்துப் பழிக்குப் பழி வாங்குவோம். சோழ குலப் பாம்பு வர்க்கத்தைக் குஞ்சு குழந்தைகள் உள்பட நாசம் செய்வோம். எங்களுடன் நீ சேருகிறாயா? சொல்!''

''சோழ குலத்தை நாசம் செய்த பிறகு? அப்புறம் என்ன செய்வீர்கள்?''

''எங்கள் மகாராணி யாருக்குப் பட்டம் சூட்டச் சொல்கிறாளோ, அவனுக்குச் சூட்டுவோம்.....''

''மகாராணி யார்?''

''தெரியாதா, தம்பி! பழுவூர் இளைய ராணியாக இப்போது நடிப்பவள்தான்!''

''அப்படியானால் ம து ரா ந் த கருக்கு....''

''அவனும் ஒரு பாம்புக் குட்டி தானே?''

''பழுவேட்டரையர்?.....''

''ஆ! அந்தக் கிழவனை எங்கள் அரசனாக்குவோம் என்று நினைக்கிறாய்? அவனுடைய செல்வாக்கையும் பணத்தையும் உபயோகப்படுத்துவதற்காக....''

''உங்கள் மகாராணி அவன் வீட்டில் இருக்கிறாளாக்கும்!''

''நன்றாகத் தெரிந்து கொண்டாயே? நல்ல யூகசாலி நீ!''

''வீர பாண்டியனுடைய மரணத்துக்குக் காரணம் ஒரு பெண்பிள்ளை

என்று சொன்னீர்களே?''

''அதுவும் பழுவூர் ராணிதான்! போரில் காயம்பட்டுக் கிடந்த வீர பாண்டியரைத் தான் காப்பாற்றுவதாக அவள் வாக்களித்தாள். அதை நிறைவேற்றவில்லை. அவளே துரோகம் செய்து விட்டாள் என்று நினைத்து அவளை உயிருடன் கொளுத்த நினைத்தோம். பழிக்குப் பழி வாங்குவதாக எங்களுடன் சேர்ந்து அவளும் சபதம் செய்தபடியால் அவளை உயிரோடு விட்டோம். இன்று வரையில் அவள் வாக்கை நிறைவேற்றி வருகிறாள். ஓ! அவளுடைய உதவி மட்டும் இல்லாவிட்டால் நாங்கள் இவ்வளவு செய்திருக்க முடியாது.''

''இன்னும் நீங்கள் ஒன்றும் சாதித்துவிடவில்லையே?''

''கொஞ்சம் பொறு! அப்பனே! பார்த்துக் கொண்டேயிரு!'' என்றான் ரவிதாஸன்.

''நம்மிடமிருந்து இவன் எல்லாம் தெரிந்து கொண்டான். நாம் கேட்டதற்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றான் தேவராளன்.

''தம்பி! என்ன சொல்கிறாய்? எங்களுடன் சேர்கிறாயா! யார் கண்டது? உனக்கே ஒருவேளை அதிர்ஷ்டம் அடிக்கலாம். நீயே ஒருவேளை தென் தமிழகத்தின் வீர சிம்மாசனத்தில் ஏறினாலும் ஏறலாம். என்ன சொல்கிறாய்?''

சில காலத்துக்கு முன்னே யென்றால் வந்தியத்தேவன் ''ஆஹா! உங்களுடன் சேர்கிறேன்!'' என்று சொல்லியிருப்பான். ஆனால் இளவரசருடன் மூன்று நாள் பழகியது அவனுடைய மனப்போக்கில் ஒரு பெரிய மாறுதலை உண்டுபண்ணியிருந்தது. பொய் புனை சுருட்டுகள், சமயோசித தந்திரங்கள்— இவற்றில் அவனுக்குப் பற்று விட்டுப் போயிருந்தது. ஆகையால் பேச்சை மாற்ற விரும்பி, ''இந்தக் கப்பலை எப்படிப் பிடித்தீர்கள்? சற்று முன் யமனுலகுக்கு அனுப்பிய அரபு நாட்டாருடன் எப்படிச் சினேகமானீர்கள்!'' என்று கேட்டான்.

''எல்லாம் என்னுடைய மந்திர சக்தி, அப்பனே! திரிகோண மலையில் இவர்களிடமிருந்துதான் நாங்கள் குதிரைகளை விலைக்கு வாங்கினோம். அந்தக் குதிரைகளைக் கொண்டுதான் உங்களைத் தொடர்ந்து முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தோம். யானை இறவுத் துறையில் இளவரசர் இறங்கி ஓடியதைப் பார்த்தோம். அவருக்கு முன்னால் இங்கு வந்துவிடத் தீர்மானித்துக் குறுக்கு வழியில் வந்து சேர்ந்தோம். இங்கே வந்து பார்த்தால், எங்கள் பழைய சிநேகிதர்கள் இந்தக் கப்பலைக் கைப்பற்றியிருந்தார்கள். அவர்கள் ஏறி வந்த கப்பல் முல்லைத் தீவுக்கு அருகில் கரைதட்டி உடைந்து போய் விட்டதாம். இங்கே ஒளிந்திருந்து இந்தக் கப்பலைக் கைப்பற்றிக் கொண்டார்கள். கடலோரத்தில் வழிகாட்டுவதற்காக எங்களையும் வருகிறீர்களா என்று கேட்டார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.''

''அது எப்படி?''

''அந்தச் சோழ குலத்து இளநாகம் சோழசேநாதிபதியுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டோம். எப்படியும் சோழ நாட்டுக்கு அவன் திரும்பி வந்து சேர்வான் என்று அறிந்து கொண்டோம். அது மட்டுமல்ல, தம்பி! இலங்கையில் ஊமைப் பெண் பூதம் ஒன்று இருக்கிறது. அந்தப் பூதம் எங்கள் மந்திரத்துக்குப் பதில் மந்திரம் போட்டு அருள்மொழி வர்மனைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. ஆனால் சோழ நாட்டுக்கு அது வராது....''

வந்தியத்தேவன் அன்றிரவு அநுராதபுரத்தில் நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

ரவிதாஸன் திடீரென்று சிரித்தான்.

''இது என்ன சிரிப்பு? எதைக் கண்டு?'' என்றான் வந்தியத்தேவன்.

''ஒன்றுமில்லை, தம்பி! இந்த அரபு நாட்டாரின் சுபாவத்தை எண்ணினேன். சிரிப்பு வந்தது. இவர்கள் இவ்வளவு முரட்டு மனிதர்கள் அல்லவா? மனிதர்களைக் கொல்வது இவர்களுக்கு வாழைக் காயை அரிவது போன்றது. ஆனால் குதிரைகளிடம் இவர்களுக்கு அளவில்லாத அபிமா

னம். குதிரைகளின் கால் குளம்பில் இரும்புப் பூண் அடித்துத்தான் அவர்கள் நாட்டில் குதிரைகளை ஓட்டுவார்களாம். நாம் குதிரைகளை வெறுங் காலுடன் ஓடச் செய்கிறோமாம். அதனால் நாம் கருணையற்ற, அநாகரிக, மிருகங்களுக்கும் கேடான மனிதர்களாம்! நம்மிடம் குதிரைகளை விற்பதே பாவமாம்!..... இன்று காலையில் என்ன நடந்தது, தெரியுமா?........''

''சொல்லுங்கள்!''

''கப்பலில் எல்லாரும் ஏறிக் கொண்டோம். பாய்மரங்களை விரித்தோம். கப்பல் கிளம்பி விட்டது. அப்போது கரையில் ஒரு குதிரையின் காலடிச் சத்தம் கேட்டது. அவ்வளவுதான். முல்லைத் தீவில் உடைந்த கப்பலிலிருந்து தப்பிக் கரையேறிய அவர்களுடைய குதிரைகளில் ஒன்றாயிருக்கலாம் என்று சந்தேகித்தார்கள். அவர்களில் ஒருவன் கப்பலிலிருந்து இறங்கிப் பார்த்து விட்டுத்தான் வருவேன் என்றான். எங்களையும் அவனுடன் சேர்த்து அனுப்பினார்கள்....''

''பிறகு?''

''குதிரை அகப்படவில்லை, தம்பி! நீ அகப்பட்டாய்! எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று, பார்! இந்தக் குதிரைப் பிரியர்களை வேலை தீர்ப்பதற்கு எவ்வளவு செளகரியமாய்ப் போயிற்று?''

''எல்லாம் சரிதான்; இந்தப் பிள்ளை நம்முடைய கேள்விக்கு இன்னும் விடை சொல்லவில்லை'' என்று ஞாபகப்படுத்தினான் தேவராளன்.

''சொல்லுகிறேன், ஐயா! சொல்லுகிறேன். நான் சோழ குலத்திற்கு ஊழியம் செய்ய ஏற்றுக் கொண்டவன். ஒரு நாளும் உங்களுடன் சேரமாட்டேன்....''

''வேளக்காரப் படையைச் சேர்ந்திருக்கிறாயா? சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாயா!''

''அதெல்லாம் இல்லை.''


''பின்னே என்ன தயக்கம்? நீ போர் வீரன். எந்தக் கட்சியில் அதிக அநுகூலம் இருக்கிறதோ, அதில் சேர வேண்டியது தானே!''

சோழ குலத்தாருடன் உறவு பூணுவதற்கு எல்லாச் சபதங்களைக் காட்டிலும் பலம் அதிகம் கொண்ட காரணம் தனக்கு இருக்கிறது என்பதை வந்தியத்தேவன் அவர்களிடம் சொல்லவில்லை. இளைய பிராட்டியின் கடைக்கண் பார்வையையும் முல்லை நிகர்ப் புன்னகையையும் காட்டிலும் சோழ குலத்தாருக்கு உயிரைக் கொடுக்க வேறு காரணம் தனக்கு வேண்டுமா? அப்புறம் இளவரசரின் இணையில்லா சிநேகம் வேறு இருக்கிறது! அவருடன் ஒரு தடவை சிநேகமானவன் மறுபடி மாற முடியுமா?

''எது எப்படியிருந்தாலும், உங்களுடைய கொலைகாரக் கூட்டத்தில் நான் சேர மாட்டேன்!'' என்றான் வந்தியத்தேவன்.

''அப்படியானால் உன் உயிரைச் சமுத்திர ராஜனுக்குப் பலியிட ஆயத்தப்படு!'' என்றான் ரவிதாஸன்.

(தொடரும்)



பிக்பாக்கெட் ஜாக்கிரதை!

குப்'பென்று வியர்த்தது அந்தப் பெரியவருக்கு.

பரபரப்புடன் தமது 'அண்டர்வேர்' பாக்கெட்டைத் தொட்டார். அதே வேகத்தில் அதன் உள்ளே கைகளை விட்டார்.

கைகள், போன வேகத்தில் பாக்கெட்டின் அடிப்பாகத்தின் வழியே நான்கு விரல்கள் வெளியே வந்தன. அடி மனம் பகீரென்றது.

"ஐயோ, என் பணம்... என் பணம்... என் பணத்தைக் காணோம்...!" — சுற்றிலும் அரக்கப் பரக்கப் பார்த்துக் கொண்டே கத்தினார்.

"என்ன... என்னாச்சு....?"

"பணமா... காணோமா....?"

"பிக்பாக்கெட், பிக்பாக்கெட்...!"

— பஸ்ஸுக்குள் இருந்தவர்கள் அனைவரும் பரபரப்படைந்தனர். முன்புறம் 'டிக்கெட்... டிக்கெட்' என்று கூவிக் கொண்டிருந்த கண்டக்டர் 'பிக்பாக்கெட்' என்று வித்தியாசமான கூக்குரல்கள் வண்டியின் நடுமையத்தில் எழுவதையும், அந்த இடத்தின் பரபரப்பையும் கண்டு சற்றுத் திடுக்கிட்டு, டிரைவருக்கு விசிலடித்து விட்டுப் பயணிகளை விலக்கியபடி அந்த இடத்தை நோக்கி விரைந்தார்.

பஸ் நின்றது.

"என்னய்யா... என்ன ஆச்சு...?"

"சார்... என் பணம்... பணம்... பணத்தை யாரோ... பிக்பாக்கெட் அடிச்சுட்டாங்க...! இருநூறு ரூபாய், இந்தப் பாக்கெட்லதான் வச்சிருந்தேன்... இப்ப... பாக்கெட்..."

— அவருடைய கைகள் மடித்துக் கட்டிய வேட்டியோடு கிழிந்து தொங்கிய 'அண்டர்வேர்' பாக்கெட்டைக் காட்ட, தடுமாற்றத்தால் குரல் பிசிறடித்தது. அந்த அண்டர்வேர் பாக்கெட்டின் அடிப்பாகத்தில் 'நாலு' இஞ்ச் நீளத்திற்கு யாரோ 'பிளேடால்' கோடு கிழித்திருக்க, பாக்கெட் காலியாகியிருந்தது. பஸ்ஸில் கூட்டம் மொத்தமும் அதன் நடுமையத்திற்குத் தாவியது.

பெரியவர் திரு திருவென விழித்தபடி பணம் கீழே ஏதாவது விழுந்திருக்காதா என்ற நப்பாசையுடன் குனிந்து தேடினார்.

அவர் தேட, கண்டக்டர் கத்தினார்.

"யோவ்... இனி தேடி என்னய்யா பிரயோஜனம்...? அவன்க இப்ப யார் சட்டைக்குப் பிளேடு போட்டுட்டிருக்கான்களோ...? அதுசரி, பாக்கெட்ல பணம் எவ்வளவு வச்சிருந்தே...? இருநூறு ரூபாயா...?"

"ஆமாங்க...

— பெரியவர் இதைச் சொல்லும் பொழுதே அழுதுவிடுவார் போலிருந்தது.

"சரி, சரி, பெரியவரே... இனி என்ன செய்யறது, போலீஸ் ஸ்டேஷன்ல போய்க் கம்ப்ளெய்ண்ட் கொடுத்துடறியா...?"

"சரிங்க...!" — பெரியவர் பலமாய்த் தலையாட்டினார்.

கண்டக்டர் விசில் கொடுக்க, வண்டி புறப்பட்டது.

போலீஸ் ஸ்டேஷனில் பஸ் சென்று நிற்க, கண்டக்டரும் டிரைவரும் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, அங்கிருந்த கான்ஸ்டபிளிடம் விஷயத்தைச் சொன்னார்கள். கான்ஸ்டபிள் கேட்டார்.

"உங்க வண்டி ரூட் நெம்பர் என்னய்யா...?"

"23—C ங்க..."

"அப்ப, நீங்க சாட்சிக் கையெழுத்துப் போட்டுட்டுப் போங்க... நான் இவரை விசாரிச்சுக்கறேன்...!"

"சரிங்க..."

— கண்டக்டர், டிரைவர் இருவரும் ஒரு சேரத் தலையாட்டினர்.

அவர்களை அனுப்பி வைத்துவிட்டு கான்ஸ்டபிள் பணம் பறிகொடுத்த பெரியவரைப் பார்த்தார்.

"உன் பேரென்னய்யா...?"

"சின்னச்சாமிங்க...!"

"உன் அப்பா பேரு...?"

"பெரியசாமிங்க...!"

"அட்ரஸ்...?"

"24, அம்மையப்பன் தெரு, சாலமன் பேட்டைங்க...!"

"வீட்லேயிருந்து வரும்போது பாக்கெட்ல எவ்வளவு பணம் வச்சிருந்தே...?"

காசு.வேலாயுதன்

''இருநூறு ரூபாய்ங்க...!''

''இருநூறு ரூபாயை எப்படி வச்சிருந்தே...?''

''மடிச்சு வச்சிருந்தேன்...!''

— கான்ஸ்டபிள் முறைத்தார். பெரியவர் 'தப்பாக' ஏதாவது சொல்லி விட்டோமோ என்று தெளிந்தார்.

''நான் அதைக் கேட்கலேய்யா... இருநூறு ரூபாயை எத்தனே எத்தனே ரூபா நோட்டா வைச்சிருந்தே...?''

''ஓ... அதைக் கேட்டீங்களா...? அது ஒரு நூறு ரூபாய், ஒரு அம்பது, அஞ்சு பத்து ரூபாய்ங்க...!''

''ம், அப்புறம்... எந்த இடத்துல உன் பணம் பறிபோனது உனக்குத் தெரிஞ்சுது...?''

''பத்தமடைக்கு அடுத்த ஸ்டாப்பிங்குலேங்க...!''


''எந்தப் பாக்கெட்ல பணத்தை வச்சிருந்தே...?''


''அண்டர்வேர்லேங்க...!''

''பணத்தைப் பாக்கெட்ல போடும்போது பாக்கெட் கிழிசல் எதுவும் இருந்ததா...?''

''நல்லாத்தான் இருந்துச்சு... அதுவும் அண்டர்வேர் தைச்சு நாலு நாள்தாங்க ஆச்சு...!''

''ம்... அதுசரி, இப்ப உங்கிட்ட





நிருபர்: நீங்க நடிச்ச ரோலைப் பார்த்து நீங்களே அழறீங்களே... ஏன்?

நடிகை: இன்னமும் அந்த ரோலில் நடிச்சதுக்குக் காசு வரலே... அதான்...

— ராஜிராதா.

மீதம் எவ்வளவு பணமிருக்கு....?''

''அதுல, இனி சல்லிக்காசு கூட இல்லீங்க...!''

''என்னய்யா, பொய் சொல்றியா...?''

''நான்... அண்டர்வேர்ல ஒண்ணும் இல்லேன்னு சொன்னேங்க... ஹி... ஹி...

— அசடு வழிந்தார் பெரியவர்.

''ம்... சரி, சரி... 'கேஸ்' எழுதணும். பேப்பர் வேணும்... நீ என்ன செய்யறே, கடைக்குப் போயி சீக்கிரமா ஒரு 'குயர்' பேப்பரும்; ஒரு 'பாய்ண்ட் ரீபிள்' பேனாவும், ஒரு பவுண்ட்டன் பேனாவும் வாங்கிட்டு வா...!

— கான்ஸ்டபிள் உத்தரவிட,

பெரியவர் தயக்கத்துடன் எழுந்து போனார்.

ஒரு குயர் பேப்பர் மூன்று ரூபாய்; பால் பாய்ண்ட் பேனா ஐந்து ரூபாய்; பவுண்ட்டன் பேனா ஏழு ரூபாய்...

— மொத்தம் பதினைந்து ரூபாய்ச் செலவைத் தாங்கிப் பெரியவர் ஸ்டேஷனுள் நுழைந்தபோது, கான்ஸ்டபிள் டேபிளைச் சுற்றி நான்கைந்து பேர் உட்கார்ந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தனர். இவரைக் கண்டதும் கான்ஸ்டபிள்,

''வாய்யா, வா... நான் சொன்ன அய்ட்டமெல்லாம் வாங்கிட்டு வந்துட்டியா... அதை இப்படி டேபிள்ல வச்சுடு...!''

— என்றவர், டேபிளில் வைத்த பொருட்களை மேலோட்டமாக ஆராய்ந்து விட்டு, திருப்தியளித்ததற்கு அடையாளமாக அந்த 'பால் பாயிண்ட்' பேனாவை எடுத்து அதன் தலையில் அலட்சியமாக இரண்டு தட்டுத் தட்டிச் சரிபார்த்துத் தமது சட்டைப் பையில் செருகிக் கொண்டார்.

பின்பு, சுற்றிலும் அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து,

''ஆங்... சொல்ல மறந்துட்டேனே... இவர் பேர் சின்னச்சாமி... இவரோட பணம் இருநூறு ரூபாயை எந்தக் கேடிப் பயலோ பிக்பாக்கெட் அடிச்சுட்டான். பாவம், இருந்திருந்து இந்த வயசானவர் கிட்டே போய்த் தன் கைவரிசையைக் காட்டியிருக்கான் பாருங்க...!''

— அங்கலாய்க்கும் பாணியில் முகத்தை வைத்துக் கொண்டு கூறினார்.

''த்சொ... த்சொ...!'' — பார்வைக்குச் சம்பந்தமில்லாத விதத்தில் அனைவரும் ஒரே சமயத்தில் சப்புக் கொட்டிக் கொண்டனர்.

அதிலொருவர்,

''பெரியவரே, நம்ம ஏட்டைய்யா ஜே. எஸ். ஆர் கிட்டே ரிப்போர்ட் பண்ணிட்டீங்கல்ல... இனி கவலையை விடுங்க... கண்டிப்பா எப்படியும் பணத்தைக் கைப்பற்றிடுவாரு... இவர்கிட்டே எந்தக் கேடிப்பயலும் வாலாட்டினதாச் சரித்திரமே கிடையாது!''

— அந்தக் கான்ஸ்டபிளுக்கு ஒரு கான்டக்ட் சர்ட்டிபிகேட் கொடுத்தார். பெரியவர் சிரிப்பைக் கட்டாயப்படுத்தி வரவழைத்துக் கொண்டு லேசாகச் சிரித்தார்.

''சரி பெரியவரே... எதிர்த்தாப்புல இருக்கிற நாயர்கடையில ஆறு காப்பியும், ஒரு டஜன் முட்டை பஜ்ஜியும் வாங்கிட்டு வா... ஸ்டேஷனுக்குன்னு சொல்லு...!''

— அவரின் சின்னச் சிரிப்புக்கு ஒரு சிறந்த வேலை கொடுத்தார் கான்ஸ்டபிள். பெரியவர் சிறிதே யோசித்து விட்டு வெளியேறினார்.

சிறிது நேரத்தில் —

கான்ஸ்டபிள் சொன்ன அய்ட்டங்கள் பரிமாறப்பட்டன. பெரியவர் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்க, அனைவரும் அதை ருசித்தனர்.

டீக்கடைப் பையன் தம்ளர்களை எடுத்துக் கொண்டு தயங்கி நிற்க, கான்ஸ்டபிள் பெரியவரைப் பார்த்து,

''யோவ், டீக்கடைக்குக் காசு கொடுக்கலியா...?'' என்று கேட்டார்.

''இல்லீங்க...!''

''அப்புறம் எதுக்கய்யா உன்னை அனுப்பினேன்...? காசைக் கொடுத்து விடுய்யா, இதெல்லாம் உனக்குச் சொல்லணுமா...?''

— என்று அதிகாரத் தொனியில் கூறியவர், டீக்கடைப் பையனை நோக்கித் திரும்பி,

''எவ்வளவுடா...?''

''பதினெட்டு ரூவாய்ங்க...!''

— கான்ஸ்டபிள் மீண்டும் பார்வையைப் பெரியவர் பக்கம் திருப்ப, பெரியவர் தம் விதியை நொந்தபடி பணத்தை எடுத்து நீட்டினார்.

அவன் அதை வாங்கிக் கொண்டு அகல, அவர்கள் பேச்சைத் தொடர்ந்தனர். பெரியவர் வெளியே சென்று நின்று கொண்டார். அவர்களின் பேச்சு அரை மணி நேரத்திற்கும் மேல் நீடித்தது.

அவர்கள் அனைவரும் விடைபெற்றுச் சென்றதும்—

வெளியே நின்ற பெரியவரை அழைத்தார் கான்ஸ்டபிள்.

''யோவ்... உன்னோட கேஸை எழுதி எஃப். ஐ. ஆர். போட்டுட்டேன். சீக்கிரமா குற்றவாளியைக் கண்டுபிடிச்சுடுவோம். இதுல ஒரு கையெழுத்துப் போடு...'' — என்றபடி ஒரு பேப்பரை நீட்டினார். பெரியவர் அதன் கீழே கையெழுத்திட்டார்.

''அப்புறம் பெரியவரே, இந்தக் கேஸ்

தன்னம்பிக்கை



ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள். எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும் போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

ஆனால் நம்மில் பலர் ஓரளவு கல்வித் தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமும், முறையான பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான முக்கியமான காரணங்களாகும்.

உங்களது இத்தயக்கத்தைப் போக்கி நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத விவேகானந்தா கல்வி நிலையத்தினர் தபால் மூலம் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இப்பயிற்சியைப் பற்றி மேலும் தகவல் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதி இலவசமாக தகவல் புத்தகத்தைப் பெற்றுப் பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd)
9, மேட்லி ரோடு, தி. நகர், சென்னை-600 017



அமைச்சர்: இந்த நிதியாண்டில் மட்டும் சுமார் 31 கோடியே 40 லட்சம் மதிப்புள்ள 2413 சிறு பாலங்களும் 16 கோடியே 60 லட்சம் மதிப்புள்ள 30 பெரிய பாலங்களும் உடைக்கப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்!''

— கடுவை கோபால்சாமி

சம்பந்தமா குற்றவாளியத் தேடிப் பிடிக்க நானும் எஸ். ஐ.-யும் நிறைய இடம் சுற்றணும். அதுக்கு ஒரு அம்பது ரூபா கொடுத்துட்டுப் போ...!''

— சர்வ அலட்சியமாய்ச் சொன்னார். பெரியவர் அதிர்ந்தார். அவருக்கு இந்த கான்ஸ்டபிளின் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. இருந்தாலும் அதை அவரிடம் காட்ட முடியுமா...? அவர் மேல் சிடு, சிடுத்தால் தம் காரியம் கெட்டுப் போவதல்லாது, தம் மேலேயே ஒரு 'பொய்க் கேஸ்' ஜோடனை செய்ய எவ்வளவு நேரம் ஆகும்! 'சேலை மீது முள் விழுந்தாலும், முள் மீது சேலை விழுந்தாலும் நஷ்டம் சேலைக்குத் தானேயொழிய முள்ளுக்கல்லவே...!'

— எனவே ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு,

''ஐயா நான் பாலக்கரை போய்ச் சேரணும்... என் பொண்ணு நிச்சயதார்த்தத்துக்குத் துணிமணி எடுக்க டவுனுக்கு வந்தேன். இனி இருக்கிறதே வெறும் அம்பது ரூபா சொச்சம்தான்... அதையும் உங்களுக்குக் கொடுத்திட்டேன்னு நான்...!''

— தயங்கினார்.

அவர் இதைச் சொன்னதுதான் தாமதம், கான்ஸ்டபிளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''யோவ்... காரியம் ஆகணும்ன்னு எல்லாச் செலவும் செய்துதான் ஆகணும்... கேஸு, ஸ்டேஷன்னு வந்துட்டா செலவை யெல்லாம் கண்டுக்கவே கூடாது... இப்ப கேஸ் வேறே எழுதிட்டேன். இனி எஸ். ஐ. வந்து கேஸோட மாமூலக் கேட்டா நான் என்ன பதில் சொல்றதாம்...?''

— என்று அதட்டலாகக் கேட்டுக் கொண்டே எழுந்தவர், அவர் பாக்கெட்டில் கைகளை விட்டு ஐம்பது ரூபாய்த் தாளை உரிமையுடன் எடுத்துத் தம் பாக்கெட்டில் செருகிக் கொண்டார்.

''சரி, சரி... நீ போ... உன் வீட்டுக்குச் சொல்லி அனுப்புவோம், அப்புறம் கோர்ட்ல ஆஜர் ஆகிப் பணத்தை வாங்கிக்கலாம்...!''

— குற்றவாளியைப் பிடிக்காமலேயே, பிடித்து ஜெயிலில் போட்டது போல் மீண்டும் அதிகாரத் தொனியில் உத்தரவிட்டார்.

''அப்ப... என் பணம்...!''

''அதுதான் கிடைச்சிடும்ன்னு சொல்றேனலய்யா...!''

— சாதாரணமாய்ப் பேசியவர் இப்போது கத்தினார். அவருடைய கத்தலுக்கு அர்த்தம் கண்டு கொண்டவர் போல் தம்மை விட்டால் போதும் என்ற எண்ணத்தில் திரும்பி ஓட்டமாக நடக்க ஆரம்பித்தார் பெரியவர்.

அன்று இரவு —

எஸ். ஐ. அவருடைய ஆசனத்தில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு காது குடைந்தபடி அமர்ந்திருந்தார்.

''ஐயா...!''

''யாருடா அது...?''

''நான்தானுங்க கண்ணுசாமி...!'' — என்றபடி உள்ளே நுழைந்தான் ஒருவன்.

''அட, கேடி கண்ணுசாமியா... ம், வாடா வா...! இன்றைக்கு மாமூல் கொண்டு வந்திருக்கியா...?''

— அவன் நெற்றி சுருங்கச் சோகமாய்,

''எங்கீங்க ஐயா... இன்னெக்கு ஒரே ஒரு சாவுகிராக்கிதான் அகப்பட்டது. அந்த இருபத்தி மூணு 'சி' கண்டக்டர் படுமோசம். என்னை அடையாளம் தெரிஞ்சு வச்சுப் பயணிகளை உஷார்ப்படுத்திட்டான். ஒரே ஒரு கிழவன்தான் வசமாக் கிடைச்சான்...!''

''அப்படியா... சரி சரி கொண்டு வந்த மாமூலை எடு...!''

''இந்தாங்க ஐயா...!'' — ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினான்.

''ஏண்டா ஐம்பது ரூபாய்...?''

''எழுபத்தஞ்சு ரூபாதான் கிடைச்சது. அப்புறம் அம்பது ரூபா கொடுக்காம நூறு ரூபாயா கொடுக்க முடியும்...?''

'பளார்...'

— அவன் சொல்லச் சொல்ல எஸ். ஐ. விட்ட அறையில் அந்தக் கண்ணுச்சாமியின் கன்னம் அதிர்ந்தது.

''ஏண்டா திருட்டுப்பயலே... இருநூறு ரூபாயை அடிச்சுட்டு, எழுவத்தி அஞ்சு ரூபாய்ன்னு பொய் சொல்றியாடா... உன்னோட கேஸே இங்கேதான் 'புக்'காகியிருக்கு. மரியாதையா எடுடா நம்ம மாமூலை...!''

கண்ணுசாமி பயந்து நடுங்கினான். ஒரு கையால் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு மறு கையால் பாக்கெட்டிலிருந்து மேலும் ஒரு நூறு ரூபாயை எடுத்து அவரிடம் நீட்டினான்.

''திருட்டு ராஸ்கல்... இனிமே ஏதாவது இப்படி 'டாவடி'ச்சே, கேஸ் புக் பண்ணி ஒரு வருஷம் உள்ளே தள்ளிடுவேன்... ஓடுடா நாயே...!''

— அதைப் பெற்றுக் கொண்டு கர்ஜித்தார்.

கண்ணுசாமி 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று நினைத்தான் போலும்! திரும்பி நடக்க ஆரம்பித்தான்.

வேரில்லாத மரங்கள்

20

தூக்கத்தில் குழந்தை காலைத் தூக்கி வயிற்றின்மீது போட, பரிமளம் தடக்கென்று விழித்துக் கொண்டார்.

படுத்தபடியே தலையைப் பின்னுக்குச் சாய்த்து, சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்க்க, அது மணி இரண்டரை என்றது.

ஏகவே, நேரம் போனது தெரியாமல் அது என்ன உறக்கம்!

லொங்கு லொங்கென்று நாள் முழுதும் நிமிஷம் உட்காராமல் உழைப்பதாலோ என்னவோ, தலையைச் சாய்த்தால் கண்களை உறக்கம் கட்டிப் போட்டு விடுகிறது.

காலையில் வசந்தாவும் மாதவனும் அலுவலகத்துக்குப் போனபிறகு, வீட்டைச் சுத்தம் செய்து, குழந்தை ராஜாவுடன் மல்லுக்கு நின்று, இரண்டு வாய் சோற்றை வலுக்கட்டாயமாய் ஊட்டி, கிடைக்கும் இண்டு இடுக்கு அவகாசத்தில் சமையல், தோட்ட வேலைகளைக் கவனித்து, ஊரில் உள்ள கதைகள் அனைத்தையும் சொல்லி, தெரிந்த பிரார்த்தனைப் பாடல்களைப் பாடி, ராஜாவைத் தூங்க வைப்பதற்குள் தாவு தீர்ந்து விடுவதில், குழந்தையை அணைத்துப் படுத்ததும் தன்னையறியாமல் கண்கள் செருகிக் கொள்வது வழக்கமாகவே போய் விட்டது.

இப்போதும்கூட, இன்னும் சற்று நேரம் தூங்கினால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் எங்கே? வரிசையாய்க் காத்திருக்கும் வேலைகளைச் செய்து முடிக்க உதவ யார் இருக்கிறார்கள், இல்லை மனம்தான் இருக்கிறது?

காப்பி, டிபன், இரவுச் சாப்பாடு — போதாதற்கு மறுநாள் டிபனுக்கென ஊறப்போடப்பட்டு அரவைக்குக் காத்திருக்கும் அரிசி, உளுந்து — இத்தனைக்கும் மேல், குடுகுடுவென்று அங்கும் இங்கும் ஓடி, எதற்கெடுத்தாலும் 'நானா... நானா...' என்று முழு வார்த்தையில் முக்கால் மட்டும் பேசிக் கூடக் கூட வரும் ஒன்றரை வயதுக் குழந்தை ராஜா...

நினைப்பே பிரமிப்பை ஏற்படுத்த, பரிமளம் கண்ணை அழுந்தத் தேய்த்துத் தூக்கத்தை விரட்டி, ராஜாவின் கை, கால்களை விலக்கி, சற்றே புரட்டிப் படுக்க வைத்து விட்டு, கட்டில் சப்தமிடாதவாறு மெல்ல எழுந்தார்.

கொல்லை வராந்தாவுக்குச் சென்று முகம் கழுவி, கூடத்துக்கு வந்தவரின் பார்வையில், சாப்பாட்டுக்குப் பின் தணிகாசலம் அப்படியே விட்டுப் போயிருந்த காய்ந்த தட்டும், சரியாக மூடப்படாத பதார்த்தப் பாத்திரங்களும் விழுந்தன.

பன்னிரண்டு மணிக்குக் குழந்தையைத் தூங்க வைக்கச் செல்லும் வரை, தணிகாசலம் அவர் அறையை விட்டு வெளியே வரவில்லை. பிறகு எப்போது வந்து சாப்பிட்டாரோ?

தம்இஷ்டத்துக்கு வந்து சாப்பிட வேண்டியது, பாத்திரம் பண்டங்களைத் தாறுமாறாக இறைத்து வைக்க வேண்டியது, நினைத்த போது தூங்க வேண்டியது, வெளியே போக வேண்டியது...

சரியான தான்தோன்றி மனுஷர்!

முகத்தைச் சுளித்துக் கொண்டே நாலடி நடந்து, தணிகாசலத்தின் அறை வாசலில் நின்று உள்ளே பார்வையைச் செலுத்திய போது, மார்பின் மேல் ஏதோ புத்தகம் கவிழ்ந்து கிடக்கக் குறட்டையொலியோடு அவர் தூங்குவது தெரிய, முகச்சுளிப்பு மாறாமல் மீண்டும் சமையலறைக்கு வந்தார் பரிமளம்.

இப்படிக் கூடவா பட்டுக் கொள்ளாமல் ஒரு மனுஷரால் இருக்க முடியும்?

ஏதடா, இந்த வீட்டில் நாயாக உழைக்கிறாளே, மதித்து ஒரு வார்த்தை பேசுவோம், முடிந்த வரையில் சாப்பிட்ட தட்டைக் கழுவி வைப்போம், மாலை நேரங்களில் இரண்டு வாளித் தண்ணீர் தூக்கி வந்து செடிகளுக்கு ஊற்றுவோம் என்று சின்னச் சின்ன உதவிகளைக் கூடச் செய்ய முன்வராமல்...

தத்... சரியான சுகவாசி.

ஏதாவது வசந்தா சொல்லப் போனாலும், தமக்குத்தான் கோபப்படத் தெரியும் என்பது போல் மாதவன் அப்பாவுக்காக வரிந்து கட்டிக் கொண்டு வந்து விடுகிறாரே...

நல்ல அப்பா... ஆகாசத்திலிருந்து குதித்த மாதிரி...

மொண மொணவென்று தமக்குத் தாமே முணகியபடி, காப்பி கலந்து ஒரு தம்ளரை பிளாஸ்கில் ஊற்றி, டேபிள் மேல் கொண்டு வைத்துவிட்டு, சமையல் கட்டிலேயே ஒரு பக்கமாய் உட்கார்ந்து தமக்குக் கலந்து கொண்டதைப் பரிமளம் ஆற்றிக் குடித்தார்...

காப்பி தம்ளரைத் தொட்டித் தண்ணீரில்

சிவசங்கரி

கழுவிக் கவிழ்த்து, டேபிள் மேல் வரவரத்துப் போயிருந்த தட்டைத் தண்ணீரில் ஊறப் போட்டுவிட்டு மேஜையைத் துடைக்க முனைந்த நிமிஷத்தில் ராஜா அழுது கொண்டே ஓடி வந்தான்.

''ஏம்மா கண்ணு அழறே? திடும்னு முழிச்சிக்கிட்டுப் பயந்துட்டியா? என் ராஜாக் குட்டி...''

பின் சமையலறையிலேயே ஓர் ஓரமாக நாலைந்து விளையாட்டுச் சாமான்களைப் போட்டு, ''இங்கேயே விளையாடிக்கிட்டு இருக்கியா ராஜா... நான் இட்லிக்கு மாவு ருப்பிட்டு வர்றேன்...'' என்று சொல்லி, உளுந்தைக் களைந்து கிரைண்டரில் போட்டார்.

திட்டமாய்த் தண்ணீரைத் தெளித்தவாறு கிட்டத்தில் நின்றவர், உளுந்து பந்து போலத் திரண்டு வர முற்பட்டதும், காய்கறிக் கூடையை எடுத்து, இரவுச் சமையலுக்கு என்ன காய் ஆக்கலாம் என்று பார்த்தார்.

உருளை, வெங்காயம் போட்டுக் குருமா செய்து, சோறு வடித்து... மேலே யோசனை பண்ண விடாமல், விளையாடி அலுத்துவிட்ட ராஜா எழுந்து வந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு 'பாத்தி... டா... டா...' என்று நச்சரிக்க ஆரம்பித்தான்.

பேரனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டவர், ஒரு கையினால் கிரைண்டரில் உளுந்தைத் தள்ளிவிட்டபடியே அவனைச் சமாளிக்க முயன்றார்.

''டாட்டாதானே? போகலாம்... என் கண்ணு இல்ல... பாட்டி காரியம் முடிச்சதும் போகலாம் ராஜா... இப்ப பிஸ்கட் வேணுமா... முறுக்குச் சாப்பிடறியா? என் சின்ன ராஜா இல்ல...''

எதற்கும் கட்டுப்படாமல் கொடுத்த பிஸ்கட், முறுக்கை வீசி எறிந்துவிட்டு ராஜா குரலை உயர்த்தி 'டாடா... டாட்டா...' என்று கத்தத் துவங்க, ''அட என்னடா உயிரை வாங்கறே?'' என்று அதட்டியவாறு பேரனுடன் கூடத்துக்கு வந்த போது வெளியே போகத் தயாராய் வெள்ளைச் சட்டையும், செருப்புமாய் நின்றபடி தணிகாசலம் பிளாஸ்க் காப்பியைக் குடித்துக் கொண்டிருந்தார்.

''வெளியே போகப் போறீங்களா?''

''ம்.''

''இவனைக் கொஞ்சம் அழைச்சிட்டுப் போக முடியுமா...? கைக்காரியத்தைக் கவனிக்க விடாம நை... நைன்னு புடுங்கிக்கிட்டே இருக்கான்...''

தணிகாசலம் தம்ளரை மேஜை மேல் வைத்தார்.

''காய், மளிகை எல்லாம் வாங்கிக்கிட்டு வரணும்... இவனைத் தூக்கிக்கிட்டுப் போனா எல்லாத்தையும் சொமக்கறது கஷ்டம்...''

நிமிர்ந்து பார்க்காமல் பேசியவர் தம் பதில் பரிமளத்தின் எரிச்சலை அதிகமாக்கும் என்பதை லட்சியம் பண்ணாததோடு, எந்தப் பதிலுக்கும் காத்திராமல் ஆணியில் மாட்டியிருந்த பைகளை எடுத்துக் கொண்டு, திரும்பி நடந்தார்.

தெரு முனைக்கு வந்து பிள்ளையார் கோவில் வாசலில் நின்று செருப்பை அவிழ்த்து ஓர் ஓரமாய்ப் போட்டுவிட்டு, இரண்டு கைகளாலும் கன்னத்தில் பட்பட்டென்று போட்டுக் கொண்டே, ''பிள்ளையாரப்பா... என்னிக்கு இந்தப் பிரச்னைக்கெல்லாம் முடிவு கட்டப் போறியோ, தெரியலியே...'' என்றவாறு கண்களை மூடி வணங்கினார்.

திரும்பவும் செருப்பை மாட்டிக்கொண்டு நடக்கத் துவங்குகையில், சோர்வால் துவண்ட மனத்தைப் போலவே நடையும் தளர்ந்து போயிற்று...

நல்லதாய், கொதிக்கக் கொதிக்க, மணக்க மணக்க ஒரு வாய்க் காப்பிக்குக் கூட வழியில்லாமல் என்ன வாழ்க்கை இது என்கிற அலுப்பு நெஞ்சை நிறைத்தது.

என்னதான் வீட்டுக் காப்பி என்றாலும் கூட, சரியாகக் கழுவப்படாததாலோ என்னவோ, பிளாஸ்கைத் திறந்த உடனேயே குப்பென்று ஒரு வாடை முகத்தைத் தாக்கத்தான் செய்கிறது. அது பிளாஸ்கின் அழுக்கு வாடைதானா, அல்லது வேறு எதன் வாடையோ... யார் கண்டது?

எதுவானால் என்ன, இப்போதும் — இனி எப்போதும், இதுதான் நிரந்தரம் என்று ஆகிவிட்டது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் மட்டுமே ஓரள



வுக்கு ருசியான சாப்பாடு, டிபன், காப்பி! மற்ற நாட்களில் ஆறி விறைத்துப் போன சோறு, புளியும் காரமும் தனித்தனியாய் நின்று தெளிந்து நீராய் ஓடும் சாம்பார், புளித்துப் போன மோர், 'எதன்' வாடையோ படிந்து போன ஒரு பொரியல்—

இப்போதும்கூட, காலையில் பிள்ளையும் மருமகளும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிடு கையில் அவர்களோடு அமர்ந்து ஒரு வழியாய் வயிற்றுப்பாட்டைக் கவனித்துக் கொண்டு விடலாம்தான். அப்படித்தானே முதல் சில நாட்கள் நடக்கவும் செய்தது!

ஆனால், தான் உடன் இருக்கும் நிர்ப்பந்தத்தால் அசைவம் சாப்பிட முடியாமல் மருமகள் தவிப்பதையும், தொடர்ந்து சைவ உணவை உண்ண முடியாமல் வெறும் வயிறோடு பாதி நாட்கள் ஆபீஸுக்குச் செல்வதையும் புரிந்து கொள்ள முடிய, சரி, நம்மால் எதற்கு அவள் பட்டினி கிடக்க வேண்டும் என்கிற வேதனையில், அவர்களோடு சாப்பிட உட்காருவதைத் தவிர்க்க ஆரம்பித்து, ஏற்கெனவே இருந்த பூஜை புனஸ்காரங்களை இன்னும் சற்று விரிவுபடுத்திக் கொண்டு மெதுவாய்ச் சாப்பிடும் வழக்கத்துக்குக் காரணம் காட்டியாயிற்று.

அசைவமோ, சைவமோ — சமைப்பது ஒரே ஆள்தான் என்றாலும், கண்ணுக்கு நேரே பார்க்காத வரை எப்படியோ சமாளித்து விடலாம். ஆனால், சென்னைக்கு வந்து ஒரு வருஷத்துக்கு மேல் ஆகியும், இன்னமும் அந்த வீட்டின் சமையலறையை எட்டிப் பார்த்ததில்லை; சமையல் செய்யும் பரிமளத்திடமும் நெருக்கு நேர் நின்று உறவுக்காரராய் மதித்து ஒரு வார்த்தை பேச முடியவில்லைதானே!

உறவுக்காரராகவா? யாரை, பரிமளத்தையா?

அது எப்படிச் சாத்தியம்?

சதாசர்வகாலமும் 'ஏசுவே, ஏசுவே' என்று முணுமுணுத்து, மெழுகுவர்த்தி ஏற்றி, மண்டியிட்டு ஜபம் செய்பவரை உறவு முறையாக ஏற்றுக் கொள்ள மனம் முரண்டுகிறதே!

சரி, ஜாதி, மதத்தை விட்டுவிட்டு, மனுஷியாக மட்டும் பார்க்கலாம் என்றாலும், முடியாதபடி வசந்தாவிடம் எதற்கும் கோள் சொல்லிக் கொடுத்து, ஒன்றைப் பத்தாக்கும் அந்தக் குணம் குறுக்கே நிற்கிறதே!

என்னமோ தான் ஒருத்திதான் ஊர் உலகத்தில் இல்லாத நுணுசில் வேலை பண்ணுகிற மாதிரியும், மற்றவர்களெல்லாம் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து வெட்டியாய்ப் பொழுதைக் கழிக்கிற மாதிரியும்... சமயம் கிடைத்த போதெல்லாம் அத்தம்மா புலம்புவது தெரியாதா என்ன!

இப்படி எந்த வகையிலும் ஒட்ட முடியாமல் தவிப்பதால்தான் ஒரு சுவாதீனத்துடன் 'பிளாஸ்கை நன்றாகக் கழுவுங்கள்' என்றோ, 'காப்பிக்கு இன்னும் கொஞ்சம் சூடு வேண்டும்' என்றோ அபிப்பிராயம் கூடத் தெரிவிக்க முடியவில்லை.

காலை அலுவலகம் போகும் முன் மருமகள் எழுதிக் கூடத்து அலமாரியில் வைத்து விட்டுப் போயிருந்த மளிகைச் சாமான் லிஸ்டைக் கொடுத்து, பொட்டலங்களை வாங்கித் தோள்பையில் அடுக்கினார்.

தோள்பையும், கையில் இருந்த பிளாஸ்டிக் பையும் கனக்க, நடந்து வீடு வந்து சேர்ந்தபோது, பரிமளம் வாசலிலேயே ராஜாவுடன் நின்றிருந்தார்.

"வெளிய போறவங்க சாவி எடுத்திட்டுப் போகக் கூடாதா? ஊர் முழுக்கச் சுத்திட்டு வர்றவரைக்கும் நான் காத்திட்டு இருக்க வேண்டியிருக்கு..." கையில், தோளில் தொங்கிய பைகளை வாங்கக்கூட முற்படாமல், பொதுவாகச் சொல்லிவிட்டு ஒருவித அலட்சியத்துடன் பரிமளம் கேட்டை நோக்கி நடக்க, அதுவரை இருந்த பொறுமை மறைந்து தணிகாசலம் சடக்கென்று கத்தினார்.


"போறதுன்னு போயிருக்கறதுதானே! மத்தவங்க வர்றவரைக்கும் நாம்பாட்டுக்கு வராந்தாவுல உக்காந்துக்கிட்டிருக்கேன்... சரி, இப்ப ராஜா வேற கூட எதுக்கு? அவனை எறக்கி விட்டுறலாமே..."

பரிமளம் நிற்காமல் நடந்துகொண்டே பேசினார்.

"அ? ஒரு சமய சந்தர்ப்பத்துல பாத்துக்க மனசில்லாதவருக்கு இப்ப மட்டும் பேச்சு என்ன? நீ வாடா ராஜா, சர்ச்சல ப்ரார்த்தனை முடிஞ்சிடப் போவுது!"

போகிற போக்கில், பேரனையும் கூட்டிக்





"கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்தே மாடு மாதிரி உழைக்கிறேனே எனக்கு ஏதாவது செய்யக் கூடாதான்னு தலைவரைக் கேட்டேன்..."

"என்ன சொன்னார்...?"

"நாளைக்கு வா! கால்களிலே லாடம் அடிச்சு விடறேன்னு சொன்னார்...!"

கொண்டு சர்ச்சுக்குப் போகப் போவதாகப் பரிமளம் கூறிவிட்டுச் சென்றது உள்ளுக்குள் பொங்கிய ஆத்திரத்தை அதிகமாக்க,

பொறுக்க முடியாது என்ற வேகத்துடன் இரவு சாப்பிட வர மறுத்து மாதவனுக்குத் தம் கோபத்தை உணர்த்தினார்.

"ஏம்பா, சாப்பாடு வேணாங்கறீங்க... வயிறு சரியில்லையா?"

சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த தணிகாசலம் 'ப்ச்' என்று சூள் கொட்டி, கண்களை மூடிக் கொண்டார்.

"சொல்லுங்கப்பா..."

"என்னத்தைச் சொல்றது மாது? நடக்கற ஒண்ணொண்ணையும் நினைச்சிட்டா, நாக்கப் புடுங்கிக்காம இன்னும் உசிரோட ஏண்டா இருக்கோம்னு அவமானமா இருக்கு...."

"என்ன நடந்திச்சுப்பா?"

தணிகாசலம் மறுபடி சூள் கொட்டினார். அப்புறம் கலங்கிய கண்களுடன் செம்மிய குரலில், பேரனைப் பரிமளம் சர்ச்சுக்கு அழைத்துப் போவதையும், தாம் வேண்டாத பழக்க வழக்கங்கள் என்று நினைப்பதைச் சொல்லித் தருவதையும், தம் கோணத்திலிருந்து கண், காது, மூக்கு வைத்துக் கச்சிதமாய்ப் புலம்ப,

பொறியாய் இருந்ததை ஊதிவிட்டு ஜ்வாலையாக ஆக்கின மாதிரி எரிந்தது மாதவனுக்கு.

இரவு படுக்கை அறையில் நுழைந்ததும் நுழையாததுமாய் வசந்தாவை நிற்க வைத்துக் கேட்டபோது, தன் பக்கத்து நியாயத்துடன் அவளும் தயாராகவே வந்திருப்பது தெரிந்தது.

"என்ன? அத்தம்மா ராஜாவை சர்ச்சுக்குக் கூட்டிட்டுப் போறது எதுக்குனு உங்கப்பா கேட்டாரா? ஏன், தினம் காலைல அவரு பூஜை செய்யறப்போ இவனையும் கூட வெச்சுக்கிட்டு அத்தனையும் கத்துக் குடுக்கிறாரே, இது மட்டும் ரொம்ப நியாயமா? ஒரு நாளைப்போல ஏழு தரம் கற்பூரம் காட்டி, பூவாக் கொட்டி ஊட்டி அடிக்கிறதையும், பூஜைக்கு மணி அடிக்க, சந்தனம் அரைக்க நம்ப ராஜாவைக் கூட வச்சுக்கறதையும் தட்டிக் கேட்கத் தைரியம் இல்ல... இந்த அழகுல, அத்தம்மாவக் குத்தம் சொல்ல வர்றாரு..."

"ஏன் வசந்தா என்ன? அப்பா பூப் போட்டுக் கற்பூரம் காட்டறது தப்புன்னு, உங்க அத்தம்மா மட்டும் பீடத்துக்கு ரோஜாப்பூ வெச்சி மெழுகுவர்த்தி ஏத்தலாமா?"

"தாராளமா... தோட்டம் முழுக்க அவங்க வெச்ச செடிங்கதான்... அவங்கதான் தலைப் பொறுப்பா பராமரிக்கறாங்க... செய்யறவங்களுக்கு இந்த அளவுகூட உரிமை இல்லியா?"

"செய்யறவங்களா? அப்பான்னு இத்தனை வசதியா இருக்கிறோமே, இத்தனையும் தந்தது யாரு? எங்கப்பாதானே? இன்னிக்கும் காய்கறிலேர்ந்து மளிகை வரைக்கும் அவருதான் வாங்கிப் போடறாரு தெரியுமில்லே?"

பேச்சு எங்கோ ஆரம்பித்து எதையோ நோக்கிப் போவதைப் புரிந்து கொள்ள முடிய, வசந்தா கைகளை இடுப்பில் வைத்துக் கண்களை இடுக்கியவாறு கேட்டாள்:

"இப்ப என்னதான் சொல்ல வர்றீங்க?"

"என்னவா? எதச்சொல்றதுன்னு புரியாம திணறிக்கிட்டில்லே இருக்கேன்... இந்த வீட்டுல நடக்குற எதுவுமே எனக்குப் புடிக்கல... சரி, ஏதோ தொலையுதுனு பார்த்தா, இப்ப ரொம்ப அளவுக்கு மிஞ்சிப் போவுது.... அத்தம்மா எதுக்கு ராஜாவை சர்ச்சுக்குக் கூட அழைச்சிட்டுப் போறாங்க?"

வசந்தா கேலியாய்ச் சிரித்தாள்.

"அது கிடக்கட்டும், தாத்தா மாதிரி சரத் துணியை இடுப்புல சுத்திக்கிட்டு, தலையில குட்டிக்கறதோட, எம்பிள்ள — இன்னும் முழுசா ஒரு வார்த்தைகூடப் பேச வரல்லே, அதுக்குள்ள உங்கப்பா மாதிரி 'காக்க .... காக்க'னு ஏதோ ஸ்லோகத்தச் சொல்றானே, இதுக்கெல்லாம் என்ன சொல்றீங்க? எதுவுமே புடிக்கலேனு, காலை வேளைல உங்கப்பா அறைக்கு ராஜாவை அனுப்பாம தடுத்து நிறுத்தறதை முதல்ல செஞ்சிட்டு, அப்புறமாப் பேச வாங்க... வசதியாம் வசதி, பெரிய வசதி! பணத்தை விசிறி எறிஞ்சா ஆச்சா? மனுஷங்களுக்குப் பண்பு வேணும்! யார் கேட்டாங்க இந்தப் பெரிய்ய வீட்டையும், தோட்டத்தையும்! மனசுல நிம்மதி இல்லாம வசதி என்ன வேண்டிக் கிடக்கு வசதி... குனியக் குனியக் குட்டினா எத்தனை நாளைக்குத் தாங்கிக்க முடியும்? அத்தனையும் விட்டுட்டுப் பழைய வீட்டுக்கே போயிட நாங்க ரெடி... ரொம்பத்தான் வெரட்டாதீங்க... ஆமா சொல்லிட்டேன்..."


இன்னும் நீள நீளமாய் எதையெதையோ கத்தலாய்ப் பேசி, நேரடியாகவே ஏசிக்கொள்ள ஆரம்பிக்க, அதுநாள்வரை காசு பணத்தினால் போர்த்தப்பட்டிருந்த மரியாதை என்கிற மெல்லிய திரை சரக்கென்று கிழிய, கலவரம் வெளிப்பட்டு வீட்டையே அதிர வைக்கத் துவங்கியது இதற்கப்புறம்தான்....

(தொடரும்)

இப்பொழுது வெளியாகிறது!

கோகுலம்
மார்ச் '88

சிறுவருக்குத் திரைப்படம் தேவையா?
— குழந்தைகள் கருத்தரங்கு!



பரிசு பெற்ற கதை:
— அஹிம்சையின் வெற்றி!



எல்லாம் நன்மைக்கே!
— குழந்தைக் கவிஞர்.



வீரனின் தேச பக்தி
— ஜெர்மன் கதை

டாக்டர் கட்டுரை :: பிருந்தாவனப் பக்கங்கள் :: சிரிப்பு அம்சங்கள்
கதைகள் :: கவிதைகள் :: அறிவியல் விஷயங்கள் :: கேள்வி — பதில்.



குபேரன் பெற்ற செல்வம்!
கதை: ஆனந்தி
படம்: வினு

வஜ்ஜீவிற்கு எரிச்சலாய் வந்தது. எங்கு போனாலும் பரீட்சையா? பரீட்சைகள் போரடித்தன. ஏதாவது கோர்ஸ் படிக்க வந்தால் அதிலும் பரீட்சை. தாஜ்மகாலைக் கட்டியது யார் என்ற கேள்விக்கு, நாலு விடை வேறு கொடுத்து, அதில் சரியானதை எழுத வேண்டும்.

வஜ்ஜீ தன்னைச் சுற்றியிருப்பவர்களைப் பார்த்தாள். எல்லோரும் ரொம்பச் சீரியஸாக எழுதிக் கொண்டிருந்தார்கள். எல்லோரையும் சேர்க்கப் போவது நிஜம். பின்பு ஏன் கவலைப்படுகிறார்கள்? பரீட்சை நடத்துகின்றவர், அனுவசியமாய்ப் பந்தா பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது தான் ஒரு பையன் ஹாலுக்கு வந்தான்.

''ஒய் ஆர் யூ லேட்?'' என்றார்.

அவன் ஏதோ மெதுவாகச் சொன்னான். இவர் மறுபடியும் கத்தினார்.

''வர்ற வழியில், அர்ச்சனாவில ஸ்வீட்ஸ் வாங்கிட்டு வந்தேன். அதான் லேட்'' என்று அவன் சிரிக்காமல் கூற, ஹால் முழுவதும் சிரிப்பு.

வஜ்ஜீ அவனை நிமிர்ந்து பார்த்தாள். நல்ல அடர்த்தியான முடி; நல்ல கன்னம்; உதடுகளில் சிகரெட் கறுப்பு; அகலமான மார்பு; ஜூசாகச் சட்டை; தண்ணீர் பார்த்திராத பேண்ட். ரொம்பக் காஷுவலாக எழுதினான்.

''ஐ என்ஜாயிட் யுவர் ஜோக்!''

''ஏன் லேட்? ஏன் லேட்னு ஏற்கனவே ரிசப்ஷனிஸ்ட் ஆயிரம் கேள்வி கேட்டு உயிரை வாங்கினா. நான் அவளை நோகடித்தேன். அப்புறம்தான் விட்டாங்க.''

''என்ன பண்ணுனீங்க?''

''அப்படியே கொஞ்ச நேரம் பார்த்தேன். 'ஓ நீங்க இங்க இருக்கீங்களா? நேற்றுக் கூட டி.வி.யிலே சொன்னாளே! கப்பம்மாள், வயது 60 காணவில்லேனு. காணாமல் போன அன்று அணிந்திருந்த அதே மஞ்சள் புடவையைத்தான், இன்னும் மாத்தலையா? உடனே காவல் கண்காணிப்பாளர் எழும்பூர் போங்க' என்றேன். அவளுக்கு மூட் 'அவுட்டாகி', உட்கார்ந்து விட்டாள்...''

வஜ்ஜீ விழுந்து விழுந்து சிரித்தாள்.

''வேடிக்கைதான். யுவர் குட் நேம்?''

''மாரியப்பன். இட்ஸ் நாட் குட் நேம். ஸோ, கால் மி வினோத்.''

வஜ்ஜீ சிரித்தாள்.

''இந்த கோர்ஸ்ல ஏன் சேரப் போறீங்க?''

''இது என்ன கேள்வி? ராஜீவ் காந்தி கம்ப்யூட்டர் யுகத்திற்கு, இந்தியாவைக்



கொண்டு போகும் போது எனக்கு அது பற்றித் தெரியலேன்னு. என்னை விட்டுட்டுப் போயிட்டா, நான் மட்டும் தனியா என்ன செய்வேன்?''

வஜ்ஜீவிற்குச் சிரிப்பாய் வந்தது. "ரொம்ப வேடிக்கையாய்ப் பேசறீங்க. ஐ லைக் இட் எங்கே உங்க வீடு? ஐ வில் ட்ராப் யூ!

''பாவம். அவ்வளவு தூரத்துக்குப் பெட்ரோல் போட்டா உங்க அப்பா நொந்து போயிடுவாரு!''

''அவ்வளவு தூரமா, எங்கே?''

''மகாராஜ நகர்.''

''அது எங்க இருக்கு?''

''திருநெல்வேலியிலே!''

''சுத்தம்! நீங்க திருநெல்வேலியா? இந்த கோர்ஸ் படிக்கவா அங்கிருந்து இங்க வந்தீங்க!''

''அது மட்டுமில்லே. பாரதிராஜாவைப் பார்த்து நடிகராகலாம்னு ஒரு ஐடியா!''

''அது என்ன அவ்வளவு ஈஸியா?''

''அதுக்கு ஒரு ஐடியா வச்சிருக்கேன். மவுண்ட் ரோடுல போய், எல். ஐ. சி. முன்னால, கோலிக்கா விளையாடறது. அவர் தான் காரில் போகும்போதே, ஆள் செலக்ட் பண்ணுவாரே! யாரடா இந்த வித்தியாசமானவன்னு கூட்டிட்டுப் போனாலும் போயிடுவாரில்லே?'' என்று அழகாய்ச் சொன்னான்.

வஜ்ஜீ மீண்டும் சிரித்தாள்.

வினோத் அவளைப் பார்த்தான். தலையை வெட்டி விட்டிருந்தாள். காதில் வித்தியாசமான டிசைனில், இவளுடைய அசைவுகளுக்கு அழகாய் ஆடியது. உதடுகளில் செயற்கைச் சிவப்பு. திருநெல்வேலியில் அவன் பார்த்திராத வித்தியாசமான உடையில் இருந்தாள். செருப்பில்கூடப் பணக்காரத்தனம் தெரிந்தது.

அவன் ஜோக்குகளுக்கு அதிகமாய்ச் சிரிப்பது, உற்சாகத்தைத் தந்தது. கபில்தேவ் எப்படி அடித்தாலும் கைத்தட்டுவதுபோல், சத்தியராஜ் என்ன பேசினாலும் விசில் சத்தம் வருவதுபோல் தனிப்பட்ட உறவுகளிலும் பல விஷயங்கள் பிடித்து விட்டால் பின்பு அனைத்துக் காரியங்களுக்கும் அங்கீகாரம் கிடைத்து விடுகிறது.

இன்ஸ்டிடியூட்டில் அடிக்கடி சந்தித்தார்கள். இருவரும் ஒரே குரூப் என்றானது.

''என்ன வினோத் இந்த வொர்க்கை நாளைக்குள் முடிக்கணும்... உடனே முடியுங்க. அந்த ஹிந்தி மாஸ்டர் வேற கத்துவாரு...''

''இந்தா! முடிச்சிடறேன்.''

''பார்த்துப் போடுங்க! தப்பாயிடப் போவுது!''

''என் வொர்க்கில் குற்றமா? போடும்! போடும்! போட்டுப்பாரும்'' என்று சிவாஜி போல் பேசினான். பேசிக் கொண்டே சிகரெட் பற்ற வைத்தான்.

''நீங்க சிகரெட் பிடிப்பீங்களா?''

''ஏன் கேட்கறீங்க?''

''தப்பாத் தோணலே?''



''ஆனாலும், அந்த ஹோட்டல் ரொம்ப மோசம்பா...!''

''எப்படி...?''

''டிப்ஸ்' வைச்சாத்தான், 'சப்ளையே' பண்றாங்க...!''

— ஆர். வசந்தகுமார்.

''தப்பில்லே! வஜ்ஜீ தப்பில்லே. நாலு பேருக்கு நல்லது செஞ்சா எதுவுமே தப்பில்லே!''

வஜ்ஜீ சந்தோஷமாய்ச் சிரித்தாள். அவள் மனத்திற்கு அவனை ரொம்பப் பிடித்துப் போனது.

''வினோத் இன்னிக்கி நான் உங்களை ட்ராப் பண்றேன். வாங்க கார்ல.''

வினோத் ஏறி உட்கார்ந்தான். ரொம்பக் கேஷுவலாகக் கார் ஓட்டினாள். கார் ஸ்டீரியோவில், அவன் கேட்டிராத ஏதோ ஓர் ஆங்கிலப் பாட்டு அலறியது.

''பிடிச்சிருக்கா! இல்லே வேறே இருக்கு! போடவா?''

''எதுன்னு என்ன? எல்லாம் எனக்கு ஒண்ணுதான்.''

''வாங்க. இந்த ரெஸ்டாரண்ட் போகலாம்.''

வினோத் பையைத் தொட்டுப் பார்த்தான். மூன்று ஃபில்டர் வில்ஸுக்குத்தான் தேறும். சொத்துச் சேர்க்காமல் போய்விட்ட அப்பா, வாங்கும் எழுநூறில் முந்நூறை வாங்கும் அம்மா, சம்பளத்தைக் கூட்டாத முதலாளி, எல்லோர் மீதும் எரிச்சலாய் வந்தது. அவளுடன் நடந்தான். உட்கார்ந்தார்கள். என்னவெல்லாமோ ஆர்டர் செய்தாள்.

''என்ன ஒரு மாதிரி இருக்கீங்க?''

''நத்திங்!''

''வழக்கமான ஜோக்குகளைக் காணோம்!'' என்றவள், மெதுவாய்க் கேட்டாள், ''உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?''

''என்ன இப்படிக் கேட்கறீங்க? உலகத்திலேயே எனக்குப் பிடித்த இரண்டாவது பொண்ணு நீங்கதான்!''

''இரண்டாவதா? யார் அந்த முதல் பொண்ணு?''

''விரில் அட்வர்டைஸ்மெண்ட்ல வர்ற பொண்ணு!''

பில் வந்தது. வஜ்ஜீ திடீரென்று முகம் மாறினாள்.

''ஹேண்ட் பாக்லதான் பணம் வைத்திருந்தேன். காணோம்!''

வினோத் அதிர்ந்தான்.

"உங்ககிட்ட" என்றவள், "பரவாயில்லை. ஒன் மினிட்" என்று கவுண்டருக்கு நடந்தாள். அப்பாவுக்குப் போன் பண்ணினாள். உண்மையைச் சொன்னாள். போனை மானேஜரிடம் கொடுக்கச் சொன்னார் அப்பா. ஏதோ பேசினார்...

"என்ன மேடம்! முன்னாலேயே சொல்லக்கூடாதா? இதுக்கெல்லாம் அவரை டிஸ்டர்ப் பண்ணணுமா? நீங்க போங்க!" என்றார் மானேஜர்.

வினோத்தும், வஜ்ஜியும் படுவேகமாக வெளியேறினார்கள்.

வஜ்ஜி மெதுவாக வீட்டிற்குள் வந்தாள். அப்பா இன்னும் வராதது போல் தோன்றியது. அறைக்குள் நுழைந்தபோது, தம்பி ராஜ் தன் கையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். நைசாக எட்டிப் பார்த்தாள். 'காயத்ரீ, ஐ லவ் யூ' என்று எழுதியிருந்தது. தலையில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினாள்.

"யூ டர்ட்டி ராஸ்கல். படிக்கிறது பத்தாங் கிளாஸ். இதுல லவ் வேறயா?"

அவன் வெலவலத்துப் போனான். வஜ்ஜி மீண்டும் பேச ஆரம்பிப்பதற்குள், அவன் அப்பா வந்தார்.

"வஜ்ஜி. சரிவிடு. ராஜ், கையைக் கழுவிட்டு, ஒழுங்கா உட்கார்ந்து படி... வஜ்ஜி, நீ வா. சாப்பிடப் போகலாம்" என்றார்.

"என்னப்பா, நீங்க இப்படி இருக்கிறீங்க?"

"எதுக்கு நீ இப்ப இவ்வளவு கோபப் படறே?"

"அவன் எவ்வளவு சின்னப் பையன்!"

"அவன் உனக்குச் சின்னப் பையன். நீ எனக்குச் சின்னப் பொண்ணு!"

"என்ன சொல்றீங்க?" வஜ்ஜிவிற்கு லேசாய் வியர்த்தது.

"ஹோட்டல் மானேஜர் பேசினார். நீ அந்தப் பையனோட ப்ரெண்ட்லியாப் பழகினே. அதுல தலையிடற அளவுக்கு நான் அநாகரிகமானவனில்லை. அதே சமயம் நீ லவ் பண்றதை அனுமதிக்கும் அளவிற்குப் பைத்தியக்காரனில்லை!"

அப்பாவின் பேச்சு வஜ்ஜிவிற்கு எரிச்சல் தந்தது.

"அந்தப் பையனின் வாழ்க்கையைப் பாழடிக்காதே! இது நடக்கிற கதையில்லை!"

"ஒய் நாட்?"

"பிகாஸ் ஆப் ஸ்டேட்டஸ்!"

"காதலைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? ஜாதி, மதம், ஸ்டேட்டஸ் இதற்கெல்லாம் அப்பாற்பட்டது. உங்ககிட்ட அதைப் பற்றிப் பேசிப் பிரயோஜனமில்லை!" என்று வஜ்ஜி கோபமாய் எழுந்து, "ஆயா, பூஸ்ட் எங்கே?" என்று கத்தினாள்.

"ஆப்பிள் அழுகினது" என்று தூக்கி எறிந்தாள்.

"வீட்டிலே மூணு நாளா ஏ. சி. வேலை செய்யலை. இதையெல்லாம் கவனிக்க ஆளில்லை. அனாவசிய அட்வைஸ்களுக்குக் குறைச்சல் இல்லை..." என்று கோபமாய்க் கொதித்தாள்.

"கொஞ்சம் உட்காரும்மா. ஸ்டேட்டஸ்னா ஒண்ணுமில்லைன்னு சொன்னியே. இதான் ஸ்டேட்டஸ். காலையில பெட் காப்பிலேர்ந்து, ராத்திரி ஏ. சி. வரை கூட வருகிற சமாசாரம். எனக்கும் காதலைப் பற்றித் தெரியும்; உன்னைப் பற்றியும் தெரியும். காதலுக்குப் போர்க்குணம் தேவை. உன்னை மாதிரி, சொகுசான விஷயங்களெல்லாம் வாழ்க்கைத் தேவைன்னு நினைக்கிற ஆட்களால் எதுவும் செய்ய முடியாது. ஏன்னா நீ உங்கம்மா மாதிரி."

வஜ்ஜி அசந்து உட்கார்ந்தாள்.

"உங்கம்மா எனக்குப் பண்ணியதை நீ அந்தப் பையனுக்குப் பண்ணிடாதே!"

"என்னப்பா சொல்றீங்க...!"

"நானும் உங்கம்மாவும் காதல் கல்யாணம் தான். தெரியுமில்லே?"


"தெரியும்!"

"உங்கம்மாவும் உன்னை மாதிரியேதான். அவளோட அம்மா, அப்பாவை விட்டுட்டு வந்தாள். ரிஜிஸ்தர் ஆபீஸில் கல்யாணம் முடிந்தவுடன், எல்லா பிரண்ட்சும் குட்பை சொல்லிட்டாங்க. அப்புறம்தான் நிஜங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவளோட கனவுகள், கற்பனைகளுக்கு என்னால் ஈடு கொடுக்க முடியவில்லை. வாழ்க்கையின் ஆரம்பத்தில் நான் போராடிக் கொண்டிருந்தேன். ஆனால் போராட அவளுக்குப் பொறுமையில்லை. பாவம்! ஐந்து வருட வாழ்க்கையில் நிம்மதியே இல்லை. பிறகு......" அப்பா கொஞ்சம் விக்கித்தார்.

"நான் சொன்ன விஷயங்கள் உனக்குப் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்."

வஜ்ஜிவிற்கு எல்லாம் தெளிவானது போலிருந்தது.

அப்பாவுக்கு, யாரோ ஒரு பையனைக் காப்பாற்றிய உணர்வு இருந்தது. மாலை போடப் பட்டிருந்த தம் மனைவியின் படத்தின் கீழ் போய், மௌனமாய் நின்றார், அவர்.




"மாறுவேடத்தில் போன நம்ம மன்னரை மக்களுக்கு அடையாளம் தெரிஞ்சிடுச்சு!"

"அப்புறம்?"


"அரண்மனைக்குத் திரும்பி வரும்போது கட்டோடுதான் வந்தார்!"

— அ. பெ. ரவி.



ஏன் பூஜை அறையில்

பசு நெய்யில் விளக்கு ஏற்ற வேண்டும்? வாசனையுடன் ஏன் இருக்க வேண்டும்? ஏன் மணை போட்டு உட்கார வேண்டும்.



1. பூஜை அறை நல்ல வாசனையாயிருந்தால் அந்த வாசனை மூக்குத் துவாரங்களின் வழியால் உள்ளே போகும். அப்பொழுது யோகம் செய்ய மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கும்.

2. பசுவின் நெய் விளக்கு ஏன் ஏற்ற வேண்டுமென்றால் பசுவின் விளக்கினாலுண்டாகும் புகையினது யோகம் அல்லது பூஜை ஜபம் செய்யும் சிறிய அறையெல்லாம் நிறைந்து அப்புகை வெளியில் போகாமல் அறைக்குள்ளேயே தங்கியிருக்கும். அப்பொழுது யோகப்பியாசியும் அல்லது பூஜை, மந்திர ஜபம் செய்பவர்களும் மூச்சை உள்ளுக்கிழுக்கும் பொழுது அந்த மூச்சுடன் கூடவே நெய் புகையும் சேர்ந்து உள்ளே போகின்றது. அந்த பசுவின் நெய் புகை மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளே போவதனால் சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியத்தை உண்டாக்கும்.

ஆகையால் பூஜை அறையில் நெய் விளக்கு ஏற்றி வாசனை வஸ்துக்களை வைத்து மந்திரங்களை ஜபம் செய்து வந்த போதிலும் சரி அப்படிப்பட்டவர்களின் மனதிற்கு மிகவும் உற்சாகத்தை உண்டாக்கி அவரவர்களின் காரியசித்தியை நிறைவேறும்படி செய்விக்கும்.

3. ஏன் மணை போட்டு உட்கார வேண்டும்?

புருஷன் மணையின்மீது உட்காந்து மந்திர ஜபம் செய்து வந்தால் அந்த ஜபத்தின் பலன்களையெல்லாம் ஊசியைக் காந்தம் எவ்வாறு இழுத்துக் கொள்கின்றதோ அதுபோல புருஷன் செய்யும் ஜபத்தின் பலத்தையெல்லாம் பூமி இழுத்துக்கொள்ளும். மணையில் உட்கார்ந்தால், பூமி ஜபத்தை இழுத்து கொள்ளாது.

ஆதாரம்:- கடப்பை பரமஹம்ச ஸச்சிதானந்த யோகீஸ்வரர்.

அத்துடன் கிராண்ட் ஸ்வீட்டுகளை வாங்கி நல்லோருக்கு விநியோகிக்கவும்.

திருமண வைபவங்களுக்கு சீர்முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு

சென்னை-20 போன்: 412557

Ad-Ventures

இந்த நிறுவனத்துக்கு இருநூறு வயது!

சென்னை பஸ் பயணிகளில் யாருக்குத் தான் 'பாரீஸ் கார்னர்' தெரியாது? 'பாரி முனை' என்ற அந்தப் பெயர் வரக் காரண மான பாரி கம்பெனியின் கம்பீரமான கட்ட டமும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் பாரி கம்பெனி அண்மையில் தனது இரு நூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடப் போகி றது என்று சொன்னால் பலருக்கும் ஆச்சர்ய மாகவே இருக்கும். "அடேயப்பா! அவ் வளவு பழமையான நிறுவனமா?" என்று கேட்பார்கள்.

ஆம்! இந்தியாவிலேயே மிகப் பழைய நிறுவனம் என்று எடுத்துக் கொண்டால் பாரி கம்பெனி இரண்டாவது இடத்தை வகிக்கிறது! அது மட்டுமல்ல; உலக அரங் கிலே இன்னும் உயிர்த் துடிப்புடன் இயங்கும் பழமையான நிறுவனங்கள் என்று பார்த் தாலும் பாரி கம்பெனி பதினோராவது இடத்தை வகிக்கிறது! இந்த நிறுவனத்தின் இருநூறாவது ஆண்டு விழாவைத் தலைமை தாங்கி நடத்தித் தர நமது குடியரசுத் தலைவர் ஆர். வி. வருவார் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

பாரி நிறுவனத்தை ஆரம்பித்தவர்கள் பாகஸ்தர்களான இரு ஆங்கிலேயர். தாமஸ் பாரி என்பவரின் பெயரை நிறுவனம் தாங்கி நிற்கிறது. மற்றொருவர் ஜான் வில்லியம் டேர். இவரது பெயர் பாரி நிறுவனத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்துக்குச் சூட் டப்பட்டுள்ளது. "டேர் ஹவுஸ்" என்று கட்டடத்தின் வாசலில் எழுதப்பட்டிருப்ப தைக் காணலாம்.

தாமஸ் பாரி 1788—ல் தமது பத்தொன்ப தாவது வயதில் பிரிட்டனிலிருந்து கடல் கடந்து சென்னை வந்து சேர்ந்தார். கிழக்கிந் திய கம்பெனி அதிகாரிகளிடம் லைசென்ஸ் பெற்று வியாபாரம் தொடங்கினார். 1824—ல் காலமாகும் வரை தாமஸ் பாரி சென்னையி லேயே தங்கி இருந்தார். 36 ஆண்டுகளில் பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்து நிறுவனத் தைக் கட்டிக் காத்தார். வியாபாரத்தை விரி வாக்கவும் செய்தார். 1803—ல் இப்போது டேர் ஹவுஸ் கட்டடம் உள்ள மனையை அவர் விலைக்கு வாங்கினார். பாரியின் மர ணத்துக்குப் பிறகு வில்லியம் டேர் கம்பெ னியை நன்கு நிர்வகித்து வளர்த்தார்.

இவ்விருவருடைய பங்குகள் பல ஆண்டு களில் பல கை மாறியது. இன்று இந்த நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்கள் பற்றி வீட்டுக்கு வீடு அனைவரும் அறிவர். பாரி மிட்டாய்கள், சாக்கலேட்டுகள் பற்றி



• எம். வி. அருணசலம்



• பாரி நிறுவனம் தலைமையகம்



• தாமஸ் பாரி

யாருக்குத்தான் தெரியாது? அமிலங்களை நிரப்பி வைக்க ஜாடிகளைத் தயாரிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு ஊறுகாய் ஜாடிகளையும் தயாரித்தனர். இப்போது வாஷ்பேசின்களையும் இதர குளியலறைச் சாதனங்களையும் தயாரித்துக் குவிக்கின்றனர். நெல்லிக் குப்பம் ஆலை சர்க்கரை உற்பத்தி செய்கிறது. பாரி ரசாயன உரங்களும் உண்டு. இவை தவிர, பல பொருள்களுக்கு பாரி, விற்பனை உரிமைகளைப் பெற்றுள்ளது.


இத்தகைய நிறுவனத்துக்கு 1970 களில் ஒரு பெரிய சோதனை ஏற்பட்டது என்றால் நம்ப முடிகிறதா? ஆனால் அது உண்மை! நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் அடைந்து கிட்டத்தட்ட திவாலா நிலைக்கே வந்து விட்டது. கம்பெனி நிர்வாகிகள் கையைப் பிசைந்தது ஒருபுறமிருக்க, இந்த நிறுவனத்தில் ஏகப்பட்ட பணத்தை முடக்கியிருந்த அரசாங்க நிதி நிறுவனங்களும் மிகவும் கவலைப்பட்டன. அவற்றுள் ஒன்றான I.D.B.I. தலைவர் ஒரு சந்தர்ப்பத்தில் எம்.வி. அருணாசலத்தைச் சந்தித்த போது திடுமென அவருக்கு பாரி கம்பெனியைக் காப்பாற்ற ஒரு யோசனை தோன்றி விட்டது!

அருணாசலத்தின் முன்னோர்கள் பர்மா மலேயாவில் வட்டிக் கடைகள் நடத்தி வந்தவர்கள். அதை விட்டு விட்டுத் தாய் நாடு திரும்பி அதன் தொழில்வளப் பெருக்கத்துக்கு உதவ வேண்டும் என்று திட்டமிட்டு அதில் பெரும் வெற்றி பெற்றவர்கள். எம்.வி. அருணாசலம் அவர்கள் வழி வந்து இன்று டி. ஐ. குருப் நிறுவனங்கள் பலவற்றைத் திறம்பட நிர்வகித்து வருகிறார். அதுவும் தவிர நெய்வேலி லிக்னைட், மெட்ராஸ் ஃபெர்டிலைசர் போன்ற நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கடமையாற்றியவர். பொதுத் துறையும் கூட்டுத் துறையும் தேவைதான் என்று அங்கீகரித்தவர். எனவே, அருணாசலத்தைப் பாரி கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி செய்து விட்டால் போதும், எல்லாம் சரியாகிவிடும் என்று கணக்குப் போட்டார் அந்த ஐ. டி. பி. ஐ. தலைவர். அருணாசலத்திடம் தமது கருத்தை வெளியிடவும் செய்தார்.

"பொறுப்பை ஏற்கிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை" என்றார் அருணாசலம். "உமது அரசாங்க நிதி நிறுவனத்திடம் உள்ள பாரி கம்பெனி பங்குகளை எனக்கு விற்று விட வேண்டும்; சம்மதமா?"

ஐ. டி. பி. ஐ. மட்டுமல்ல; இதர பல நிதி நிறுவனங்களும் இதற்கு உடன்படத் தயங்கின. பாரி நிறுவனமும் இன்றோ நாளையோ என்றுதான் இழுத்துப் பறித்துக் கொண்டு நின்றது!

அருணாசலம் பங்குகளை விலைக்குக் கேட்டது பாரி கம்பெனியை அப்படியே வளைத்துப் போட்டுவிட வேண்டும் என்ற எண்



பாரி தயாரிப்பு

ணத்தில் அல்ல. 'உடையவன் காற்றுப் பட்டால்தான் எதுவும் உருப்படும்' என்ற பழமொழியை அறிந்தவர் அவர். பாரி கம்பெனியில் தட்டிக் கேட்க ஆளில்லை. உடைமையாளராகப் போனால்தான் இவரால் தட்டிக் கேட்கவும் முடியும்; தட்டிக் கேட்பதற்குப் பலனும் இருக்கும். இந்த நோக்கில்தான் பங்குகளைப் பெற விரும்பினார் அருணாசலம். இதை விளக்கிச் சொல்லியும் சம்பந்தப்பட்டவர்கள் அசைந்து கொடுக்கவில்லை. ஆனால் கவலைப்பட்டுக் கொண்டு மட்டும் இருந்தார்கள்!

பாரி நிறுவனத்தின் பேரதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும்; அதன் பங்குகளில் பதினொரு சதவீதத்தை வைத்திருந்த இரு பிரிட்டிஷ் நிறுவனங்கள் தங்கள் பங்குகளை விற்க விரும்புவதாகத் தெரிவித்தன. உடனே அவற்றை வாங்கிக் கொள்ளுமாறு அருணாசலத்துக்கு ஏகப்பட்ட சிபாரிசுகள்!

நிறுவனம் நிலைக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அருணாசலம் இந்தச் சிபாரிசுகளை ஏற்றார். பங்குகளின் விலை அந்நியச் செலாவணியில் தரப்பட வேண்டும். அப்போது நிதி மந்திரியாக இருந்த ஆர். வி.க்கு விஷயம் எட்டியது. அவருக்கு 'அருணாசலம் சொன்னதைச் செய்து காட்டுவார்; எனவே அந்நியச் செலாவணிக்கு அனுமதி அளிக்கலாம்' என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் தாம் ஏதோ வேண்டியவருக்குச் சலுகை காட்டி விட்டதாக ஆகிவிடப் போகிறதே என்பதால் அமைச்சரவைக் கூட்டத்திலேயே பிரச்னையை வைத்துப் பிரதமர் இந்திரா காந்தியின் நேரடி ஒப்புதலைப் பெற்றார்.

எம். வி. அருணாசலம் பொறுப்பேற்றதும் நிலைமை பிரமிக்கத்தக்க விதமாக மாறியது. தமது சகோதரர் எம். வி. சுப்பையாவை நேரடிப் பொறுப்பில் வைத்தார். அனாவசியச் செலவுகளைக் குறைத்தார். லாபமில்லாத சில துறைகளுக்கு மூடுவிழா நடத்தினார். வேலையில்லாமல் சோம்பி இருந்த பலரை வீட்டுக்கு அனுப்பினார்.

தொழிலாளரிடையே முணுமுணுப்பு எழுந்தது. அருணாசலம், 'சிலர் வீட்டுக்குப் போனால்தான் பலர் வாழலாம்' என்றும் 'யாருமே விடைபெற மறுத்தால் எல்லாருமே மூழ்கிவிட வேண்டியதுதான்' என்றும் எடுத்துரைத்தார். வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களுக்குச் சட்டப்படி முழு நஷ்டஈடுகள் தரப்பட்டன. நீதிமன்றத்திலும் — உச்ச நீதிமன்றம் வரை சென்று — வழக்காடி வெற்றி பெற வேண்டியிருந்தது.

ஆச்சர்யம் என்னவெனில் இத்தனை காரியங்களையும் ஒரு நாள் வேலை நிறுத்தம் கூட இல்லாமல் — ஒரு நாள் உற்பத்தி கூடத் தடைப்படாமல் — அருணாசலமும் சுப்பையாவும் செய்து முடித்ததுதான். இதுகுறித்து வியப்புத் தெரிவித்தபோது, ''முள் மீது காயப் போட்ட சேலையை விருட்டுன்னு இழுக்கக் கூடாது'' என்று மற்றொரு பழமொழியை நினைவூட்டினார் அருணாசலம். 'நாம் உறுதியாக, ஆனால் நியாயமாக நடந்து கொண்டால் தொழிலாளர்களும் நாம் சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள்.''

நாட்களை எண்ணிக் கொண்டிருந்த பாரி கம்பெனி, அருணாசலம் — சுப்பையா நிர்வாகத்தில் நிமிர்ந்து நின்றது மட்டுமல்ல; இளமையே திரும்பிவிட்டது! லாபம் அடையத் தொடங்கிக் கடந்த இரு ஆண்டுகளில் பதினைந்து சதம், முப்பது சதம் என்று பங்குதாரர்களுக்கு லாபத்தில் பங்கும் (டிவிடெண்டு) கொடுத்திருக்கிறது! எதிர்காலவிஸ்தரிப்புத் திட்டங்களை (குறிப்பாக ரசாயன உரம்) ஆலோசித்து வருகிறது.

''புதியதொரு துறையில் புதியதொரு நிறுவனம் ஆரம்பித்து அதனை வெற்றிகரமாக நடத்துவதைவிட, நஷ்டமடைந்து வரும் ஒரு நிறுவனத்தை நிமிரச் செய்வது கஷ்டமல்லவா?''

''ஆமாம்'' என்கிறார் அருணாசலம். ''புதிய நிறுவனம் எனில் ஆக்கபூர்வமான செயல்களில் யோசித்து இறங்கினால் போதும். பழுதுபட்டுப் போன நிறுவனத்திலோ, நடந்த தவறுகளைத் திருத்தவும் வேண்டும், முன்னேறவும் திட்டமிட வேண்டும். இரட்டிப்பு வேலை''

''நீங்கள் எப்போதாவது இவ்வளவு பெரிய பொறுப்பு ஏற்கிறோமே என்று கவலைப்பட்டதுண்டா?''


''தொழில் துறையில் நிறைய அனுபவம் இருந்ததால் கவலை ஏற்படவில்லை. 'பிரச்னைகள் உள்ளன; ஆனால் சரியான முடிவுகளை எடுத்து வெற்றிபெற முடியும்' என்ற நம்பிக்கைதான் இருந்தது.''

''இவ்வளவு பிரயாசைப்பட்டு பாரி கம்பெனியைக் கஷ்டத்திலிருந்து மீட்டதால் டி. ஐ. குரூப் நிறுவனங்களை விட உங்கள் உள்ளத்தில் பாரி கம்பெனி ஒரு தனி இடம் — சிறப்பிடம் — பெற்றிருக்குமே?''

அருணாசலம் அவருக்கே உரிய மென்மையுடன் உறுதியாகச் சிரிக்கிறார். ''எல்லாமே நம்ம பிள்ளைகள்தான். டி. ஐ. நிறுவனமானாலும் சரி, பாரி நிறுவனமானாலும் சரி, அவற்றில் பணியாற்றுவோர் நலன் கருதியும் நாட்டுக்குச் செய்யும் கடமையாகவும் எண்ணித்தான் நான் செயலாற்ற வேண்டும். பற்றுதல் வைத்தால் எல்லாமே கெட்டுப் போகும். தாமரை இலைநீர் போலப் பட்டும் படாமலும் இருப்பவன்தான் சிறந்த நிர்வாகியாக விளங்க முடியும்.''

— வி. கோபாலன்; கி. ராஜேந்திரன்

புகைப்படம்: **யோகா**



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ.கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணுக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.



மீண்டும் பிரகாசிக்குமா சென்னைப் பல்கலைக்கழகம்?

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டு காலப் பணி முடிந்ததும் தமது பயாலஜி ஆராய்ச்சியைத் தொடர ஆர்வமாக இருந்தார் டாக்டர் ஞானம். ஆனால் அவர் சற்றும் எதிர்பாராத விதமாகச் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பொறுப்பு வந்து சேர்ந்தது. சீர்காழியில்பிறந்துசென்னையிலும், நியூயார்க்கிலும் படித்தவர் இவர். சென்னைப் பல்கலைக் கழக விருந்தினர் மாளிகையில் ஞானத்தைச் சந்தித்தோம்:

நிருபர்: புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் 'இமேஜ்' சமீபகாலமாய்ப் பாதிக்கப்பட்டு வருகிறதே?

ஞானம்: கல்வித் தரத்தைப் பொறுத்தவரை எந்தக் குறைவும் ஏற்படவில்லை. மாறாக உயர்ந்தே வருகிறது. பல்கலைக் கழகத்தில் நடக்கும் சில சிறு தவறுகள் பத்திரிகைகளால் மிகவும் பெரிதுபடுத்தப்படுகின்றன.

நிருபர்: கல்வித் தரம் குறையவில்லையெனில் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். தேர்வுப் பட்டியலில் தமிழக மாணவர் தேர்வுச் சதவீதம் குறைந்து கொண்டே வருகிறதே! ஏன்?

ஞானம்: இந்தியாவின் மற்ற பல்கலைக் கழகங்களின் கல்வித் தரமும் உயர்ந்துள்ளது. அதனால் இப்போது, முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் போட்டி கடுமையாய் இருக்கிறது. தவிர, டெல்லி போன்ற இடங்களில் ஐ. ஏ. எஸ். பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்ய நிறையத் தனியார் பயிற்சிக் கூடங்கள் உள்ளன. இந்த வசதி சென்னையில் போதிய அளவில் இல்லை. இதற்கு யூனிவர்சிடி ஒன்றும் செய்ய முடியாதே! இதையும் தவிர, தமிழக மாணவர்களில், நிர்வாகப் பொறுப்பு ஏற்பதை விட, டெக்னிகலாய்ப் படித்து முன்னேற விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருவதையும் ஒரு காரணமாய்ச் சொல்லலாம்.

நிருபர்: பல்கலைக் கழகத்தில் ஊழல்கள் நடந்ததைவிட, அது பத்திரிகைகளில் வந்தது தான் தவறு என்கிறீர்களா?

ஞானம்: அந்த ஊழலைக் கண்டுபிடித்தவர்கள் பத்திரிகைக்காரர்கள் இல்லை. பல்கலைக் கழக ஆடிட்டின் போது கண்டுபிடிக்கப்பட்டதுதான். அதுபற்றி நடவடிக்கை எடுத்து, தவறு செய்தவர்களைத் தண்டிப்பது பல்கலைக் கழகத்தின் கடமை. அந்தக் கடமையிலிருந்து பல்கலைக் கழகம் தவறினால் குற்றம் சொல்லலாம்.

நிருபர்: பி. காம்., பரீட்சை எழுதியவருக்கு எம்.காம். மார்க்ஷீட் தரப்பட்டது போன்ற தவறுகள் ஏன் நிகழ்கின்றன, அலட்சியப் போக்குத்தானே இதற்குக் காரணம்?

ஞானம்: ஒரு சீசனுக்கு மொத்தமாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மாணவர்கள் சுமார் பதினைந்து லட்சம் பேப்பர்கள் எழுதுகிறார்கள். ஆங்காங்கே ஒருசில தவறுகள் நிகழ்வது சகஜம். ஆனால் அதை நான் இங்கே நியாயப்படுத்த முயலவில்லை. தவறுகள் நிகழ்வதைக் குறைக்கலாமேயொழிய, முற்றிலும் ஒழிப்பது என்பது இயலாத காரியம்.

நிருபர்: பல்கலைக் கழகத்தின் நிதி நிலைமை இப்போது எப்படி இருக்கிறது?

ஞானம்: இப்போது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிடும் போதே, நிதிநிலைமை மோசமாக என்ன காரணம் என்றும் நான் கூற விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தின் வருமானத்தில் சுமார் எண்பது சதவீதம், ஆசிரியர்கள் சம்பளத்துக்கே போய் விடுகிறது. மீதியைக் கொண்டு, புதிய கட்டடங்கள், புதிய படிப்புத் துறைகள் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. மாணவர்கள் கட்டும் சம்பளம் என்பது மிக மிகக் குறைவு. தேர்வுக் கட்டணமும் அப்படியே. பத்து வருடங்களுக்குமுன் ஒரு பேப்பர் திருத்த அரை ரூபாய் கொடுத்தால், இன்று ஐந்து ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. வருவாயை அதிகரிக்க முடியாத போது, செலவு உயர்ந்து கொண்டே இருந்தால் நிலைமை மோசமாகவே செய்யும். மத்திய அரசாங்கம், இந்தியாவெங்குமுள்ள சுமார் 140 பல்கலைக் கழகங்களுக்கும் தரும் மானியத் தொகை, பதினைந்து மத்தியப் பல்கலைக் கழகங்களுக்குத் தரப்படும் மானியத்தை விடக் குறைவு! எனவேதான் பல்கலைக் கழகம் என்பது அதன் கீழுள்ள கல்லூரிகளின் கல்வித் தர நிர்ணயம் செய்யும் அமைப்பாகவே பெரும்பாலும் இயங்க நேர்கிறது.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

படம்: யோகா

தனித்தனியாக அழைத்துச் சாடியதுபோல்...

வட்டமேஜை

* மேலாண்மை பொன்னுச்சாமியின் 'பூக்காத மாலே' சிறுகதை எந்தவித ஜிகினு வேலைகளும் செய்யப்படாத சிறந்த கதையாகும். யதார்த்தமான பார்வையில் படைக்கப்பட்டிருக்கும் 'ராசாத்தி' நெஞ்சை உருக்குகின்முள். இதுபோல் நினைவில் நிற்கக் கூடிய கதைகளை வெளியிட்டு வரும் கல்கிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

பையூர். இரா. சேகர்.

* 'நேற்று — இன்று' ஆர். எம். வீ — ஜானகி பற்றிய கார்ட்டூன் அட்டகாசம்; சிவாஜியின் சாமியாட்டம், என். டி. ஆர்., வீரமணி, ஜானகி தீப தூப ஆராதனை, உடுக்கை வெகு ஜோர்! அ. தி. மு. க. கோஷ்டிக் கொள்ளை கார்ட்டூன் அமர்க்களம்!

புதுக்கோட்டை. — 1. ஏ. எஸ். மாரியப்பன்.

* 'ஸ்பெயின் தேசத்து 'அட்டேன்ஷன்' திரைவிழாப் படக்கதை நெஞ்சில் இடம் பெற்றுவிட்டது. கர்னல் ராம்சிங் ஒரு சிறந்த பாத்திரப் படைப்பு; என் பள்ளி நாட்களை நினைவுபடுத்தியது!

கோவை — 42. அம்புஜம் ராகவன்.

* 'கடவுள் எனக்கு விமானம் ஓட்டும் போது கருணை காட்டினர். அதற்குப் பிரதி உபகாரமாக நான் விலங்குகளின் மீது கருணை காட்டுகிறேன்' என்று காப்டன் சுந்தரம் கூறியதைப் படிக்கும் போது, நாட்டில் இப்படியும் ஒரு மனிதரா! என்று ஆச்சரியப்படும்படியிருக்கிறது.

லால்குடி. — 1. எம். இராஜேந்திரன்.

* மனிதருக்கு மனிதரே இரங்காத இக்காலத்தில், ஜீவகாருண்யத்திற்கு அற்புதமான எடுத்துக்காட்டாகப் பிராணிகளிடம் அன்பு செலுத்தும், காப்டன் சுந்தரம் அவர்களின் பணி உன்னதமானது.

கோவை. உமார்த்தி.

* 'பூக்காத மாலே' என்ற சிறுகதையை விஷுவலாக ஓவியத்திலேயும் காட்டிவிட்ட ஓவியர் மருது அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மயிலாடுதுறை. ஜி. கிர்த்திவாசன்.

* 'ஐந்து நட்சத்திர ஓட்டல்களால் நமக்கென்ன நன்மை?' என்றுதான் நானும் நினைத்திருந்தேன். கல்கியில் வெளியான கட்டுரை மூலம் என்னுடைய அறியாமை என்னும் இருளைப் போக்கிவிட்டீர்கள்; மிக்க நன்றி!

செம்பொன்னூர்கோயில். எஸ். வி. ஏ. பிரகாஷ்.

* அன்றாட வாழ்வில் ஆஸ்துமாவினால், அவதிப்படுவோருக்கு ஆறுதலாக ஒரு புத்துணர்வைத் தந்துள்ளீர்கள்! நாங்கள் வேண்டுவதெல்லாம் இது போன்று வாரம் ஒரு புத்துணர்ச்சி தரும் கட்டுரையைக் 'கல்கி' வழங்க வேண்டும் என்பதுதான்!

குத்தாலம். எஸ். ராஜா.

* 'மென்மைக்குள் வன்மை' சிறுகதை யதார்த்தமான முறையில் வடிக்கப்பட்டிருக்கிறது. பயந்த சுபாவ முன்னவர்களிடம் நடச்சித்தும் இல்லையென முடிவு செய்வது எவ்வளவு பேதைமை என்பதை இச்சிறு கதை நன்முக விளக்குகிறது. எழுதிய ராஜ்கோகுலுக்கும் வெளியிட்ட கல்கிக்கும் பாராட்டுக்கள்.

மேல்பட்டி. — 5. எஸ். மாறன்.

* நூற்றாண்டு விழாக் காணும் தேசியக் கவிஞர் நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையை நானும் இது நாள் வரையில் தேசியக் கவிஞராக மட்டும்தான் நினைத்து வந்தேன். ஆனால் இப்போது கல்கியில் வந்த கட்டுரையைப் படித்த பின்புதான் அவர் ஓர் ஓவியரும் கூட என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சென்னை — 33. எஸ். ராம்கோபால்.

* சரித்திர, சமூக நாவல்களை எழுதிச் சரித்திரம் படைத்த அகிலனுக்குக் கல்கியின் அஞ்சலி நெஞ்சை நெகிழ வைத்தது. எழுத்தாளரை ஒவ்வொருவராக எடுத்துக் கொள்கிருயே இறைவா! இது முறையோ?

வடுவூர். எஸ். கண்ணன்.

* தாங்கள் தீட்டிய தலையங்கத்தைப் படித்துவிட்டு வரிக்கு வரி பாராட்டினேன். காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்துச் சாடியது போல் சூடுபறக்க (மனம் நொந்து) எழுதியிருப்பது நன்கு புலப்பட்டது.

கும்பகோணம். சக்கரபாணி பட்டாச்சார்.

* பாரம்பரியம் மிக்க கட்சியான காங்கிரஸ், கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப் போன கதையாக மாறியிருப்பதை, உண்மையான ஆதங்கத்துடன் சரியான தருணத்தில் எடுத்துரைத்துத் தீட்டியிருக்கும் தலையங்கம் மிகவும் அருமை. செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்துவிடக் கூடாதே என்பதுதான் கவலை.

திருச்சி — 16. எஸ். ராஜகோபால்.

* தமது இமேஜைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் 'நான் ஒன்றும் கவர்ந்திழுக்கும் ஹீரோ இல்லை; என்னைச் சுற்றிக் கல்லூரிப் பெண்கள் ஓடி வருவதுமில்லை. நான் ஏறி இறங்காத சினிமாக் கம்பெனி கிடையாது' என்றெல்லாம் தம் சிறப்புப் பேட்டியில் மனம் திறந்து வெளிப்படையாகப் பேசித் தம் பெயர்ப் பொருத்தத்தை நிரூபித்திருக்கும் 'சத்யராஜ்' உண்மையிலேயே மிகவும் வித்தியாசமானவர்தான்! பாராட்டுக்கள்!

திருநின்றவூர். வெ. பாண்டுரங்கன்.

* திரைப்படங்களில் எப்படி எந்தவித அலட்டல்களும், மிகையும் இல்லாமல் வெகு சாதாரணமாக நடிக்கிருரோ, அதே போலப் பேட்டியிலும் எவ்விதச் சவால்களும், கிசுகிசுக்களும் சீண்டல்களும் இல்லாமல் வெகு சாதாரணமாகவே பதில்களை அளித்திருக்கிருர். வெல்டன் சத்யராஜ்.

சிங்காரப்பேட்டை. என். சங்கர்.

'ஜே' அணியில் திடமதி

திடமதி: 'ஆட்சிக்கு வந்து பத்து வருஷங்கள் ஆகியும் என்ன சாதனை செய்தீர்கள்?' என்று கேட்பவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'பத்து வருஷங்கள் ஆட்சியில் இருப்பதே பெரிய சாதனையல்லவா' என்று கேட்க விரும்புகிறேன்!

— எஸ். சுரேஷ்குமார், விருதுநகர்.


தொண்டர்: தலைவரே! நீங்க எந்த 'J' அணியைச் சேர்ந்தவர்னு தோழருங்க கேக்கறுங்க; என்ன சொல்லட்டும்?

திடமதி: நான் எப்பவுமே ஒரே 'J' அணியில் இருக்கிறவன்தான்; மாறுவதே கிடையாது!

தொண்டர்: அது எந்த J அணி தலைவரே?

திடமதி: ஜெயிக்கும் அணி!


— நூர், மதுரை.



தொண்டர்: 'உங்க ஆட்சியில் விலைவாசியெல்லாம் பத்து மடங்கு உசந்துடுச்சு; உங்களுக்கு ஏன் வோட்டுப் போடணும்'னு ஜனங்க கேக்கறுங்க, தலைவரே!

திடமதி: ஆகா! அது நமக்குத் தெரியாதா? 'அதனுலதான் போன தேர்தல்ல வோட்டுக்குப் பத்து ரூபாய் கொடுத்த இடத்திலே இன்னைக்கு நூறு ரூபாய் கொடுக்கத் தயாராயிருக்கோம்'னு பதில் சொல்ல வேண்டியதுதானே!

— அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.



தளபதி திடமதி:

நண்பர்: ஏங்க, தேர்தல்ல தோத்துட்டீங்களே, பதவி நாற்காலி பறிபோயிடுமே!

திடமதி: அதுதான் நடக்காது!

நண்பர்: அதெப்படி?

திடமதி: தேர்தல் முடிவு வர்றதுக்கு முந்தியே அந்த நாற்காலியை வீட்டிலே கொண்டு போய் வைச்சுக்கிட்டேனே!

— அ. சா. குருசாமி, திருவாரூர்.



திடமதி: 'தேர்தலுக்குப் பிறகு நான் ஏன் தொகுதிப் பக்கமே வரவில்லை' என்று கேட்பவர்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். சரியான சாலைகள், பாலங்கள், பஸ் போக்குவரத்து போன்ற எந்த வசதியும் இல்லாத நிலையில் நான் தொகுதிப் பக்கம் எப்படி வர முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்!

— பி. ஆர். சுவாமி, சென்னை — 28.

(திருவாரூரைச் சேர்ந்த அ. சா. குருசாமியின் ஜோக்கு இரண்டாவது முறையாக இந்த இதழில் வெளியாகியுள்ளது. எனவே, அவருக்குப் பரிசுத் தொகை ரூ. 50 ஆக இரட்டிப்பாகியிருக்கிறது. அவருக்கு நமது வாழ்த்துக்கள்!)

ஜெயலலிதா உங்களுடைய ஏறு எண்ணிருறாரே?

* ஓ. ராஜேந்திரன், குருவித்துறை.

? சமீபத்திய மத்திய மந்திரிசபை மாற்றம் எதைக் காட்டுகிறது?

! 'எதனைத் தின்றால் பித்தம் தெளியும்' என்று புரியாமல் ராஜீவ் தவிப்பதைத்தான் உணர்த்துகிறது. மத்திய அமைச்சரை மாநில முதல்வராகவும் மாநில முதல்வரை மத்திய அமைச்சராகவும் இடம் மாற்றிக் கொண்டிருந்தால் பிரச்னைகள் தீர்ந்து விடாது. 37 மாதங்களில் 23 தடவை அமைச்சரவையை மாற்றியிருக்கிறார் ராஜீவ். இன்னும் எத்தனை தடவை மாற்றினாலும் பயனிராது. அவர் நேர்மையாளரைப் போற்ற வேண்டும். தாமும் நேர்மையாளராக மாற வேண்டும். நல்ல கொள்கைகளை வகுத்துத் தர நாட்டிலுள்ள பேரறிஞர்களை நாட வேண்டும். அவர்கள் கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். தேசம் முன்னேற இதுவே வழி.

* சி. சண்முகம், சீர்காழி.

? 'பொதுக் கூட்ட மேடைகளில் உள்ள நாற்காலிகளில் உட்கார மாட்டேன்! தரையிலேயே அமர்ந்து பேசுவேன்' என்று ஆந்திர முதல்வர் ராமராவ் கூறியிருக்கிறாரே?

! நல்ல கொள்கைகளை மக்கள் முன் வைத்து ஆதரவு கேட்கும் வழக்கம் படிப்படியாகக் குறைந்து, போட்டி போட்டுக் கொண்டு ஸ்டண்ட் அடிப்பதே அரசியல்வாதிகளுக்கு முக்கியமாகப் போய்விட்டது.

* த. இராஜசேகரன், குறிஞ்சிப்பாடி.

? 'ஹெக்டேயை விரைவில் சந்திப்பேன்' என்று ஜெயலலிதா கூறியிருப்பது பற்றி?

! ஹெக்டேயை யார் வேண்டுமானாலும் குறிப்பிட்ட நேரத்தில் சென்று நேரடியாகச் சந்தித்துப் பேசலாம். அதில் சிரமம் ஏதும் இல்லை. ஆனால் என்ன சாதிக்கப் போகிறார் ஜெ? இதுவும் இன்னொரு ஸ்டண்ட்தான்!

* துரை. ராஜேந்திரன், திருப்பூர்.

? 'தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என்று பண்ருட்டி ராமச்சந்திரன் அறிவித்திருக்கிறாரே?

! மந்திரியான பிறகு தேர்தலைச் சந்தித்துக் கொள்ளலாம் என்ற துணிவும், வன்னியர் சங்கத்தினரின் போக்கினால் ஏற்பட்டுள்ள ஜாக்கிரதை உணர்வும் ஒரு தியாகத்தைச் செய்வது போல் காட்டிக் கொள்ள அவருக்கு உதவியுள்ளன. தவிர, அதிகாரம் என்பது மந்திரி சபைக்கு வெளியேயும் இருக்கலாம் என்பதும் ஏற்கெனவே பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

* ஆர். கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்.

? சமீபத்தில் தங்களை வியப்படையச் செய்த விஷயம்?

! வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்ற சமயம்... ஓர் அரசுப் பள்ளியில் குழந்தைகள் சத்துணவு சாப்பிட ஆரம்பித்தார்கள். அதில் எந்தக் குழந்தையும் கைகழுவிக் கொண்டு சாப்பிடுவதாகத் தெரியாததால் ஒரு குழந்தையிடம் சென்று அதுபற்றிக் கேட்டபோது, 'சாப்பிட்ட பிறகு தானே கைகழுவ வேண்டும்...!' என்றது. அடிப்படைச் சுகாதாரத்தைக் கூடவா ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கக் கூடாது? நொந்து போனேன்.

* ரேவதிப்ரியன், ஈரோடு — 1.

? புதிய கவர்னர் பற்றி?

! 1. பி. சி. அலெக்ஸாண்டர் விமான நிலையத்திலிருந்து வரும்போது, ஏதோ பிரதமரே வருவதுபோல் வாகனப் போக்குவரத்து அனைத்தும் நிறுத்தப்பட்டது.

2. கவர்னர் பதவி என்பது ஒரு நியமனப் பதவி. இந்நிலையில் பொது இடமான ராஜாஜி மண்டபத்தில் விழா நடத்தி அவர் பதவி ஏற்றது. (இனி ஒவ்வொரு தாசில்தாரும் கூட இது மாதிரி பதவி ஏற்றால் எப்படி ஆட்சேபணை செய்ய முடியும்?)

3. ஒரு ஜனநாயக நாட்டில் ஜனாதிபதி ஆட்சி என்பது தவிர்க்க முடியாத ஒரு விபத்துப் போல் நிகழ்கிற ஒன்று. இந்நிலையில் கவர்னரை வரவேற்பு விழா நடத்தி வரவேற்றது...

4. இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிற மாதிரி, 'Our beloved new Governor Mr. P. C. Alexander arriving on 17.2.88 on behalf of

* தவிக்கிறார்



* மோசமான ஆரம்பங்கள்





* எதிர்த்தும் கூட...

* யோகமா?





* பயங்கரவாதத்துக்குப் பலி!

நீங்கள் கேட்டவை

— தராசு

Selvi Jayalalitha என்று ஜெயலலிதா கோஷ்டியினர் போஸ்டர் அடித்து ஒட்டி கவர்னர் பதவியையே அசிங்கப்படுத்தியது... — இவை எல்லாமே மோசமான ஆரம்பங்களாகத்தான் இருக்கின்றன.

* அ. ஜமால் மொய்தீன், சென்னை — 52.

? தற்பொழுதெல்லாம் பத்திரிகைகளின் கேள்வி — பதில் மற்றும் சிரிப்புத் துணுக்கு ஆகியவற்றில் இந்தியத் தொலைக்காட்சி கேலிக்குள்ளாவதைப் பற்றி?

! முன்பு எப்போதோ எடுத்த ஒரு பேட்டியை அண்மையில், 'அமரர் அகிலன் அவர்களுடன் பேட்டி' என்று அறிவித்து ஒளிபரப்பினார்களே, இப்படிப்பட்ட அஜாக்கிரதைகளை மெச்சிக் கொள்ளவா முடியும்?

* சம்சுதீன், சென்னை — 4.

? விஜயகுமாரரணதுங்க படுகொலை செய்யப்பட்டது பற்றி...?

! அவர் சினிமா நடிகர் என்பதோ சிறிமாவோவின் மாப்பிள்ளை என்பதோ முக்கியமல்ல. தமிழ் பயங்கரவாதிகள் ஒரு பக்கமும் சிங்கள வெறியர்கள் மறு பக்கமும் இலங்கையைப் படுகாயப் படுத்திக் கொண்டிருக்கும்போது, தமிழர் — சிங்களவரிடையே ஒற்றுமை என்ற களிம்பைப் பூசி நாட்டின் ரணங்களை ஆற்ற முயன்றார். இதற்குச் சிங்கள இடதுசாரிகளையும் தமிழ்ப் போராளிகளையும் இணைத்து ஒரு புதிய அரசியல் கட்சியை உருவாக்க முடியும் என்று கனவு கண்டார். இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தில் குறைகள் இருந்தாலும் நாட்டுக்கு அமைதி திரும்ப அது ஒன்றே வழி என்று நம்பினார். அமைதி திரும்புவதை விரும்பாதவர்கள் பயங்கரவாத அரக்கனுக்கு அவரைப் பலிகொடுத்து விட்டனர்.

* எஸ். சுந்தரராஜ், பாளையங்கோட்டை.

? 'எம். ஜி. ஆர். மறைந்தவுடன், உலகம் பழித்தாலும் பரவாயில்லை; உடன்கட்டை ஏறிவிடலாம் என்று நினைத்தேன்' என ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

! 'இதை முன்பே கூறியிருந்தால் ஒரு வேளை எம். ஜி. ஆர். உடலுக்கு எரியூட்டியிருப்பார்களோ என்னவோ?' என்று வெறுப்புடன் எண்ணக் கூடிய அளவுக்கு ஒரு மட்டரகமான ஸ்டண்ட் என்பதுடன் சட்டத்துக்குப் புறம்பான பேச்சும் கூட.

* தகவை. வீரபாண்டியன், தகட்டூர்.

? பத்தாண்டு காலம் முதல்வராக இருந்து தங்குவதற்குக் கூட வீடு இல்லாமல் எளிமையாக வாழ்ந்து பதவியிழந்த பின் கட்சி அலுவலகத்தில் குடியேறியுள்ள நிருபன் சக்கரவர்த்தி பற்றி...?

! திரிபுராவின் முன்னாள் முதல்வரான அவர் கட்சி அலுவலகத்தில் ஒரே ஓர் அறையை மட்டும் எடுத்துக் கொண்டு குடிபோகும் போது இரண்டேயிரண்டு சூட்கேஸ்களில் தம்முடைய உடைமைகளை எடுத்துச் சென்று விட்டாராம். பத்தாண்டு காலம் முதல்வராய் இருந்தவரின் உடைமைகள் அவ்வளவு தான்! இப்படி ஒன்றிரண்டு பேர் இன்னும் இந்தியாவில் இருப்பதால்தான் கொஞ்சமாவது மழை பெய்கிறது என்றே நினைக்கத் தோன்றுகிறது.

* பாக்யமுத்து, திருச்சி — 20.*


? இங்கிலாந்து பார்லிமெண்டில் நடக்கும் விவாதங்களை டி. வி. யில் நேரடியாக ஒளிபரப்பச் சட்டம் நிறைவேறியது பற்றி?

! அதைப் பிரதமர் தாட்சர் எதிர்த்தும் கூட மற்ற உறுப்பினர்கள் நிறைவேற்றியிருக்கிறார்களே, அதுதான் ஜனநாயகம். அதனால்தான் இங்கிலாந்தை, 'ஜனநாயகத்தின் தொட்டில்' என்று வர்ணிக்கிறார்கள். நாமும் இங்கே ஜனநாயக நாடு என்று உதட்டளவில் சொல்லிக் கொண்டால் போதாது; எம். எல். ஏக்களும், எம். பிக்களும் மனச்சாட்சிப்படி உண்மையாக, நேர்மையாக, சுதந்திரமாக நடந்து காட்ட வேண்டும். ஹூம்... என் பெருமூச்சு காதில் விழுகிறதா?

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

பாக்யமுத்து,
Q-6, செங்குளம் காலனி,
திருச்சி — 620 020.

தலைமைச் செயலருக்குத் தாமதம் பிடிக்காது!



சுசீலாவுடன் தலைமைச் செயலர்.

"என் மாமனார் ஒரு கால்நடை மருத்துவர். அவர் அனந்தப்பூரில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, பாபு ராஜேந்திரப் பிரசாத் அனந்தப்பூருக்கு வந்த தினத்தில் (ஏப்ரல் 12, 1935) பிறந்ததால், தம் மகனும் அவரைப் போலவே அறிவாளியாய் விளங்க வேண்டும் என்கிற ஆர்வத்தில் இவருக்கும் ராஜேந்திரன் என்று பெயர் சூட்டினாராம்" என்று சொல்கிறார் திருமதி சுசீலா ராஜேந்திரன். தமிழகத்தின் புதிய தலைமைச் செயலரின் மனைவி.

"என் கணவர் மிகவும் பிரில்லியண்ட். எஸ். எஸ். எல். சி. முடிக்கும் போது வயது பதின்மூன்று. வயது போதாது என்று கல்லூரியில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஒரு வருடம் இந்தி, டைப்ரைட்டிங், எல்லாம் கற்றுக் கொண்டார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் பி. எஸ். ஸி. ஆனர்ஸ். பரீட்சைக்குச் சில நாட்கள் முன்பாகத் தந்தையை இழக்க நேர்ந்து விட்டது. ஆனாலும் மனம் தளராமல் பரீட்சை எழுதிக் கல்லூரியில் முதல் ராங்க் பெற்றார்.

"ஸ்டேட் பாங்க்கில் கிடைத்த வேலையை ஏற்றுக் கொள்ளாமல், தம் தந்தையின் ஆசைப்படி ஐ. ஏ. எஸ். எழுதினார். அகில இந்தியாவில் இரண்டாம் இடமும், தமிழகத்தில் முதல் இடமும் பெற்றுத் தேறினார்.

"பயிற்சிக்குப் பின் தஞ்சையில் உதவிக் கலெக்டராய் நியமிக்கப்பட்டார். அப்போதைய, தஞ்சைக் கலெக்டர் லோகநாத முதலியார் இவரது சுறுசுறுப்பையும், திறமையையும் பாராட்டி, முதலமைச்சராய் இருந்த காமராஜரிடம், இவரைப் பற்றிப் பேச, அதை ஞாபகம் வைத்திருந்து, சப்-கலெக்டராய்ப் பதவி உயர்வு தரப்பட வேண்டிய காலகட்டத்தில் தம் தொகுதியான சிவகாசியில் போட்டாராம் காமராஜ்.

"மறக்க முடியாத சம்பவங்கள் இரண்டு கூறலாம். திருநெல்வேலியில் துணை கலெக்டராய்ப் பணியாற்றி விட்டு, மாற்றலாகிப் புறப்பட்ட போது, நூற்றுக்கணக்கில் மக்கள் ரயில் நிலையத்தில் கூடிக் கண்ணீர் விட்டு வழியனுப்பி வைத்தது, ஒன்று. இன்னொன்று, தனுஷ்கோடி வெள்ளத்தின் போது கிறிஸ்துமஸுக்கு இரண்டு நாட்களுக்கு முன் வீட்டை விட்டுப் புறப்பட்டவர், வெள்ள நிவாரணப் பணிகளில் 'மூழ்கி' விட்டார்! வீட்டிற்கு ஒரு தகவலுமில்லை. அவர் இல்லாமல் பண்டிகையை மகிழ்ச்சியாய்க் கொண்டாட முடியவில்லை. இரண்டு நாட்கள் கழித்துத்தான் வீடு திரும்பினார். ஒவ்வொரு வருட கிறிஸ்துமஸின் போதும் இது நினைவு வரும்.

"எங்களுக்கு இரண்டு பிள்ளைகள். பெண் குழந்தை வேண்டும் என்று எங்களுக்கு ரொம்ப ஆசையாய் இருந்தது. மூன்றாவதாய்ப் பெண் பிறந்தாள். அவளுக்குச் 'சுமங்கலி' என்று பெயர் வைத்தோம். இப்போது மூவரும் நியூயார்க்கில் இருக்கிறார்கள்.

"அலுவலகத்தில், சோம்பேறித்தனம், தாமதம் இதெல்லாம் அவருக்குத் துளியும் பிடிக்காது. வீட்டுக்கு வந்து விட்டால் குழந்தைகளிடம் மிகவும் அன்பாய் இருப்பார். பாடம் சொல்லிக் கொடுப்பார். கணக்குகள் கொடுத்துப் போடச் சொல்லுவார். சரியாய்ப் போட்டால் பாராட்டுவார். நல்ல புத்தகங்கள் நிறைய வாங்கிக் கொடுப்பார். ஆனால் வேறு ஏதாவது செலவு என்றால் யோசித்துத்தான் செய்வார்.


"இரவில் ஒரு மணி வரை விழித்திருந்து வேலை பார்ப்பார். மாலையில் நாங்கள் இருவரும் வாக்கிங் போவோம். அதற்கு நேரமில்லாத தினங்களில், டீ.வி. பார்த்த படியே, உடற்பயிற்சி செய்வார். கால்ஃப் ஆட்டமும், மேற்கத்திய இசையும் ரொம்பப் பிடிக்கும்.

"தினமும் காலை நான்கு இட்லி. காலை அலுவலகம் புறப்படும் போதே மதிய உணவும் கையில் எடுத்துச் சென்று விடுவார். பிற்பகலில் ஹார்லிக்ஸ் ஒரு கப். மாலை வந்ததும் ஒரு கப் டீ. இரவு சப்பாத்தி, பால். உணவு விஷயத்தில் ரொம்பக் கட்டுப்பாடு. மிகவும் பிடித்த நான்-வெஜ் அயிட்டம் மீன். சிகரெட், மதுப் பழக்கம் கிடையாது. சில நாட்களில், இரவில் நானும் அவரும் சீட்டு ஆடுவதுண்டு" என்று ஒரே மூச்சில் கடகடவென்று சொல்லி முடிக்கிறார் தலைமைச் செயலரின் திருமதி.

சந்திப்பு: மௌனஷ்மி

படம்: யோகா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



துடியான வாழ்வுக்கு ஒப்பில்லாத் துணை
ஸ்டே:ப்ரீ பெல்ட்லஸ் ஸானிட்டரி நேப்கின்கள்.
பெல்ட்டு, கயிறு, கச்சு, ஊக்கு, ஊசி எதுவுமே
வேண்டாம். ஈரமுறிஞ்சுவதில் இணையற்றது
ஸ்டே:ப்ரீ. உலர்வில் மாறாத சுகம் எந்த
நேரமும் எனதே. மாதம் எந்த நாளிலும் சுக
லாகவமுடன் இருக்க முடிகிறது என்றால்!

பலத்த திரவப் போக்கு உள்ள நாட்களிலேயோ
நம்பிக்கையோடு நான் உபயோகிப்பது
ஸ்டே:ப்ரீ ஸுப்பர்: காரணம் அது அளவிற்
பெரிதாக இருப்பதால் கூடுதலான பாதுகாப்பு
பத்திரமான உறுதியோடு கிடைக்கிறது எனக்கு.
இப்போது, ஸ்டே:ப்ரீ டியோடரன்ட் டும்
உள்ளதே. ஸ்டே:ப்ரீ டியோடரன்ட் ஸேனிட்டரி
நேப்கின்கள் மாதவிடாயின் வாடையைக்
குறைக்க உறுதுணையாக உள்ளது. ஆகவே
நான் புத்துணர்வுடன் நிலைபெறுவதோடு,
மனம்போல் எதையும் செய்கிறேன்
தன்னம்பிக்கையுடனே.

எனவேதான், நான் ஸ்டே:ப்ரீ
உபயோகிக்கிறேன். என்னை ஜாலியாக வாழ
வைக்கிறது. இது ஓர் அரும்பேறுதானே!

ஸ்டே:ப்ரீ* பாதுகாப்புத் திட்டம்


ரெகுலர் — முழுப் பாதுகாப்பு. பத்திரமான காப்புறுதி.

ஸுப்பர் — பலத்த திரவப் போக்கின் போதும். இரவு முழுமைக்கும் உபயோகிக்கவும் கூடுதலான பாதுகாப்பு.

டியோடரன்ட் — முழுமொத்தப் பாதுகாப்புடனே வாடை நீக்கிய புத்துணர்வு.

உரித்தெடுத்து ஒட்டினால் போதும்

நேப்கினின் மூன்று-பட்டை பசைப் பட்டிகளை, மிக இறுகலான ஜட்டியோடு அழுந்த ஒட்டிவிடுங்கள். அது நகராது, நழுவாது, உரியாது, சரியாது.



OBM 2527 TAM

ஸ்டே:ப்ரீ*... என்றும் போல் நீங்கள் ஓர் சுதந்திரக் சிட்டு.

* ஸ்டே:ப்ரீ என்பது ஜான்ஸன் & ஜான்ஸன் யு.எஸ்.ஏ. டிரேடு மார்க் ஆகும்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்


பண்டை காலத்து கற்காவியம்
இன்றைய லலிதாவின்
பொற்காவியம்
...என்றென்றும் ரம்மியமான
கலைப்படைப்புகள்
Lalitha
லலிதா ஜுவல்லரி மார்ட் பி. லிட்.,
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17.
தொலைபேசி : 445939 / 444413